தமிழரசு

1978 50 காசு

"தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு"

- வறுமையில் வாடும் தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை!
- தமிழ் வரலாறு எழுதுவோர்க்கு ஊக்க உதவி!
- தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சிக்கான புதுத் திட்டங்கள்!
- ◆ சென்னையில் தமிழ்ப் பண்பாட்டு மையம்!
- ◆ மதுரையில் தமிழ் இசைக் கல்லூரி!
- அரசவைக் கவிஞர் நியமனம்!

எங்கும் தமிழ்! எதிலும் தமிழ்!

என்பதே நமது அரசின் இலட்சியம்.
இப்பணியில் வெற்றி குவிக்க
எல்லோரும் பாடுபடுவோம்!

இந்த இதழில்....

இந்த இதழ் கல்விச் சிறப்பிதழாக மலர்கிறது. கல்வித் துறையில் புகழ் பெற்ற வல்லுநர்களின் கட்டுரைகள் பல இவ்விதழில் இடம் பெற்றுள்ளன. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இளந்தளிர்களான மாணவச் சமுதாயத்துக்கு வழங்கியுள்ள அறிவுரை, மாணவர்களின் எதிர்கால நல்வாழ்வுக்கு நல்லதொரு பாதை அமைத்துக் கொடுக்கிறது. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கட்டுரை இவ்விதழுக்குத் தனிச் சிறப்புச் செய்கிறது. எத்தனையோ போராட்டங்களை, இடர்ப்பாடுகளை, பொறுப்பேற்றுக் கொண்டுள்ள குறுகிய காலத்திலேயே சமாளிக்க வேண்டிய நிலைக்கு அரசு தள்ளப்பட்டாலும், அத்தகைய சூழ்நிலைகளில் அரசின் அணுகுமுறை, எழுப்பப்படும் பல பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்த்து வைக்கப் பேருதவியாக அமைந்துள்ளது என்பதை யாரும் மறுக்கமுடியாது. அண்மையில் போக்குவரத்துத்துறையில் ஏற்பட்ட சிக்கல்கள் — போராட்ட மிரட்டல்கள் — எப்படிச் சுமுகமாகத் தீர்த்து வைக்கப்பட்டன என்பதையும், போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு அரசு வழங்கியுள்ள சலுகைகளையும் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் தெளிவாக விளக்கியுள்ளார்கள்.

சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர், மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர், கல்வித் துறைச் செயலாளர், கல்லூரிக் கல்வி இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்குநர், தொழிற் கல்வி இயக்குநர், மற்றும் பலருடைய கட்டுரைகள், இவ்விதழை முழுக்க முழுக்கக் கல்விச் சிறப்பிதழாகவே மலரச் செய்துள்ளன.

சொல்லவந்த உணர்ச்சிகளுக்கு ஏற்பச் சொற்களைத் தேர்ந்தெடுத்து நடமாட விடுவதில் பேரறிஞர் அண்ணா பெற்றிருந்த சொல்லாட்சித் திறமையை 'அண்ணா எனும் இலக்கியவாதி' தொடர் கட்டுரை படம் பிடித்துக் காட்டுகிறது.

பாவேந்தர் பாரதிதாசன் ஓவியப் போட்டிக்கு 80 ஓவியங்கள் வரப் பெற்றன. அப்போட்டியில் முதல் மூன்று பரிசு பெற்ற ஓவியங்களும், ஆறுதல் பரிசு பெற்ற ஓவியமும் இவ்விதழின் மையப் பக்கங்களை அலங்கரிக்கின்றன.

சூலை முதல் நாள் இதழ், தமிழக அரசின் ஓராண்டுச் சாதனை மலராக வெளிவர இருக்கிறது.

தமிழரசு

மலர் : 8 இதழ் : 23

1 - 6 - 1978

உள்ளே

	பக்க எண்
இளந்தளிர்களே எதிர்காலச் செல்வங்கள்	3
மனித சக்தி–கல்வியின் பங்கு..	4
போக்குவரத்துத் துறையில் நல்லாட்சி நல்கிய நலன்கள்	7
அண்ணா எனும் இலக்கியவாதி	9
தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சி	11
கல்லூரிக் கல்வி	13
கி.பி.2000-ல் பொதுநூலகம்	17
வானொலியில் கல்வி ஒலிபரப்புகள்	22
செந்தமிழ் நாட்டின் சீர்மல்கும் சிங்காரக் கடற்கரைகள் ..	30
தமிழ்நாட்டில் தொழிற் கல்வி	33
அடித்தளத்து மக்கள் அறிவொளி பெற ..	37
கல்வியும் கிராம வளர்ச்சியும்	41
கணிப்பொறி..	44
பள்ளிக் குழந்தைகளின் உடல் நலப் பிரச்சினைகள்	47

அட்டை சொல்லும் செய்தி

எஸ். எஸ். எல். சி. தேர்வில் முதலிடம் பெற்றவர்கள்

இவ்வாண்டு ஏறத்தாழ இரண்டரை இலட்சம் மாணவ மாணவிகள் எழுதிய பதினோராவது வகுப்பு எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் 59.3% மாணவ மாணவிகள் தேர்ச்சி அடைந்துள்ளனர். மாணவர்களை விட மாணவிகள் தேர்ச்சி அதிகம். மாணவிகள் 64.7 சதவிகிதமும், மாணவர்கள் 56.3 சதவிகிதமும் தேர்ச்சி அடைந்துள்ளனர்.

கடந்த சில ஆண்டுகளில் இவ்வாண்டில்தான் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் அதிக அளவாக 59.3% மாணவ மாணவிகள் தேர்ச்சி அடைந்துள்ளனர். கடந்த ஆண்டு தேர்ச்சி பெற்றவர்கள் 55% ஆகும்.

முதலிடம் பெற்ற பின்தங்கிய வகுப்பு மாணவி

இவ்வாண்டு நடைபெற்ற பதினோராம் வகுப்பு பொதுத் தேர்வில் கோவை மாவட்டம் ஈரோடு, கலைமகள் கல்வி நிலையம் பெண்கள் உயர்நிலைப் பள்ளியினைச் சேர்ந்த செல்வி எஸ். சந்திரலேகா என்ற மாணவி தமிழகத்திலேயே அதிக மதிப் பெண்கள் பெற்று முதல் மாணவி என்ற பேறு பெற்றுள்ளார். இவருடைய படம்தான் இந்த இதழின் முன்பக்க அட்டையில் வெளியாகியுள்ளது.

செல்வி சந்திரலேகா எடுத்த மதிப்பெண்கள் 500-க்கு 467 ஆகும். (93.4%) எஸ்.எஸ்.எல்.சி. பதினோராம் வகுப்புத் தேர்வில் மொத்த மதிப்பெண்கள் 500 தான்.

இரண்டாவது இடம் பெற்ற மாணவர்

திருநெல்வேலி மாவட்டம் தூத்துக்குடியைச் சேர்ந்த புனித பிரான்சியர் சேவியர் உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த செல்வன் எஸ். சுபாகர் என்ற மாணவன் 500க்கு 459 மதிப்பெண்கள் பெற்று தமிழகத்திலேயே இரண்டாவது மாணவர் என்ற பேறு பெற்றுள்ளார். (91.8%) இவருடைய படம்தான் பின்பக்க அட்டையில் வெளியாகியுள்ளது.

முதலாவது, இரண்டாவது இடங்களைப் பெற்ற மாணவியும், மாணவனும் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

இரண்டு இடங்களைப் பெற்ற மாணவியும் மாணவனும் தமிழ் மூலமாகவே (Tamil Medium) கல்வி பெற்றனர். **

முதல்வரின் முழக்கம்

இளந்தளிர்களே எதிர்காலச் செல்வங்கள்

இளம் தளிர்களான குழந்தைகளின் உள்ளத்தில் ஆரம்ப காலத்திலேயே நல்ல கல்வியைப் பதிய வைத்தால்தான் அவர்களின் எதிர்கால வாழ்க்கை ஒளிமயமாக அமையும்.

குழந்தைகளிடம் ஒழுங்கை — கட்டுப்பாட்டைக் காணுகிற நேரத்தில் அந்தக் குழந்தைகளின் பெற்றோர்களுக்கு எவ்வளவு பூரிப்பு ஏற்படும்!

நாட்டின் எதிர்காலச் செல்வங்கள் இந்த இளம் தளிர்களே! இங்கே பேசியவர்கள், மாணவர்களை மலர்கள் என்றார்கள்.

இந்த நாடு பல்வேறு மலர்களைக் கொண்ட பல்வேறு மணம் பரப்புகின்ற தோட்டமாக அமைந்திருக்கிறது.

பல்வேறு மதத்தைச் சேர்ந்த இளம் தளிர்களிடத்தில் 'எல்லோரும் ஓர் குலம்; எல்லோரும் ஓர் நிறை' என்ற உணர்வை வளர்க்க வேண்டும்.

பிஞ்சு உள்ளங்களில் உயர்வு, தாழ்வு என்ற எண்ணங்கள் ஏற்படாமல் ஆசிரியர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும். இங்கே இருக்கின்ற இளம் தளிர்களையெல்லாம் பார்க்கும்போது, நாட்டின் எதிர்கால வளர்ச்சி குறித்து என் உள்ளத்தில் நம்பிக்கையும், மகிழ்ச்சியும் ஏற்படுகிறது.

இங்கே மாணவர்களுக்குப் பரிசு வழங்கப்பட்டது. எதற்கெல்லாம் பரிசு வழங்கினார்கள் என்பதைப் பார்த்தீர்கள்; பல மாணவர்கள் சகல கலா வல்லவர்களாக உள்ளனர் என்பதையும் பார்த்தீர்கள்.

பல்வேறு கலைகளில் நுண் கலைகளில், விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

இந்த இளம் தளிர்கள் பரிசுகள் பெறும்போது நாம் எத்தகைய கற்பனைகளில் மூழ்கியுள்ளோம்! ஒரு குழந்தையை வளர்க்க எவ்வளவு துன்ப, துயரங்களை ஏற்க வேண்டிவரும் என்பது எனக்குத் தெரியும்.

இங்கே இந்தப் பள்ளியில் ஆயிரக்கணக்கான மாணவர்களைப் பயிற்றுவிக்கிறார்கள். எல்லாக் குழந்தைகளும் கல்வி கற்பதில் ஓரே தரத்துடன் விளங்குகிறார்கள். இந்தப் பள்ளியில் கல்வியின் தரம் நூற்றுக்கு நூறாக இருக்கிறது.

சிரத்தையுடனும், அக்கறையுடனும் கல்வி போதிக்கும் இந்தப் பள்ளி ஆசிரியர்களை நான் பாராட்டுகிறேன்.

''தாயைப் போல் பிள்ளை நூலைப் போல் சேலை'' என்பார்கள். ஆசிரியர்கள் போலத்தான் மாணவர்களும் இருப்பார்கள். ஆசிரியர்கள் நல்ல கல்வியைப் போதிப்பதால் மட்டும் மாணவர்களின் தரம் உயர்ந்து விடப்போவதில்லை. ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் போதிக்க வேண்டும். ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் போதிக்கும் ஆசிரியர்கள் அதன்படி தாங்களும் நடந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் மாணவர்களிடத்தில் ஒழுக்கத்தை வளர்க்க முடியும். தாங்கள் கற்பிப்பதற்கு நேர்மாறாக நடந்து கொண்டால் உண்மையான கல்வியைக் கற்பிக்க முடியாது.



இங்கே பேசியவர்கள் மாணவர்களை மலர்கள் என்றார்கள். மலர்களை எப்படிப் பாதுகாக்க வேண்டும் என்பதையும் உணர வேண்டும். ரோஜா மலரைச் சற்றுக் கவனக் குறைவாகப் பறித்தால் மலரின் முள் குத்திவிடும். அதுபோல, குழந்தைகளிடம் அன்பு செலுத்துவதில் நாம் சற்றுக் கவனக் குறைவாக நடந்து கொண்டால், அந்த இளம் உள்ளங்கள் வாடி வதங்கிவிடும். கொண்டாடும் இடத்தில்தான் குழந்தையும் தெய்வமும் என்பார்கள். அதுபோல, குழந்தைகளின் நம்பிக்கைக்குச் சொந்தக்காரர்களாக ஆசிரியர்கள் விளங்க வேண்டும்.

குழந்தைகளுக்குப் புத்தகக் கல்வியோடு ஒழுங்கையும், நேர்மையையும், பகுத்தறிவையும் போதிக்க வேண்டும். அத்தகைய கல்வியைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு மீண்டும் எனது பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாணவர்கள் ஏட்டுக் கல்வி பயில்வதோடு நின்றுவிடாமல், தங்கள் சொந்தக் காலில் நின்று, வாழ்க்கையை அமைத்துக் கொள்ளத் தொழில் கல்வியையும் பயில வேண்டும்.

தமிழக அரசு 10+2+3 என்ற புதிய கல்வி முறையைக் கொண்டு வந்துள்ளது. அந்தக் கல்வி முறையின் சிறப்பை உணர்ந்து மாணவர்கள் ஒத்துழைப்புத் தர வேண்டும்.

நாட்டு மக்களின் தகுதியை—வாழ்க்கையின் தரத்தை உயர்த்த—இந்தப் புதிய கல்வி பயன்படும். புதிய கல்வி முறையினால் ஏழ்மையை அகற்ற முடியும். இல்லாமையைப் போக்கமுடியும்.

—சென்னை எழும்பூரிலுள்ள டான் பாஸ்கோ மெட்ரிகுலேஷன் பள்ளியின்—சிறார் பள்ளியின் (கிண்டர் கார்டன்) புதிய கட்டடத்தைத் திறந்து வைத்து முதல்வர் அவர்கள் ஆற்றிய உரையின் ஒரு பகுதி—26-2-1978.

மனித சக்தி — கல்வியின் பங்கு

மாண்புமிகு கல்வியமைச்சர் திரு. செ. அரங்கநாயகம்

ஆறு வயதுக்கு மேல் உள்ள குழந்தைகளை ஆரம்பப் பள்ளிகளில் முதலாவது வகுப்பில் சேர்க்கிறோம். ஆண்டுக்கு ஒரு வகுப்பு படிக்கிறார்கள். இது முழு நேரக் கல்வியாகும்.

ஆனால், 6 வயதுக்கு முற்பட்ட குழந்தைகளுக்கு அவர்களுக்கு ஏற்ற கல்வி தரப் போதுமான ஏற்பாடுகள் இல்லை. குழந்தைகள் காப்பகங்கள் சிறிது அரசு உதவியுடன் சில இடங்களில் நடைபெற்று வருகின்றன.

மூன்று வயதிலிருந்து ஆறு வயதுக்குள் ஒரு குழந்தையின் அறிவு வளர்ச்சி மற்றும் பருவங்களைக் காட்டிலும் வேகமாக நடைபெறுகிறது. இப்படிப்பட்ட குழந்தைகளுக்கு உரிய கல்வித் திட்டம் வகுக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்ட வேண்டும் என்பது கல்வித் துறை அறிஞர்களின் கருத்தாகும். பின்னாலே அவர்கள் பெறும் கல்வியறிவிற்குப் பள்ளி முன்பருவப் படிப்பு நல்ல அடித்தளமாக அமையும் வாய்ப்புகள் இருக்கின்றன.

ஆறிலிருந்து பதினாறு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குக் கட்டாய இலவசக் கல்வி தரவேண்டுமென்பது அரசியல் சட்டத்தின் நோக்கமாகும். இதை 1960க்குள் நிறைவேற்றியிருக்க வேண்டும்; 1978 ஆகியும் இன்னும் நிறைவேறியபாடில்லை. இந்நிலையில் 6 வயதுக்கு முற்பட்ட குழந்தைகளுக்கு உரிய கல்விப் பயிற்சி தருவதென்பது அரசிற்கு முடியாததாக இருக்கிறது. போதுமான நிதி வசதியில்லை.

தனிப்பட்டவர்கள் பல பேர் 'நர்சரி'ப் பள்ளிகள் என்ற பெயரில் நிறையக் குழந்தைகள் பள்ளிகளை ஏற்படுத்தி நடத்தி வருகின்றனர். பொது மக்களிடையே நல்ல வரவேற்பும் இருக்கிறது. பொதுவான குற்றச்சாட்டு ஒன்று உண்டு. அதிகக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது; வியாபார ரீதியில் நடத்தப்படுகின்றன என்பதாகும்.

மேலும், பெரும்பான்மையான ஆசிரியர்கள் பயிற்சி பெறாதவர்கள்.



இந்தக் குறைபாடுகளை நீக்கி இப்பள்ளிகளை ஒழுங்குபடுத்தத் தமிழக அரசு தகுந்த நடவடிக்கைகள் எடுக்க இருக்கிறது.

இத் துறையில் பொது சேவா நிறுவனங்கள் சிறப்பான முயற்சிகளைச் சில பகுதிகளில் எடுத்து வருகின்றன. அவற்றை நாம் வரவேற்கிறோம்; பாராட்டுகிறோம். இதுபோன்ற நிறுவனங்கள் மேலும் சிரத்தை எடுத்துச் செயல்பட விரும்புகிறோம்.

சமூகத்தில் அந்தஸ்தும், பொது மக்களின் நம்பிக்கையும் பெற்றவர்கள் குழந்தைகள் பள்ளிகளை நடத்த முன் வரலாம்.

தொழிலதிபர்கள் தங்கள் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு இத்தகைய வசதிகளைச் செய்து தரலாம்.

ஆனால், ஆசிரியர்கள் பயிற்சி பெற்றவர்களாக இருக்கவேண்டும் என்பது மிக முக்கியம். குழந்தைகளுக்குக் கலப்படமில்லாத கல்விப் பயிற்சி கிடைக்க வேண்டும்.

இத்தகைய பள்ளிகள் கிராமங்களிலேயும், ஏழைகள் வாழும் பகுதிகளிலேயும்அமைக்கப்பட்டுச் செயல்படுவது மேலும் நல்லது. மிகச் சிறந்த சமுதாய சேவையாகும்.

ஆறு வயதுக்கு மேற்பட்ட குழந்தைகள்—அதிலும் பெரும்பாலும் பெண் குழந்தைகள் — பள்ளியில் சேராது அவர்களுக்கு இளைய குழந்தைகளைப் பார்த்துக் கொள்வதில் ஈடுபடுத்தப்படுகின்றனர். கூலி வேலை செய்யும் பெற்றோர்களுக்கு வேறு வழியில்லை.

ஆறு முதல் பதினாறு வயது வரை உள்ள குழந்தைகள் அனைவரும் கட்டாயமாகப் படிக்க வேண்டும் என்றால் அத்தகைய குழந்தைகள் படிக்கும் வாய்ப்புகள் அடைபடாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். குழந்தைகள் பள்ளிகளை ஏழைகள் பகுதிகளில் திறந்து நடத்துவது அங்குள்ள பெரிய குழந்தைகள் பள்ளிக்கு வரும் வாய்ப்புகளை அதிகரிக்கும்.

ஆரம்பப் பள்ளி

முதல் வகுப்பில் 100 பேர் சேர்ந்தால் ஐந்தாவது வகுப்பு முடிகின்றபோது 60 பேர் நின்று விடுகின்றனர்.

எட்டாவது முடிக்கின்றபோது மேலும் 20 பேர் தங்கி விடுகின்றனர்.

100 பேர்களில் 20 பேர்கள் மட்டும்தான் பள்ளியிறுதித் தேர்வு எழுதுகின்றனர்.

முதல் வகுப்பில் சேருகின்ற 100 பேரும் பள்ளியிறுதித் தேர்வு எழுதும் நிலையை உருவாக்க பல முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

எண்ணற்ற ஏழைக் குழந்தைகள் பசிக் கொடுமைக்காளாகி வதைவதைப் பார்க்கிறோம். அவர்களில் பெரும்பாலோர் பள்ளியில் சேருவதில்லை — சேர்ந்தாலும் தொடர்ந்து படிப்பதில்லை.

எனவே, இலவச மதிய உணவு என்பது, வராத குழந்தைகளை வரவழைக்கவும்—வந்து சேர்ந்த குழந்தைகள் நின்று விடாமல் தொடர்ந்து படிக்கவும் தூண்டுகிற வகையில் செயல்பட்டு வருகிறது ; வெற்றியும் பெற்று வருகிறது.

அதற்குமேல் இலவச உடை, இலவசக் கரும்பலகை, புத்தகம் ஆகியவையும் தரப்படுகின்றன.

சில குழந்தைகள் ஓராண்டு தோல்வியடைந்தாலும் நின்று விடுகின்றனர். அதை யெண்ணி முதல் மூன்று வகுப்புக்களுக்குத் தோல்வி கிடையாது—எல்லோ

ரும் வெற்றி பெறுகின்றனர் என்ற மாறுதலைச் செய்துள்ளோம். சிறு குழந்தைகளின் மன வளர்ச்சிக்கு அரசின் முடிவு துணையாக இருக்கும்.

இலவசக் கல்வியும் தருகிறோம். வீட்டுக்கு அருகில் பள்ளிகள் தோற்றுவிக்கப்படுகின்றன.

முயற்சிகள் வெற்றி பெற பெற்றோர் மத்தியில் மனமாறுதல் ஏற்பட வேண்டும்.

பெண் குழந்தைகளும் படிக்க வேண்டும் என்ற எண்ணம் ஒவ்வொரு பெற்றோர் உள்ளத்திலும் ஏற்பட வேண்டும். ஆண்களைக் போல் பெண்களும் சுதந்தரமாக வாழும் தகுதியைப் பெற்றாக வேண்டும்.

தாழ்த்தப்பட்டவர், பிற்படுத்தப்பட்டவர் என்ற நிலை ஒழிய வேண்டுமானால் அது அவர்கள் பெறுகின்ற கல்வியால் மட்டுமே முடியும். குழந்தைகளை அவர்கள் கட்டாயமாகப் பள்ளிக்கு அனுப்ப வேண்டும்.

படிப்பு என்பது உயர்ந்த சாதிக்காரர்களுக்கு மட்டுமே வரும், நம் குழந்தைகளுக்கு வராது என்ற தாழ்வு மனப்பான்மை, தாழ்த்தப்பட்ட — பிற்பட்ட வகுப்பினரிடையே ஒழிய வேண்டும்.

எல்லோரும் படிக்க வேண்டும் என்ற எண்ணம் எல்லோருக்கும் ஏற்பட வேண்டும்.

பள்ளிக்கு வந்து முழுநேரக் கல்வி பெறாத சிறுவர்களுக்குப் பகுதி நேர வகுப்புகள் நடத்தும் வாய்ப்புள்ளதாவென ஆராய வேண்டும்.

குழந்தைகள் கல்வி தேடி வரவில்லையென்றால் அவர்களைத் தேடிக் கல்வி போகவேண்டும்.

மேல்நிலைக் கல்வி:

10ஆம் வகுப்பில் தோல்வியடைந்தவர்கள் மறுபடியும் எல்லாப் பாடங்களிலும் தேர்வு எழுத வேண்டும் என்ற நிலை ஒழிகிறது. தோல்வியடைந்த பாடத்தில் மட்டும் தேர்வு எழுதினால் போதும், படிப்பை மேலும் தொடரலாம்.

'மார்ச்சில்' கணக்கில் தேர்ச்சி பெற்றவன் 'அக்டோபரில்' தோல்வியடைந்தான் என்கிற இயற்கைக்கு முரணான நிலை இனி யில்லை.

தாழ்த்தப்பட்ட - பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாகும்.

மூடப்பட்ட நெடுங் கதவு திறக்கப்படுகிறது.

மேலும், படிக்கின்ற மாணவர்களுக்குத் தொழிற் கல்வி தர நிறைய வாய்ப்புகளை உருவாக்கிப் புதிய கல்வித் திட்டத்தைச் செயல்முறைக்குக் கொண்டு வருகிறோம்.

ஆண்டுதோறும் சராசரி 3 இலட்சம் பேர் பள்ளியிறுதி வகுப்பு முடிக்கின்றனர். அவர்களில் சராசரி 80.000 பேர் மேற்படிப்பைத் தொடருகின்றனர். மற்றவர்கள் படிப்பை நிறுத்திக் கொள்கின்றனர். அவர்கள் சமுதாயத்திலே கலந்து விடுகின்றனர். அவர்களெல்லாம் படித்தவாகள்தான். ஆனால், எந்த வேலைக்கும் தகுதியில்லாதவர்கள்; எந்த வேலையும் தெரியாதவர்கள்.

இப்படிப்பட்டவர்கள் ஆண்டுதோறும் 2 இலட்சத்திற்கு மேல் சமுதாயத்தில் கலந்து கொண்டு வந்தால் எதிர்காலத்தில் சமுதாயத்தின் நிலை என்னவாகும்!

மடியிலே வெடி குண்டு இருப்பது போன்ற ஒரு ஆபத்தான நிலை.

இளம் மாணவர்கள் குடும்பத்திற்கும் பாரமாக—சமூகத்திற்கும் பாரமாக வாழ்கின்றனர்.

இவர்களையெல்லாம் சமுதாயத்திற்குப் பயனுள்ளவர்களாக எதிர்காலத்தில் நம்பிக்கையுள்ளவர்களாக மாற்றும் பிரதான நோக்கத்தைக் கொண்டது புதிய மேல்நிலைக் கல்வித் திட்டம் (Higher Secondary course).

ஏதாவது ஒரு தொழில் தெரிந்தால் எப்படியும் வாழ முடியும் என்ற நம்பிக்கை பிறக்கும். சமுதாயத்தை வெறுக்க மாட்டார்கள். சமூக விரோத எண்ணங்கள் தோன்றாது. சமூகத்தின் மீது அன்பும் பாசமும் ஏற்படும். அவர்களது அறிவும், ஆற்றலும், உழைப்பும் சமூக வளர்ச்சிக்குப் பல்வேறு நிலைகளில் பல்வேறு வகைகளில் கிடைக்கும்; பயன்படும்.

இத்தகைய கல்வி தமிழ்நாடு முழுவதும் பரவலாக-கிராமப்புறங்களிலும் கிடைக்க இருக்கிறது.

உயர்கல்வி மக்களைத் தேடி வருகிறது.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் எண்ணங்கள்—ஆசைகள் செயல் வடிவம் பெறுகின்றன.

கல்லூரிக் கல்வி:

இன்றைய தினம் கல்லூரிக் கல்வி என்பது 'அந்தஸ்துக் கல்வி' யாக இருக்கிறது. பட்டப்படிப்புப் பெற்றவர்கள் ஒரு சாதியாக மாறி வருகின்றனர். அவர்களிடையே பெரும்பாலும் சமுதாய உணர்வு, மதிப்பிழந்து வருகிறது. அவர்கள் ஒரு சாதியாக மட்டுமல்ல உயர் சாதியாக மாறி வருகின்றனர். அடித்தள மக்களுடைய தொடர்பு அற்று வருகிறது.

ஏன்? தன்னைப் பெற்ற தந்தையே—படியாதவனாக, ஏழையாக இருந்தால்—தன் சக மாணவரிடத்தில் 'இவர் எனது தந்தை' என அறிமுகப்படுத்தவும், கூசுகின்ற நிலை இன்று இல்லை என உறுதியாகச் சொல்லமுடியாது.

'பட்டம் அந்தஸ்துக்காக' எனும் போக்கு மாற்றப்பட்டாக வேண்டும்.

தலைசிறந்த நிர்வாகிகளை, அறிஞர்களை, ஆராய்ச்சியாளர்களை, பல்துறைக் கலைஞர்களை, சிந்தனையாளர்களை உருவாக்கும் பாசறையாக கல்லூரிகள் அமைய வேண்டும்.

கல்லூரிகள் குட்டிப் பல்கலைக் கழகங்களாக விளங்க வேண்டும்.

அங்கே ஆசிரியர்களும், மாணவர்களும் சேர்ந்து அறிவுப் பணியில் கூட்டு முயற்சிகள் மேற்கொள்ளுவது நடைமுறையாக வேண்டும்.

கல்லூரிகள் மாணவர்கள் மனத்தில் போராட்ட உணர்வுகளைத் தூண்டிவிடும் நிலையில் இருக்கக்கூடாது.

மாணவர்களைப் பொறுத்த வரை போராட்டம் தற்கொலைக்கு ஒப்பாகும்.

முன்னேறி வரும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு விடப்படும் சவாலாகும்.

முளையிலேயே கிள்ளி எறிய அரசு ஆவன செய்யும்.

சமுதாயத்தின் மீது தங்களுக்கு உள்ள அடிப்படைக் கடமைகளை உணர்ந்து அரசியல்வாதிகள் ஒத்துழைப்புத் தருவர் என்ற நம்பிக்கை இருக்கிறது.

கல்லூரி மாணவர்கள் என்றால் தவறாக நினைக்கின்ற மக்கள், மதித்து அன்பு காட்டும் காலம் வெகு தொலைவில் இல்லை.

ஆசிரியர்—பெற்றேர் நல்லுறவு இந்த வகையில் நல்ல முறையில் பயன்படும்.

முதியோர் கல்வி:

சொல்லப்படுகின்ற நிலேயில் கடைசியாக வருகிறதே தவிர, முதியோர் கல்வி எல்லாவற்றிற்கும் அடிப்படையானது—முதன்மையானது ஆகும்.

எழுத்தறிவு அற்றேர் தொகை பெருகி வருகிறது. இது நாட்டுக்கு நல்லதல்ல.

அரசின் நல்ல நோக்கங்கள், திட்டங்கள் நிறைவேற மக்கள் எழுத்தறிவு பெற்றவர்களாக இருக்க வேண்டும்.

அறியாமை நிறைந்த சமூகம் ஊழல்கள் பெருகி வளரும் பண்ணேயாகும்.

எல்லோரும் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் எனும் சிறப்பு அடைய, படித்தவர்கள் அத்துணே பேரும் ஒருமித்து முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

அது ஓர் இயக்கமாக நாடு தழுவி நடத்தப்பட வேண்டும்.

சமூகப் பணியில் ஆர்வங் கொண்ட நிறுவனங்கள், நல்லவர்கள்—இளேஞர்கள் இம்முயற்சியில் முழுமையாக ஈடுபடவேண்டும். படியாதவர்களே ஒன்று சேர்ப்பதும்—எழுத்தறிவு தருவதும் சிக்கல் நிறைந்த பெரும் பணி—பயனுள்ள நல்ல பணி.

எழுத்தறிவில் லா த வர் க ள், எழுத்தறிவு பெற்றுவிட்டால்...

பார்வையற்ற குருடன் பார்வை பெற்றதைப் போலாகும்.

தெரியாமலா சொன்னர் திருவள்ளுவர்,

'எண்ணென்ப ஏனே
எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழு முயிர்க்கு'

நமது பயணம் தொடரட்டும்.

நமது இலட்சியம் கண்ணுக்குத் தெரிகிறது.
நமது பாதையில் கள்ளும், முள்ளும்...!

நமது தலேமை புரட்சித் தலேமை.

நமது உள்ளத்தில் உறுதி—ஊக்கம்.

நமது பயணம் தொடரட்டும்!



காயிதே மில்லத் பிறந்த நாள் விழா!

தமிழ்ச் சான்றேர்கள், தேசத் தலேவர்கள் ஆகியோரின் பிறந்த நாள் விழாக்களேத் தமிழக அரசு பெருமையுடன் கொண்டாடி வருகிறது. அண்மையில் பாவேந்தர் பாரதிதாசன் விழாவை அரசு விழாவாகக் கொண்டாடிய தமிழக அரசு, இஸ்லாமிய சமுதாயத்தின் ஈடிணே யற்ற தலேவராகத் திகழ்ந்த கண்ணியத்துக்குரிய காயிதெமில்லத் முஹம்மது இஸ்மாயில் சாகிப் அவர்களின் பிறந்தநாள் விழாவையும் அரசின் சார்பில் முதன்முதலாகக் கொண்டாடுகிறது.

நெல்லே மாவட்டத்தில் உள்ள பேட்டையில் 5—6—1896ல் தோன்றிய காயிதெ மில்லத் அவர்கள், நாட்டுப்பற்றுமிக்கவராக விளங்கினர். கல்லூரியில் பி.ஏ., படித்துக் கொண்டிருந்த சமயத்தில் 1920-ம் ஆண்டில் காந்தியடிகள் விடுத்த வேண்டுகோளின்படி—ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டு — கல்லூரியைவிட்டு வெளியேறினர், இந்திய நாட்டின் விடுதலேப் போரில் அவருக்கு இருந்த ஆர்வம், பட்டம் பெற விடாது தடுத்து விட்டது அவரை.

1946 முதல் 1952-ம் ஆண்டு வரை, பழைய சென்னே மாநிலச் சட்டமன்ற உறுப்பினராகவும், எதிர்க்கட்சித் தலேவராகவும் இருந்தார். 1952 முதல் 1958 வரை நாடாளுமன்ற மேலவை உறுப்பினராகப் பதவி வகித்தார்.

1962-ம் ஆண்டு முதல், 1972-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 4-ஆம் நாள் வரை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து வந்தார்.

பேரறிஞர் அண்ணு அவர்கள் அவரைப் பற்றி ஒருமுறை குறிப்பிட்டார்கள் :

"காயிதெ மில்லத், அமைதியை விரும்பும் அருமையான தலேவர். அடக்கம், பெருந்தன்மை, விவேகம் நிறைந்தவர். அவரது பேச்சில் நாற்பதாண்டுக்கால அரசியல் வரலாறு பொதிந்து கிடக்கிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது."

—இவ்வாறு பேரறிஞர் அண்ணு அவர்களால் புகழப் பெற்ற காயிதெமில்லத் அவர்களின் பிறந்த நாள் விழாவை ஜூன் 5 ஆம் நாள் தமிழக அரசு கலேவாணர் அரங்கில் சிறப்பாகக் கொண்டாடுகிறது.

போக்குவரத்துத் துறையில் நல்லாட்சி நல்கிய நலன்கள்

பரந்த நம் தமிழ் நாட்டில் மக்கள் நகரங்களுக்கிடையில் விரைந்து சென்று தொடர்பு கொள்ள, போக்குவரத்துப் பேருந்துகள் பெரிதும் உதவுகின்றன. பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப்படை, போக்குவரத்து என்பதை உணர்ந்த இவ்வரசு, தான் பதவி ஏற்ற ஓர் ஆண்டுக் காலத்திற்குள்ளேயே பொது மக்களுக்கு பற்பல வசதிகளையும் வளர்ச்சிப் பணிகளையும் செய்துள்ளது. அது மட்டுமல்ல, போக்குவரத்துத் துறையில் பணிபுரியும் தொழிலாளர்களின் நல்வாழ்விற்கும், நாடு இது வரை கண்டிராத அளவுக்கு ஊதிய உயர்வும், பற்பல சலுகைகளையும் தந்துள்ளது.

பேருந்துகளில் பயன்படும் டீசல், டயர் போன்றவைகளின் விலை இந்தக் குறுகிய காலத்தில் உயர்ந்த போதிலும் கூட, ஏழை எளியோர் நலன் காத்திட, கட்டணத்தை உயர்த்திடாமல் இருப்பது போற்றற்குரியது. கட்டணத்தை உயர்த்தாதது மட்டும் அல்ல; துரித வண்டிகளில் ஒரு கிலோ மீட்டருக்கு ஆறு காசு கட்டணம் இருந்ததை ஐந்து காசாகவும் குறைந்துள்ளது. மக்களின் நலன் கருதியே வேலை நிறுத்தம் நடந்த காலத்திலும் கூட மக்களுக்கு தொடர்ந்து சேவையை அளித்ததும் ஒரு மாபெரும் சாதனையாகும்.

மேலும், இதுகாறும் இதர பகுதிகளுடன் இணைத்திடாமல் இருந்த பல கிராமங்களுக்கும் போக்குவரத்து வசதி செய்யப்பட்டுள்ளது, கிராமப்புற வாழ்க்கைத் தர, பொருளாதர முன்னேற்றத்திற்கு உதவும் வகையில் உற்பத்தி ஆகும் பொருட்களை அன்றாடம் விற்பனை செய்ய நகருக்குக் கொண்டு செல்லவும், கல்விக் கூடங்களுக்கும் மருத்துவமனைகளுக்கும் செல்லவும் ஏதுவாக சாலைப் போக்குவரத்துப் பேருந்து வசதிகளைச் செய்திட வரலாறு கண்டிராத வகையில் வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. சாலைகளும் போக்குவரத்தும் ஒருங்கே இணைந்து வளரவேண்டும் என்பதற்காகவே ஒரே அமைச்சரின் கீழ் இவ்விரு துறைகளும் செயல்படுகின்றன.

பேருந்துகளை நாட்டுடைமையாக்கியதன் நோக்கமான, பொது மக்கள் நலனையும் தனியார் துறை பெற்று வந்த இலாபத்தினை அனைத்து மக்களும், தொழிலாளரும் பெறும்படி செய்வதையும், நடைமுறையில் பெறவைத்து நாட்டின் முன்னேற்றத்திற்கு வழி வகை செய்யப்பட்டுள்ளது. அத்துடன் கிராமப் பகுதிகளில் சிற்றுந்துகள் (Mini Buses) இயக்கிடவும் திட்டம் இடப் பட்டுள்ளது. இந்த ஓராண்டுக் காலத்திற்குள் 221 புதிய வழித் தடங்களில் பேருந்துகளை இயக்கி இது வரை போக்குவரத்துத் தொடர்பில்லாத 466 கிராமங்களில் உள்ள 7 இலட்ச மக்கள் பயன் பெறுமாறு பேருந்து வசதிகளைப் பெருக்கியுள்ளது இவ்வரசு. புதிய வழித் தடங்கள் மட்டுமல்லாமல் 681 புதிய பேருந்துகள் இவ்வாண்டில் வாங்கப்பட்டு பேருந்துத் தடங்களில் பணிபுரிகின்றன. அத்துடன் சென்னைப் பெருநகரில் மட்டும், நிறைவுற்ற இவ்வாண்டில் 59 புதிய பேருந்துகள் இயக்கப்பட்டுள்ளன. அத்துடன் இன்னும் மூன்று ஆண்டுகளில் தடங்களில் 100 பேருந்துகள் அதிகமாக விடவும் பழைய பேருந்துகளுக்குப் பதிலாக 380 புதிய பேருந்துகளை சென்னைப் பெருநகர் பிரிவிற்கு உலக வங்கியின் உதவி கொண்டு வாங்கி இயக்கிடவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவை மட்டுமல்ல, 3 புதிய பணிமனைகள், 8 பேருந்து நிலையங்கள், 400 நிழற்கொடைகள் ஆகியவற்றைக் கட்டிடவும் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இவைகளினால் பயணிகள் மட்டுமல்லாமல் வேலையில்லாமல் அவதிப்படும் இளைஞர்களுக்கும் பயன் உண்டு. இத்திட்டங்கள் இப்போது உள்ளதை விட 1,275 புதிய நபர்கள் வேலை பெறும் வாய்ப்பினையும் அளிக்கும்.



மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்
திரு. சி. பொன்னையன்

அரசுப் போக்குவரத்து வாரியங்கள் மூலம் நாடு பொருதார முன்னேற்றம் அடைவது மட்டுமல்லாமல், அவை பெறும் வருவாயிலிருந்து சாலைகள் அபிவிருத்தி போன்ற தொடர்புள்ள பணிகளின் வளர்ச்சிக்கும் அதிகப் பணம் செலவிட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

தொழிலாளியும் நலனுடன் வாழவேண்டும் என்ற நல்லுணர்வுடன், கடந்த ஓர் ஆண்டுக் காலத்தில் தொழிலாளர் கேளாமலேயே பற்பல சலுகைகள் தரப்பட்டதுடன், வரலாறு கண்டிடாத அளவு மொத்த ஊதியத்தின் உயர்வும் அளிக்கப்பட்டுள்ளதும் ஒரு குறிப்பிடத் தக்க அம்சமாகும்.

சட்ட ரீதியாகச் செய்து தரப்பட வேண்டிய சிற்றுண்டி வசதி இதுவரை போதிய அளவு போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு இல்லாதிருந்தது. அந் நிலையைப் போக்கி 25 சதவிகித மானியத் தொகையுடன் நடத்தப்படும் சிற்றுண்டிச் சாலைகள் துவக்கப்பட்டுள்ளன.

தொழிலாளர்களின் பிள்ளைகள் கல்வி பயில, பள்ளி—கல்லூரி சென்றிட, பேருந்தில் இலவசமாகச் சென்றிட வசதி அளிக்கப்பட்டுள்ளது. அங்கீகரித்த கல்வி நிறுவனங்களுக்குச் செல்ல மாத்திரம் இது வரை தரப்பட்ட இந்த வசதி, இப்போது வரும் ஆண்டிலிருந்து அங்கீகரிக்காத கல்வி நிறுவனங்களில் படிக்கும் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கும் பயன் தருமாறு அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடமையைச் செய்து வரும் காலத்திலேயே காலமாகி விடும் தொழிலாளிகளைச் சார்ந்திருக்கும் குடும்பத்தின் அங்கத்தினரில் ஒருவருக்கு வேலை வாய்ப்பு நிறுவனத்தின் பரிந்துரை இல்லாமலேயே, விதிகளைத் தளர்த்தி, நேரிடையாக வேலை வாய்ப்பு அளிக்க வழி வகை செய்துள்ளது. இறந்துபோன தொழிலாளியின் குடும்பத்திற்குக் குடும்ப நலத் திட்டத்தின் கீழ் தரப்படும் ரூ. 10,000 தருகின்ற திட்டத்தோடு இந்தப் புதுச் சலுகையும் சேர்ந்து ஊதியம் பெறும் ஊழியரை இழந்த குடும்பங்களின் வருத்தம் தவிர்க்க இது பெரிதும் உதவும்.

முன்பு மருத்துவ சலுகையாக அனைவருக்கும் மாத வருமானத்தில் 4 சதவிகிதம் அளிக்கப்பட்டது. ஆனால் அதற்கு உச்ச வரம்பாக ரூ. 15 நிர்ணயிக்கப்பட்டு இருந்தது. அதனை இவ்வரசு ரூ. 40 ஆக உயர்த்தியதோடு மட்டுமல்லாமல், எக்ஸ்ரே, இ.சி.ஜி. போன்ற பரிசோதனைச் செலவுகளையும் ஏற்றுக் கொண்டுள்ளது.

ஓட்டுனர்கள் விபத்து ஏதுமின்றி ஓராண்டுக் காலம் வண்டி ஓட்டியதற்கு வெகுமதியாக இதுவரை அளிக்கப்பட்டு வந்த 25 ரூபாயை மிகக் கணிசமான அளவு உயர்த்தி ரூ. 100 தர ஆணையிடப்பட்டுள்ளது. அத்துடன் விபத்தில்லாமல் பேருந்து இயக்கிய ஒவ்வொரு ஆண்டுக்கும் முதல் ஆண்டில் அளிக்க இருக்கும் ரூ. 100 உடன் ரூ. 25 சேர்ந்து வெகுமதி உயர்ந்து கொண்டே போகும். ஓட்டுனர்கள் பாதுகாப்புடன் ஓட்டிட ஊக்கம் அளிப்பதற்காகவும், பொதுமக்கள் விபத்து ஏதுமின்றிப் பத்திரமாகப் பயணம் செய்ய ஏதுவாக இருப்பதற்காகவும் தான் இந்த வெகுமதித் தொகை மிகக் கணிசமான அளவு உயர்த்தப்பட்டுள்ளது.

கடும் வெயிலிலும் அயராது உழைத்திடும் ஓட்டுனரின் கண்களை வெயிலின் கொடுமையிலிருந்து காத்திட, குளுமை தரும் கண்ணாடி ஓட்டுனர் அனைவருக்கும் தர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த இதழுடன்

10+2+3

'பல் துறைக் கல்விமுறை பயனுள்ள திருப்பம்'

இலவச இணைப்பு.

இதர மாவட்டங்களில் பணி புரியும் தொழிலாளர்கள் இதர போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் முன்பு கட்டணம் செலுத்திப் பயணம் செய்ய வேண்டுமென்ற நிலை இருந்தது. இப்பொழுது தொழிலாளர் இதர போக்குவரத்துக் கழகப் பேருந்துகளிலும் இலவசமாகப் பயணம் செய்திட வசதி செய்து தரப்பட்டுள்ளது.

ஆயுட்கால ஊதியத் திட்டத்தில் இருந்த சில கட்டுப்பாடுகளின் காரணமாகச் சிலர் பயன் பெறுமல் இருந்த குறையினைப் போக்கி, அனைவரும் பயனடையுமாறு வழிவகைகள் பாங்குடன் செய்யப்பட்டுள்ளன. உதாரணமாக, ஓட்டுனரின் பதவி உயர்வுக்கான பரிசீலனை செய்யும்போது துலக்குநராகப் பணிபுரிந்த காலத்தையும் கணக்கில் எடுத்துக் கொள்ளவும் பதவி உயர்வுக்காகச் செய்யும் முதல் பரிசீலனையில் பயன் பெருத நிர்வாகப் பணியாளர்களுக்கு ஒரு ஊதிய உயர்வு கூடுதலாகத் தரவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நெருக்கடி நிலையின்போது வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளரின் நிலைமையை மனிதாபிமானத்துடன் மறு பரிசீலனை செய்து, பல தொழிலாளர்களை மறுபடியும் வேலைக்குச் சேர்த்து அவர்களுக்கு மறுவாழ்வு தரப்பட்டுள்ளது.

தொழிலாளர்களின் வருமானத்தைப் பெருக்கிடுமாறும், அவர்கள் குடும்பத்தினர் தொழில் திறனைப் பெற்றிடுமாறும், அவர்களைச் சார்ந்த பெண்களுக்குத் தையல் போன்ற தொழில்கள் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கூட்டுறவு நியாய விலைக் கடைகள் நடத்தவும் உதவி தரப்படுகிறது.

மேற்கூறியவாறு பொதுமக்களின் நலனையும் தொழிலாளர்களின் நலனையும் இரு கண்கள் போல் பாவித்து நல்லுணர்வைப் பெருக்கிடவும் நல்லுறவை வளர்த்திடவும் வழி செய்தது இவ்வரசின் திட்டங்களே.

சமீபத்தில், அடிப்படை ஊதியத்தில் ரூ. 10 உயர்வும், அகவிலைப்படியில் ரூ. 35 உயர்வும் எல்லாப் போக்குவரத்துத் தொழிலாளருக்கும் அளித்ததோடு கூட வாழ்க்கைச் செலவுப் புள்ளிக்கு ஏற்பக் கூடுதல் அகவிலைப்படி பெறும் கட்டணத்தை 323 புள்ளியிலிருந்து 320 ஆகக் குறைத்து நிர்ணயித்துத் தொழிலாளர் மேலும் பயன் அடையுமாறு செய்யப்பட்டுள்ளது. அப்படி நிர்ணயித்த 320 புள்ளிக்கு மேலாக அதிகரிக்கும் ஒவ்வொரு புள்ளிக்கும் இதுவரை தந்துவந்த ஈட்டுப்படியான 75 பைசாவை 90 பைசாவாகவும் உயர்த்தியுள்ளது. தொழிலாளர்கள் இதுவரை ஆண்டுக்கு 6 நாட்கள் மட்டுமே பெற்ற மருத்துவ விடுப்பு 8 நாட்களாகவும் அதிகரிக்கப்பட்டது.

மேற்கூறிய பற்பல சலுகைகளின் மூலம் 3 கோடி 53 இலட்சம் ரூபாய் அளவுக்குத் தொழிலாளர்களுக்கு அதிகத் தொகை செலவிட முன் வந்தது. இவ்வாட்சி ''நல்லதோர் ஆட்சி'' என்பதற்கு ஓர் அத்தாட்சியாகும்.

தொழிலாளர் மத்தியில் மன நிறைவும் மட்டற்ற மகிழ்ச்சியும் அனைவரும் அடையுமாறு செய்த இச்செயல்கள் போக்குவரத்துத் துறையிலேயே ஓர் மறுமலர்ச்சியைத் தோற்றுவித்துள்ளது எனக் கூறலாம். மேலும் நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்து வாரியங்கள் பொதுமக்களுக்கும் தொழிலாளர்களுக்கும் புதியதோர் நல்லுறவு படைத்திட வழிவகுக்குமென்பது நிச்சயம்.

அண்ணா எனும் இலக்கியவாதி

பி. சி. கணேசன்



விவரம் தெரிந்த யார் வேண்டுமானாலும் வரலாற்றைச் சுலபமாக எழுதி விடமுடியும். வெறும் விவரங்களுக்காக வரலாற்றைப் படிக்கின்றவர்களும் அதைப் பொறுமையாகப் படித்துப் பயன் பெறுவது சாத்தியம். ஆனால் படிப்போருக்கு அலுப்புத் தட்டாமல் வரலாற்றுச் சம்பவங்களைச் சுவையாகச் சொல்லுகின்ற லாவகம் எல்லோருக்கும் எளிமையாக வந்து விடாது. எங்கோ ஒரு கிப்பன், எங்கோ ஒரு கார்லைல், எங்கோ ஒரு டாயன்பீ வேண்டுமானால் இந்தச் சாதனையை வெற்றிகரமாகச் செய்துவிடக் கூடும். வரலாற்றின் ஒரு குறிப்பிட்ட பகுதியை எடுத்துக் கொண்டு, அதற்கு நகாசு வேலை செய்து, ஜனரஞ்சகமாகச் சொல்வது என்பது சுலபமான காரியமில்லை. ''ரோமாபுரி ராணிகள்'' என்கிற சிறிய நூலில் அண்ணா புரிந்து இருக்கும் அரிய சாதனை இது தான்.

''கடல் கட்டி ஆண்ட ரோம் சாம்ராஜ்யம் மெல்லிய காற்றில் கலைந்து போகும் அட்டை வீடுகளைப் போலச் சரிந்து போனதற்கு என்ன காரணம் என்பதை 'ரோமபுரி ராணி'யில் அறிஞர் அண்ணா அருமையாகப் படம் பிடித்துக் காட்டி இருக்கிறார். 'செல்வம் கொழிக்கும் போது சமுதாயம் சீரழிந்து, சிதைந்து போகின்றது' என்றான் ஆங்கிலப் பெருங் கவிஞன் ஆலிவர் கோல்ட்ஸ்மித். ரோம் சாம்ராஜ்யம் செல்வத்தில் திளைத்த போது செல்வாக்கு இழந்து போயிற்று. மன்னர்களும் மங்கையரும் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்றும், வாழத் தலைப்பட்ட போது உலகச் சந்தைகளில் நாகரிகத்தை வாணிபம் செய்து கொண்டிருந்த ரோம் சாம்ராஜ்யம் சிதறிச் சின்னாபின்னப்பட்டுப் போயிற்று. இந்த அவலத்தைத் தான் அடுக்கடுக்கு வார்த்தைகளில் — அழகான வர்ணனைகளில் அண்ணா சித்திரித்துக் காட்டுகிறார்.

'ரோமாபுரி ராணிகளை'ப் படித்து முடிக்கும் போது சிற்றின்ப வெள்ளப் பெருக்கால் சீரழிந்து போன ஒரு சாம்ராஜ்யத்திற்குள் நுழைந்து வெளிவரும் அனுபவம் நமக்கு ஏற்படுகிறது. ரோம் சாம்ராஜ்யத்தின் ஆபாசத்தை ஆபாசம் இல்லாமல் அண்ணா எழுதி இருந்தால் வரலாற்றில் சரியான உணர்வை வாசகர்களால் நிச்சயம் பெற்று இருக்க முடியாது.

ரோம் சாம்ராஜ்யத்தில் தலைமை ஏற்று ஆட்சி புரிந்த வீரர்களையும், அவர்களை ஆட்டிப் படைத்த அணங்குகளையும் பற்றி அண்ணா அலங்கார நடையில் எழுதி இருக்கிறார். சீசரின் வீரத்தை வர்ணிக்கும் போது மாவீரன் ஒருவன் நம் கண்முன் ராஜ நடை போடுகிறான். ஜாலக்காரி ஜூலியாவை அவர் வர்ணிக்கும் போது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வரலாற்றில் வாழ்ந்து, ரோமாபுரியை ஆட்டிப் படைத்த அந்தச் சாகசக்காரி எப்படி இருந்து இருப்பாள் என்பதை இப்பொழுது வாழ்கிற நம்மால் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிகிறது. அண்ணாவின் எழுத்து இந்த இடத்தில்தான் மகத்தான வெற்றி பெறுகிறது.

சீசரின் மனைவி பாம்பேயா சீசரின் மானத்திற்குப் பங்கம் ஏற்படுத்தும் வகையில் நடத்தை கெட்டவளாக இருக்கிறாள். இதனால் மாவீரன் சீசர் எப்படிப் பாதிப்புக்கு உள்ளானான் என்பதை அண்ணா சொல்லுகிறார்.

''சீசரின் நிலை என்ன? வதந்தியைக் கேட்டு அவன் வதையவில்லை. தனது மதிப்புக்குக் கறை ஏற்பட்டதே என்ற அளவுக்கு வருத்தம் இருந்ததே தவிர நெஞ்சு துடித்தவனாகக் காணப்படவில்லை. ''பாம்பேயா பழியேதும் செய்திலள்; எனினும் சீசரின் மனைவி மீது சம்சயம் ஏற்படவும் இடமிருத்தல் கூடாது; எனவே அவள் இனி என் மனைவியாகாள்'' என்று சீசர் கூறிவிட்டான். பசப்புக்காரி பாம்பேயா விலக்கப்பட்டாள்.''

இந்தச் சம்பவத்தை அண்ணா வார்த்தைப் படமாக்கிக் காட்டி இருக்கிறார். ஆங்கிலத்தில் இந்த வரலாற்றுச் சம்பவத்தை வைத்து ஒரு சொற்றொடர் உண்டு.

'Caesar's wife must be above suspicion' என்பதுதான் அது. இந்தச் சொற்றொடருக்குத் தமிழில் பொருள் கொள்ள வேண்டுமானால், ''பொறுப்பான பதவிகளில் இருப்பவர்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவர்களாக இருக்க வேண்டும்''. இந்த விஷயத்தை அண்ணா அநாயாசமாக 'ரோமாபுரி ராணிகளி'ல் குறிப்பிட்டுச் சொல்லுகின்றார்.

ஸினியா என்கிற ரோமாபுரி ராணியை அண்ணா வர்ணிக்கும் இடம் இதோ :

''ஸினியா, கண்கவரும் வனப்புள்ளவள் என்று கூறத் தேவையில்லை. அழகில்லா அணங்கு, புகழில்லா ஆடவன், கற்பனைத் திறமில்லாத கவி, பாதகத்துக்கு அஞ்சும் ராஜ தந்திரி, போகத்தில் புரளாத பிர தானியர், பொய்யுரைக்கத் தெரி யாத சேடிகள் ஆகியோருக்கு ரோம் சாம்ராஜ்ய சபா மண்ட பங்களிலே இடமே கிடையாது.''

ரோம் சாம்ராஜ்ய நிலையை இதை விட எப்படித் தெளிவாக வர்ணிக்க முடியும்?

ரோமாபுரியில் நிலவிய மகளிர் ஆதிக்கத்தை அண்ணா இப்படிச் சொல்லுகிறார் :

''போர் வீரன் தனது வாளின் கூர்மையாலும் அதை விடக் கூர் மையான தனது திறமையாலும் எங்ஙனம் பலருடைய இருதயங் களைக் குத்திக் கொன்று, பின்னர் தனது கீர்த்தியை நிலைநாட்டு கின்றானோ, அங்ஙனம் கீர்த்தியை நிலை நாட்டிய பிறகு எங்ஙனம் உலகம் அவனைப் போற்றியும் புகழ்ந்தும், அவன் ஆணைக்கு அடங்கியும், அன்புக்கு ஏங்கியும் கிடக்கிறதோ, அதுபோல், ரோம் சாம்ராஜ்யத்து ராணிகள், தங்கள் அழகை ஆயுதமாகக் கொண்டு வீரரை, ராஜதந்திரி களை, இளவரசரை, மன்னரைத் தாக்கி, பலரை வீழ்த்தி, ஒரு வரைத் தழுவி, கீர்த்தியும், கித் தாப்பும் தம்மை வந்து தழுவும் படிச் செய்து, சாம்ராஜ்யத்தை ஆட்டிப் படைத்தனர். செங் கோல் அவர்களின் சிறு விரலே! பட்டாளங்கள் அவர்களின் பாய்ச் சிகை! படைத் தலைவர்கள் அவர் கள் பதுமைகள்! அவ்வளவு செல் வாக்குப் பெற்றனர்.''

ரோம் சாம்ராஜ்ய அவலத்தை வர்ணிக்கும் அண்ணா ஆங்காங்கே நவீன கண்ணோட்டத்தோடு வர லாற்று விமர்சனத்தையும் செய்து கொண்டே போகிறார். ரோம் சாம்ராஜ்யம் செல்வச் செழிப்பில் இருந்ததற்கு எது காரணம், யார் காரணம் என்பதை அண்ணா அரு மையாகச் சித்திரித்துக் காட்டு கிறார் :

''காடு நிலமானதும், வனம் தோட்டமானதும், மேடு மாளிகை யானதும், கரம்பு ஊற்றானதும், பள்ளம் பாதையானதும் பாட் டாளியின் உழைப்பினால். ஆனால், அவன் அந்த உழைப்பிற்குப் பிறகு அதனாலான உல்லாசங்களை அனுபவிக்கிறானா? இல்லை! தோட் டத்தொழிலாளியின் வியர்வை வாடை! அவனது வாழ்க்கையோ கசப்பு; அவன் பயிரிட்டுப் பிற ருக்குத் தரும் கனியோ சுவை யுள்ளது. பூமிக்கு அடியிலிருந்து அவன் செல்வத்தைச் செதுக்கி எடுத்துத் தருகிறான். ஆனால், அவன் செல்வனாவதில்லை! குனிந் தும், குப்புறப்படுத்தும், எரியும் வெய்யிலில் உழைத்தும் அவன் அண்டத்தை முட்டும் மாளிகை அமைத்துத் தருகின்றான்; பிறகோ அதன்மீது பணம் படைத்த பிர தாபன் உலாவுவதைக் காண, அண்ணாந்து பார்த்து விட்டு, தனது குடிசையில் கூரையின் ஒழுகலைக் கண்டு மனங் கசிகிறான். கடலில் குளித்து, சுறுவுக்கும் பிற வுக்கும் இரையாகாது தப்பி முத்து எடுக்கிறான். பின்னர் அது யாருடைய கழுத்திலோ மாலை யாகின்றது. கை வளையாகிறது. காதுகளில் நடனமாடுகிறது. அந்த முத்து எடுத்தத் தொழி லாளி வறுமைக் கடலில் நீந்தி நீந்திக் கரை காணாது கலங்கு கிறான். உழைப்பினால் உறுபயனை அனுபவிக்க முடியாது அல்லற்படு கிறான்.''

வெறும் ஆபாசச் சொல்லடுக் காக 'ரோமாபுரி ராணி'களை அண்ணா எழுதி இருந்தால் மேலே சொன்ன சிந்தனை அவருடைய கற்பனைக்கு வந்திருக்காது. பாட் டாளி வர்க்கம் உழைத்து உரு வாக்கிய செல்வத்தை உல்லாச செல்வத்தை உல்லாசவாசிகள் எப்படி ஊதாரித் தனமாக அழித்தார்கள் என்பதை அண்ணா எடுத்துச் சொல்லும்போது வர லாற்று உண்மையினை மட்டும் சொல்லவில்லை. ஏற்றத் தாழ்வு நீங்கப் போராட வேண்டிய அவ சியத்தையும் எடுத்துக் காட்டு கிறார். மற்றொரு நிலையினையும் சிந்திக்க வைக்கிறார். ரோம் சாம்ராஜ்யம் இருந்த நிலையி லிருந்து இன்று வரை அந்த நிலை மாறவில்லை என்பதையும் அண்ணா மறைமுகமாகச் சுட்டிக் காட்டுகிறார்.

அண்ணா ஒரு சிறந்த இலக்கிய வாதியாக விளங்கியதால்சொல்ல வந்த உணர்ச்சிகளுக்கு ஏற்பச் சொற்களைத் தேர்ந்தெடுத்து நட மாட விடுகிறார்.

பிரபல பிரஞ்சு நாவலாசிரிய ரான குஸ்தாவ் ஃப்ளாபே அவர் எழுதியுள்ள உலகப் பிரசித்தி பெற்ற 'மேடம் பவாரி' என்கிற நாவலில் ஓர் அருமையான உத்தியைக் கையாள்கிறார். மேடம் பவாரி விதவையான பிறகு கிராமத்தில் உப்புச் சப் பற்ற வாழ்க்கை வாழ்கிறாள். ஏறத்தாழ அறுபது அல்லது எழுபது பக்கத்துக்கு அந்த வாழ்க் கையினை குஸ்தாவ் ஃப்ளாபே வர்ணிக்கிறார். அந்த இடங்களில் அவர் உபயோகிக்கும் மெதுவான நடைபோடும் வார்த்தைகளா கவே அவர் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்தி இருப்பதாக விமர் சகர்கள் சொல்லுகிறார்கள். அந்தப் பகுதி படிப்போர்களைக் கொட்டாவி விடச் செய்கிறது என்பதில் சந்தேகமில்லை. விமர் சகர்கள் நாவலாசிரியர் வேண்டு மென்றே அப்படி எழுதினார்; அதற்கு மேடம் பவாரி கிராம வாழ்க்கையில் எப்படிப்பட்ட சோர்வான உணர்ச்சிகளைப் பெற்று வாழ்க்கை நடத்தினாளோ அதே உணர்ச்சி, வாசகர்களுக்கும் ஏற்பட வேண்டும் என்பதற்காக இந்த உத்தியை அவர் கையாண் டார் என்று சொல்லப்படுகிறது.

அந்த நாவலைப் படிக்கின்ற வர்கள் இந்த விமர்சனத்தை ஏற் றுக் கொள்ளாமல் இருக்க முடி யாது. ஏனெனில் மற்றப் பகுதி களில் விறுவிறுப்பாக எழுதிய நாவலாசிரியர் அந்தப் பகுதியை எழுதும்போது மட்டும் தடுமாறி னார் என்று கருத எந்த நியாயமும் இல்லை.

ஆக, அழகிகளை வர்ணிக்கும் போது 'ரோமாபுரி ராணி'களில் அண்ணா அலங்காரச் சொற்களைக் கையாளுகிறார். வறுமையினைச் சுட்டிக் காட்டும்போது நெஞ் சத்தைப் பிழியும் கூர்மையான வார்த்தைகளைத் தேர்ந்தெடுத் துக் கொள்கிறார். உன்னதமான இலக்கியவாதிகளால் மட்டும் தான் இந்த அரிய சாதனையினைச் செய்யமுடியும்.

பாடுபட்டோர் பயன் பெற முடியாமல் தவிக்கின்ற அவலத் தைச் சுட்டிக் காட்டுகிற அண்ணா, அழகி ஜூலியாவைப் பற்றிச் சொல்லும்போது 'குதூகலக் குமரி' என்று வர்ணிக்கிறார். அத் தோடு விட்டாரா? கேளுங்கள் அவரது வர்ணனையை:

''ஜூலியா, பெரிய ஜாலக்காரி! சிங்காரி! சிரித்துச் சித்ரவதை செய்யும் சொகுசுக்காரி! வெறும் அலங்காரி மட்டுமல்ல. பலே கைகாரி! சாதுர்யமான பேச்சுக் காரி! சரசத்திற்கு அதிகாரி! ஆடவர் கூட்டத்திற்கு அவள் ஓர் சிங்காரி! அகஸ்டஸின் மானத் தைக் கெடுத்த அபசாரி!''

ஆபாசத்தை நினைத்துக் கொண்டு படித்தால் ஜூலியா என்கிற சரித்திர நாயகியைப் புரிந்து கொள்ள முடியாது. ஆபாசம் மட்டுமேதான் காட்சி தரும். அளவுக்கு மீறிய சுக போகங்களால் ரோம் சாம்ராஜ்ய அரசியல்வாதிகள் சீரழிந்து போன கதையினைச் சொல்வது தான் 'ரோமாபுரி ராணி'கள்! அண்ணா அதைப் படிப்போர் மனத்தில் உணர்த்துவதில் மகத் தான வெற்றி பெற்றிருக்கிறார் என்பதில் சந்தேகமில்லை.

—தொடரும்

தமிழ் நாட்டில் கல்வி வளர்ச்சி

10 JUN 1978

திரு. சி. ஜி. ரெங்கபாஷ்யம், ஐ.ஏ.எஸ்.,
கல்வித் துறைச் செயலாளர்

தமிழ்நாடு அரசின் செலவில் கால் பகுதி கல்விக்குத்தான் செலவாகிறது. 1978-79ல் ஆகும் கல்விச் செலவு ரூ. 176 கோடியாக இருக்கும்.

1978-79ஆம் ஆண்டு தமிழ் நாட்டுக் கல்வி வளர்ச்சியில் ஒரு குறிப்பிடத்தக்க ஆண்டாக அமையும். இவ்வாண்டுதான் முதன் முதலாக மேல் உயர் நிலைப்பள்ளி வகுப்புகள் தொடங்கப்படுகின்றன. மேல் உயர்நிலைப் பள்ளி நிலையில் வேலை வாய்ப்புக்கு உதவும் பல படிப்புகளும் தொடங்கப்பட இருக்கின்றன.

நமது மாநிலத்தில் உள்ள 3,000 உயர்நிலைப் பள்ளிகளில் 800க்கு மேற்பட்டவற்றில் மேல் உயர் நிலைப்பள்ளி வகுப்புகள் தொடங்கப்படும். இதன் மூலம் 12 ஆண்டு அளவு கல்வி தமிழ்நாட்டில் பரவலாகி பல இடங்களிலும் அளிக்கப்பட இருக்கிறது. தமிழ் நாட்டில் உள்ள சிற்றூர் பேரூர்களில் உள்ள மக்கள் அனைவரும் கல்வி நீரோடையின் பயனை மேலும் சிறந்த முறையில் அடைய புதிய திட்டம் வழி வகுக்கும். மேல் உயர்நிலைப் பள்ளிக் கல்வியைச் சிறந்த முறையில் அளிக்கத் தகுந்த முன்னேற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

பள்ளிப் பாடத் திட்டங்களில் தேவைக்கு மிஞ்சிய பளுவை 1978-79 முதல் குறைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அறிவியல் போதனை வசதிகளைப் பெருக்கிட ஆய்வுக் கூடக் கருவிகள் வாங்கி அளிக்கப்படுகின்றன.

எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் பாடம் பாடமாகத் தேறுபவர்களும், மேல் படிப்புக்குச் செல்ல வகை செய்துள்ளது ஒரு முக்கியமான சீர்திருத்தமாகும்.

ஆங்கிலோ இந்திய மாணவர்களுக்கு 1978-79முதல்ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளில் இலவசக் கல்வி அளிக்கப்படும்.

முதியோர் கல்விக்கும் பள்ளி சாராக் கல்விக்கும் நிதி ஒதுக்கம் கூட்டப்பட்டுள்ளது. எழுத்தறிவின்மையைப் போக்க தீவிரத் திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

கிராமப்புற மாணவர்களுக்கான படிப்புதவித் தொகைகள் இதுவரை ஊராட்சி ஒன்றியம் ஒவ்வொன்றிலும் ஆண்டுதோறும் இரண்டு மாணவர்களுக்கு மட்டுமே புதிதாக வழங்கப்பட்டு வந்தது. 1978-79 முதல் இந்தப் படிப்புதவித் தொகை ஆண்டு தோறும் புதிதாக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 4 மாணவர்களுக்கு வழங்கப்படும்.

ஆசிரியர்களுக்குப் பல சலுகைகள் தரப்பட்டுள்ளன. சென்னையில் ரூபாய் 10 இலட்சம் செலவில் ஆசிரியர் இல்லம் கட்டப்படுகிறது. ஆசிரியர் குழந்தைகள் பொறியியல், மருத்துவம் முதலிய தொழில் படிப்புப் படிக்க ஆண்டு தோறும் 80 படிப்புதவித் தொகைகள் வழங்கப்படும். ஆசிரியர்களுக்கான ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம் முதலியவை தாராளமாக்கப்பட்டுள்ளன.

கல்லூரி ஆசிரியர்களுக்கு 1-1-74 முதல் பல்கலைக்கழக மானியக் குழு சம்பள விகிதங்கள் அமலாக்கப்பட்டுள்ளன. பணப் பயன் 1-1-77 முதல் தரப்படும்.

திருச்சிராப்பள்ளியில் ஒன்றும் கோயம்புத்தூரில் ஒன்றுமாக இரண்டு புதிய பல்கலைக் கழகங்களைத் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இவ்வாண்டு முதல் சுமார் 12 கல்லூரிகளுக்குத் ''தன்னாட்சி'' யுரிமை தந்துள்ளது ஒரு புதிய முயற்சியாகும்.

சென்னையில் தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் நிறுவுவதற்கான சட்டத்தை அண்மையில் தமிழ் நாட்டுச் சட்டமன்றம் நிறைவேற்றியுள்ளது.

இவ்வாண்டு மதுரையில் ஒரு இசைக்கல்லூரி தொடங்கப்படும். நாடகக் கலையை ஊக்குவிக்கவும், கிராமியக் கலைகளைப் பாதுகாக்கவும் திட்டங்கள் வகுக்கப்பட்டு உள்ளன.

தமிழ் வளர்ச்சிக்காகப் பல சிறந்த திட்டங்கள் அண்மையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வறுமையில் உழலும் தமிழறிஞர்களுக்கு ஓய்வூதியம் தரப்படுகிறது. தமிழ்ப் பாட வகுப்புகளைப் பிற மாநிலங்களில் தொடங்கி நடத்தும் பல்கலைக் கழகங்களுக்கும் பிற நிறுவனங்களுக்கும் இவ்வரசு தாராளமாக மானியம் தருகிறது. தமிழிலுள்ள சிறந்த இலக்கியங்களைப் பிற மொழிகளில் மொழி பெயர்த்து வெளியிடவும், பிற மொழிகளிலுள்ள சிறந்த நூல்களைத் தமிழாக்கம் செய்து வெளியிடவும் ஒரு திட்டத்துக்கு ஏற்பளிக்கப் பட்டுள்ளது. இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்துக்காக உமறுப் புலவர் பெயரில் மதுரைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் பதவி ஏற்படுத்தப்படும். பாவேந்தர் பாரதிதாசன் போன்றோர் விழாக்களை அரசே நன்முறையில்கொண்டாட ஏற்பாடு செய்தது. கவிஞர் கண்ணதாசன் அவர்கள் அரசின் ஆஸ்தான கவிஞராக நியமிக்கப்பட்டு கவுரவிக்கப்பட்டார். ஆண்டுதோறும் சிறந்த கவிஞருக்குப் பரிசு வழங்கவும் அரசு கருதியுள்ளது.

இவ்வாறு கல்வி வளர்ச்சிக்கும் தமிழ் வளர்ச்சிக்கும் இடையறாது பணி செய்வதில் அரசு இம்மாநிலத்தில் உள்ள ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகிய அனைவரின் ஒத்துழைப்பையும் விழைந்து நிற்கின்றது.

மேலுரமிட்டு மகசூல் பெருக்குவீர்!
மேலுரமிட மேன்மையான உரம்
ஸ்பிக் யூரியா

* அழகிய வெண்முத்து வடிவங்கள்
* அதிகத் தழைச்சத்து 46,2%
* மிகக் குறைவான பையூரெட்-0.3% தான்
* ஆசியாவிலேயே மிகப் பெரிய. ஸ்பிக் தொழிற்சாலையில் தயாராகிறது.

சிறப்பான யூரியா வேண்டுமா? **ஸ்பிக் யூரியா** என்று கேட்டுவாங்குங்கள்.

CAS SPIC 4 TM 77

தமிழ்நாட்டில் கல்லூரிக் கல்வி

திருமதி ஸ்டெல்லா சௌந்தரராஜ்,
கல்லூரிக் கல்வி இயக்குநர்

கல்வியின் முன்னேற்றமே ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தின் அடிப்படைத் தேவையாகும் என்பது அனைவரும் ஏற்றுக் கொண்ட கருத்தாகும். நாட்டின் முன்னேற்றத்திற்கும் செழிப்பிற்கும் கல்வி என்னும் முதலீடுதான் உண்மையிலேயே மேலானது. தமிழ்நாடு அரசு இந்த உண்மையை முழுமையும் உணர்ந்திருப்பதால், எல்லா நிலைகளிலும் அளவாலும் தரத்தாலும் கல்வியின் வளர்ச்சிக்குத் தொடர்ந்து முதலிடம் தந்து வருகிறது.

கல்லூரிக் கல்வியின் வளர்ச்சிநிலை

கல்லூரிகளின் எண்ணிக்கை காலப் போக்கில் கூடியதால், அனைத்துக் கல்விக்கும்பொதுவாக இருந்த கல்வித் துறை, பள்ளிக் கல்வித் துறை என்றும், கல்லூரிக் கல்வித் துறை என்றும் 1965இல் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. தமிழ்நாட்டில் உள்ள கல்லூரிகள் அனைத்தையும் ஆளும் பொறுப்பைக் கல்லூரிக் கல்வித் துறை ஏற்றுக் கொள்ளும் வகையில் உருவாக்கப்பட்டது.

கல்லூரிக் கல்வி இயக்குநரின் ஆளுகைக்கு உட்பட்ட கல்லூரிகளின் எண்ணிக்கை 1977-78இல் 235 ஆக இருந்தது. சென்னை நகரில் மட்டும் 29 கல்லூரிகள் உள்ளன. இவற்றுள் 20 கலைக் கல்லூரிகள் மேற்கண்ட 235 கல்லூரிகளில் 1977-78இல் இரண்டு இலட்சத்துப் பதினொன்காயிரம் மாணவர்கள் கல்வி பயின்று வந்தனர்.

கல்லூரிகளின் தரத்தை உயர்த்தல்:

கல்லூரி மாணவர்களின் கல்வித்தரம் மேம்பாடு அடைய வேண்டுமாயின், கற்பிக்கும் ஆசிரியரின் கல்வி ஆற்றல் மேலோங்கி இருக்க வேண்டும். இந்தக் கொள்கையில் பெரிதும் நாட்டம் கொண்டுள்ள தமிழ்நாடு அரசு, ''பல்கலைக் கழகக் கலையியற் குழு மேம்பாட்டுத் திட்டத்தை'' முழுமையுமாகப் பயன்படுத்திக் கொண்டு, பி. எச்டி., எம்.பில். போன்ற ஆராய்ச்சிப் பட்டப் படிப்பிற்காக வரும் நூற்றுக் கணக்கான விண்ணப்பங்கள் அனைத்தையும் எந்தச் சிறு தடங்கலுமின்றி உடனுக்குடன் அனுப்பி வைப்பதோடு, இத்திட்டத்தால் தனக்கு ஏற்படும் செலவையும் மகிழ்வோடு ஏற்றுக் கொள்கிறது.

இஃதன்றித் தமிழ்நாடு அரசும் தன் சார்பில் கல்லூரி ஆசிரியர்கள் பலரும் ஆண்டுதோறும் ஆராய்ச்சிப் பட்டம் பெறுவதற்கு வழி வகை செய்து பெரும் பொருள் செலவிட்டு வருகின்றது. இத்தகைய நெகிழ்ச்சிப் போக்கு, கல்லூரிக் கல்வி மேன்மையுற வேண்டும் என்பதில் அரசுக்கு இருக்கும் கொள்கைப் பிடிப்பையே காட்டுகிறது.

புதிய பல்கலைக் கழகங்கள்:

தற்போது நம் மாநிலத்தில், சென்னைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், மதுரைப் பல்கலைக்கழகம், வேளாண்மைப் பல்கலைக்கழகம் (கோவை) என நான்கு பல்கலைக் கழகங்கள் உள்ளன.

இம் மாநிலத்தில் உள்ள 108 கலைக் கல்லூரிகளில், 111 சென்னைப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்தவை; 77 மதுரைப் பல்கலைக்கழகத்தோடு இணைந்தவை.

ஒரு பல்கலைக்கழகம் சிறப்பாகவும் முழுமையாகவும், கல்வி சார்ந்த தன் பொறுப்புக்களைச் சீரிய முறையில் செயல்படுத்திப் பயன்தர வேண்டுமெனில், அதனுடன் இணையும் கல்லூரிகளின் எண்ணிக்கை 30 அல்லது 40க்கு மேல் இருத்தலாகாது எனப் பல்கலைக்கழகங்கள் பற்றிய கசேந்திர கட்கர் குழு பரிந்துரை செய்துள்ளது. அதன் அடிப்படையில் ஒன்றிரண்டு புதிய பல்கலைக் கழகங்களைத் தமிழ்நாட்டில் நிறுவ வேண்டியது இன்றியமையாததாகிறது. இப்போதுள்ள தெளிவான நிலையை அறிந்த பின் நம் மாநிலத்தில் மேலும் பல்கலைக் கழகங்களை அமைத்திடப் பல்கலைக் கழகப் பண உதவிக் குழு இசைவளிக்கக் கூடும். இந்நிலையில், தமிழ்நாடு அரசு திருச்சியிலும், கோவையிலும் பல்கலைக்கழகங்கள் துவங்க அக்கறைகொண்டு ஆவன செய்து வருகிறது.

மேலும், இம்மாநிலத்தில் தொழில் நுட்பப் பல்கலைக் கழகம்

ஒன்றை அமைக்க இவ்வரசு ஏற்கெனவே தீர்மானித்துள்ளது. அதற்கான சட்ட முன் வடிவம் ஒன்று முன்பே தயாரிக்கப்பட்டு உள்ளது. மைய அரசின் ஒப்புதல் பெற்று விரைவில் செயல்படவிருக்கும் அப் பல்கலைக்கழகம் அறிவுத் துறையில் மிக உயர்தரமான கல்வியும் ஆராய்ச்சியும் வளர்ந்திடப் பெரிதும் உதவும்.



அரசுக் கல்லூரிகள் :

தமிழ்நாட்டில் உள்ள 188 கலைக் கல்லூரிகளில் 51 கலைக் கல்லூரிகள் அரசால் நடத்தப்படுபவை. இவற்றுள் 38 ஆண்கள் கல்லூரி; 13 பெண்கள் கல்லூரி. ஆடவரும் மகளிருமாக 56,666 மாணவர்கள் பயில்கின்றனர். 3,721 ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர். 7 பயிற்சிக் கல்லூரிகளையும் அரசு நடத்துகிறது.

அரசின் கொள்கையாகிய சமுதாய நீதியைச் செயலாக்குவதில் அரசு கல்லூரிக்குப் பெரும் பங்கு சிறப்பாக உள்ளது. உயர்நிலைப் பள்ளிப் படிப்பிற்குப் பிறகு கல்வி பெற விருப்பமிருந்தும் தனியார் கல்வி நிறுவனங்களில் பெருஞ் செலவு செய்து படிக்கவியலாத, சமுதாயத்தின் நலிந்த ஒரு பிரிவினர், இவ்வரசுக் கல்லூரிகளைத் தான் பெரிதும் நம்பி உள்ளனர்.

அரசுக் கல்லூரிகளில் பயிலும் ஒவ்வொரு மாணவரும் செலுத்தும் படிப்புக் கட்டணத் தொகையோடு, ஒவ்வொரு மாணவர்க்கும் அரசு செலவிடும் தொகையை ஒப்பிட்டுப் பார்க்குங்கால், கல்லூரி மாணவர்களின் கல்விக்காக மாநில அரசு செலவிடும் தொகை எத்துணை என்பது வெளிப்படையாக விளங்கும்.

தனியார் கல்லூரிகள் :

தமிழ்நாட்டில் 137 தனியார் கலைக் கல்லூரிகள் உள்ளன. கல்லூரிக் கல்விக்கான மொத்த நிதி ஒதுக்கீடாகிய ரூ. 23.83 கோடியில் தனியார் கல்லூரிகளுக்குப் பண உதவியாக ஏறத்தாழ 11.5 கோடி செலவிடப்படுகிறது. இவற்றுள் 98 ஆண்கள் கல்லூரி; 39 பெண்கள் கல்லூரி. இருபால் கல்லூரிகளிலுமாக மொத்தம் 1,52,245 மாணவ, மாணவியர்கள் பயில்கிறார்கள். 8,253 ஆசிரிய, ஆசிரியைகள் பணியாற்றுகின்றார்கள். இவை போகப் பயிற்சிக் கல்லூரிகள் 16 தனியார் நடத்தி வருகின்றனர்.

உதவி பெறும் கல்லூரிகள்—
புதிய மானிய உதவி :

அண்மைக் காலம் வரையில் நடைமுறையில் இருந்த அரசின் நிதி உதவி வழங்கும் முறையினால் தனியார் கல்லூரிகளின் நிர்வாகங்கள் குறிப்பிடத் தக்க அளவு நிதி இடர்ப்பாடுகளுக்கு உள்ளாகி இருந்தன. ஆசிரியர்களுக்கு உரிய காலத்தில் சம்பளம் வழங்கக் கூடப் போதுமான பொருளாதார வசதி இல்லாமல் பல கல்லூரிகள் இன்னலுற்று இருந்தன. இதிலிருந்து ஆசிரியர்களைப் பாதுகாக்கவும், அதே நேரத்தில் நிர்வாகங்களைத் தம்முடைய பணியாளர்களுக்கு ஒழுங்காகவும் முழுமையாகவும் சம்பளம் கொடுக்கும் நிலையில் வைப்பதற்காகவும், அரசு ஜூன் '77 முதல் நிதிக் கொடைமுறையைச் செயல்படுத்தியது. இந்தப் புதிய முறையின்படி எல்லாத் தனியார் கல்லூரிகளிலும் நம்பிக்கை ஒளி வீசுகிறது. பொருள் முடையால் தள்ளாடி இருந்த கல்லூரிகள் இனி நிலையான நிர்வாகம் பெறும் வாய்ப்பினைப் பெற்றுள்ளன. உழைத்தும் ஊதியம் பெறுவதில் உறுதியில்லா நிலை பெற்றிருந்த கல்லூரி ஆசிரியர்களின் அவல நிலை அகமகிழ்வு ஏற்பட்டுள்ளது.

இதைத் தவிர மற்ற பலவகையான செலவினங்களில் துண்டு விழும் தொகையில் 80 விழுக்காடு வீதம் வரைஉதவித்தொகையாகக் கொடுப்பது என்னும் முறையை அரசு தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறது.

அரசுக்கல்லூரி ஆசிரியர்கள் பெறும் அதே சம்பள விகிதமும் பிற படிகளும், தனியார் கல்லூரியில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் கிடைக்குமாறு செய்யப்பட்டுள்ளது. தனியார் கல்லூரியில் பணியாற்றுபவருக்கும், தாராளமாக்கப்பட்ட ஓய்வு ஊதியத் திட்டத்தை நீட்டித்துத் தந்தது அரசின் ஒரு குறிப்பிடத் தக்க சாதனையாகும்.

தனியார் கல்லூரி—விடுப்பு விதிச் சலுகைகள் :

நீண்ட நெடுங்காலமாகத் தனியார் கல்லூரியில் பணியாற்றும் ஆசிரியர், ஆசிரியரல்லாதார்களுக்குத் திட்டவட்டமான விடுப்பு விதிகள் எதுவும் இருந்ததில்லை. சில தனியார் கல்லூரிகள் தாங்களாகவே சொந்தத்தில் சில விடுப்பு விதிகளை அமைத்திருந்தன. ஆனால், அவை முறையான தெளிவான விதி முறைகளின்பாற்பட்டவையல்ல. 1977ஆம் ஆண்டு வரையில் எந்தவிதமான விடுப்புப் பலன்களையும் அளிக்காமல், தனியார் கல்லூரிகளின் ஆசிரியர்கள் மற்றவர்களுக்கான உதவித் தொகைகளை அரசு கணக்கிட்டு வந்தது. 22-4-77 நாளிட்ட கல்வித் துறை அரசாணை எண். 899 மற்றும் அதைத் தொடர்ந்த சுற்றறிக்கைகளில் அரசு இந்தக் குறையைப் போக்கி யுள்ளது.

இதன்படி தனியார் கல்லூரிகளின் ஆசிரியர், ஆசிரியரல்லாத பணியாட்களுக்கான தாராளமாக்கப்பட்ட விதி முறைகளை அரசு வெளியிட்டது. பேறு கால விடுப்பு, மருத்துவ விடுப்பு, உரிமை விடுப்பு ஆகியவை இந்த விடுப்பு விதிகளில் இடம் பெற்று

உள்ளன. இவ்வாறு விடுப்பு கணக்கிடப்படுவதற்கு இந்தப் பணியாளர்களின் கடந்த காலப் பணிக் காலமும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்றும் அரசு ஆணை இட்டது.

பல்கலைக்கழக மானியக் குழுச் சம்பள வீதங்கள் :

தமிழ்நாடு அரசு எப்போதுமே கல்லூரி ஆசிரியர்களின் நலன்களை மேம்படுத்துவதிலும் அவர்களுடைய தேவைகளை நிறைவு செய்வதிலும் அக்கறை காட்டி வந்திருக்கிறது. அந்த வகையிலேயே, பல்கலைக்கழகப் பண உதவிக் குழுவின் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு, கல்லூரி ஆசிரியர்களின் புதிய சம்பள வீதம் 1-1-74இல் நிர்ணயம் செய்யப்பட்டு, இதன் மீதான நிதிப் பலன்கள் 1-1-77 முதல் வழங்கப்படுகிறது. இந்தப் புதிய சம்பள விகிதத்தைச் செயல்படுத்துவதனால் அரசுக்கு கோடிக்கணக்கான ரூபாய் செலவு ஏற்படுவதையும் பொருட்படுத்தாது, எல்லாக் கல்லூரி ஆசிரியர்களுக்கும் சம்பள விகிதங்களை அவர்கள் மனம் நிறைவடையும் வகையில் திருத்தி அமைக்க அரசு ஆணையிட்டது.

பயிற்றுசிரியர், விளக்குநர் பதவிகள் உயர்த்தல் :

முதுநிலைப் பட்டக் கல்வி பெற்று, 1-12-1977ல் மூன்று ஆண்டுகளும் அதற்கு மேலும், பயிற்றுசிரியர் அல்லது விளக்குநராகப் பணியாற்றியவர்களை, அந்தந்தத் துறைகளில் நேரடியாக உதவிப் பேராசிரியர்களாக நியமிக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. மூன்று ஆண்டுகளுக்குக் குறைவான பணிக் காலத் தகுதி உள்ளவர்கள் எப்போது அந்த மூன்று ஆண்டுக் காலத்தை நிறைவு செய்கிறார்களோ அப்போதிருந்து தன்னியல்பாக உதவிப் பேராசிரியர் நிலைக்கு உயர்த்தப்படுவர்.

நலிந்தோர்க்கான நல்ல திட்டங்கள்:

சிற்றூர்ப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பயின்று சிறந்த முறையில் தேர்ச்சி பெற்று விளங்கும் தாழ்த்தப்பட்ட மாணவர்களும் உளர். அத்தகைய கல்வி நலம் சான்ற மாணவர்கள் ஏழ்மையின் காரணத்தால் கல்லூரியில் பிற மாணவர்களோடு கூடிப் பழகவும் கூச்சப்படும் தாழ்வு மனப்பாங்கு கொண்டு விடுகின்றனர். அந்தக் கொடுமையை நீக்கி, நலிந்தோரும் , பிறரோடு சரி சமமாகக் கூடி வாழ்ந்திடத் தமிழ்நாடு அரசு பொருளுதவி செய்து வருகிறது. இந்த உதவிப் பணத்தில் மாணவர்கள் தங்கள் விருப்பம்போல் ஆடை, அணி முதலான எதையும் வாங்கிக் கொள்ளலாம். இத்திட்டத்தின் கீழ், தாழ்த்தப்பட்ட அல்லது பழங்குடி மாணவர்களுள் பள்ளி இறுதி வகுப்புத் தேர்வில் 60 விழுக்காடும் அதற்கு மேலும் மதிப்பெண் பெற்றுப் புகுமுக வகுப்பில் சேர்பவர்களுக்கும், புகுமுக வகுப்பில் முதல் வகுப்பில் தேர்வு பெற்றுப் பட்ட வகுப்பில் சேர்ந்து பயில்வாருக்குச் சிறப்பு உதவிப் பணமாக ரூ. 300 அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தினால் 1977-78ஆம் ஆண்டில் அரசுக்கு ஏற்பட்ட செலவு ரூ. 7.5 இலட்சமாகும். படிப்பில் மிகச் சிறந்து விளங்கும் தாழ்த்தப்பட்ட அல்லது பழங்குடி மாணவர்களுக்கு, அறிவியல் பாடங்களிலும் மொழிப் பாடங்களிலும் சிறந்தோங்கத் தனிப் பயிற்சி தரப்படுகிறது. இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 50,000 ஆகும். இப்பயிற்சி நான்கு வார காலம் கொண்டது.

தமிழ்நாட்டில் சென்னை உட்பட நான்கு இடங்களில் இப்பயிற்சி நடைபெறுகிறது. மேலும் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கல்லூரிகளிலும் பயிலும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மாணவர்கள் அனைவருக்கும் ஆண்டுதோறும் பல்கலைக் கழகத் தேர்வுகளைச் செம்மையாக எழுதுவதற்கு உதவியாக, அவர்களுக்குக் கூடுதல் பயிற்சி வகுப்புகள் நடத்தப் பெறுகின்றன.

புதிய போக்கும் எழுச்சியும்:

வரும் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், கல்வித் தரத்தை மேம்படுத்துவதில் தனிக் கவனம் செலுத்துவதே அரசுக் கல்லூரிகளின் வளர்ச்சியில் தலையாய கூறாக இருக்கும். தமிழ்நாட்டில் சென்னையிலுள்ள மாநிலக் கல்லூரியை மேம்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது. அக்கல்லூரியைக் கல்விச் சிறப்பு மிக்க, குறிப்பிட்ட முதுநிலைப் பட்டப் படிப்பு வகுப்புகளையுடைய நிறுவனமாக மாற்ற எண்ணங் கொண்டுள்ளது. அதற்கான செயல் முறைகள் 1978-79ல் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆய்வுக் கூடங்களின் வசதிகளை அரசுக் கல்லூரிகளில் மேம்படுத்தி அறிவியல் கல்வி சிறந்திட வகை செய்யும் திட்டமும் உள்ளது.

விலையுயர்ந்த புத்தகங்களை வாங்கவியலாத கல்லூரி மாணவர்கள் படித்துப் பயன் பெற வசதியாகப் பல பாடநூல் நூலகங்களும், புத்தக வங்கிகளும் திறக்கப்பட்டுள்ளன. எவ்வளவுதான் அறிவாற்றல் மிக்க மாணவராயினும் அவருக்கும் சில வசதிகளாவது செய்து தரப்பட வேண்டும். காலை முதல் மாலை வரையிலிருந்து கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்குக் களைப்பு நீங்கவும், பசியினால் ஏற்படும் அயர்வு போகவும் சில வசதிகள் தேவைப்படுகின்றன. அந்த நோக்கத்தோடுதான் அரசுக் கல்லூரிகளில் சிற்றுண்டிச் சாலைகள், சிற்றுண்டி அறைகள், சைக்கிள் நிறுத்தும் இடங்கள் ஆகியவை அமைத்துக் கொள்ளத் தாராளமாக நிதி ஒதுக்கப்பட்டு உள்ளது.

1979-80 முதல், கல்லூரிகளில் புகுமுக வகுப்புகள் இரா.



இளநிலைப் பட்ட வகுப்புகளும் முதுநிலைப் பட்ட வகுப்புகள் மட்டுமே இருக்கும். புகுமுக வகுப்பைக் கைவிடுவதால் கல்லூரி ஆசிரியர்கள் வேலையிழக்கவோ பதவி இறக்கம் பெறவோ மாட்டார்கள். இதில் தமிழ்நாடு அரசு கண்ணுங் கருத்துமாய் விழிப்போடு இருக்கிறது. கல்லூரி ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு அளிக்கவே, அனைத்துக் கல்லூரிகளிலும் புதிய புதிய பாடத் துறைகளை, இளநிலைப் பட்ட வகுப்புகளிலும், முதுநிலைப் பட்ட வகுப்புகளிலும் தொடங்கி அரசு ஊக்கமளித்து வருகிறது.

செமஸ்டர் முறை :

செமஸ்டர் முறை என்று அழைக்கப்படும். 'பகுதி பகுதியாய் முழுமையுறும் கல்வி முறை" தமிழ்நாட்டில் செல்வாக்குப் பெற்று வருகிறது. மதுரை மற்றும் சென்னைப் பல்கலைக் கழகங்களின் ஆளுகை எல்லைக்கு உட்பட்ட பெரும்பாலான கல்லூரிகள் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை தேர்வு நடத்தப்படும் செமஸ்டர் முறையைத் தங்கள் கல்வித் திட்டத்தில் பின்பற்றத் தொடங்கின. இத்திட்டத்தின் நன்மைகள் பயில்வோராலும் பயிற்றுவிப்பவராலும் நன்கு உணரப்பட்டன. ஒவ்வொரு ஆறுமாத முடிவிலும் இப்படியாக ஆண்டுக்கு இரு முறை குறிப்பிட்ட பாடங்களில் பல்கலைக் கழகத் தேர்வுகள் நடத்துவதால் மாணவர்களின் செயலாற்றல் பற்றிய தொடர்ச்சியான மதிப்பீடு பற்றி அறிய வாய்ப்பு ஏற்படுகிறது. மாணவர்களின் நினைவாற்றல் பற்றிய சுமை இத்தேர்வு முறையினால் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. ஆறு திங்களுக்கு ஒருமுறை தெரிந்தெடுக்கப்பட்ட பாடங்களில் மாணவர்கள் முழுக் கவனம் செலுத்தவும் இம் முறை உதவியாய் உள்ளது. தொடக்கத்திலிருந்தே மாணவர்களை விழிப்புணர்ச்சியோடு கல்வி பயில இந்த அக மதிப்பீட்டு முறை உதவுவதோடு உயர்ந்த மதிப்பெண்களைப் பெறவும் வழி வகுக்கிறது. 1978-79ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலுள்ள எல்லாக் கல்லூரிகளிலும் இம்முறை கொண்டு வரப்பட்டுவிடும்.

தங்கு தடையற்ற கல்விப் பணி :

கல்வியைத் தொடர்ந்து பெறுவது இப்போது பெரிதும் வலியுறுத்தப் பெறுகிறது. இந்த வகையில் மாலைக் கல்லூரிகளும் அஞ்சல் வழிக் கல்வித் திட்டமும், முதற்படிகளாகும். இந்த அஞ்சல் வழிக் கல்வித் திட்டம் கல்லூரிகளில் முறையாகப் பயிலும் வாய்ப்பில்லாப் பொதுமக்களால் பெரிதும் வரவேற்கப்பட்டு வருவது மகிழ்ச்சி தருவதாகும். அனைத்து இந்தியாவிலும் புகுமுக வகுப்பில் இலவசக் கல்வி அளிக்கும் ஒரு சில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். இந்தத் திட்டத்தால் அரசுக்கு ஆண்டுக்கு ரூ. 2 கோடி செலவாகிறது. இது மட்டுமன்றிப் பலவகைத் திட்டங்களின் கீழ், உதவித் தொகைகளும் தாராளமாக வழங்கப்படுகின்றன.

கல்லூரி நிலையில் தமிழ் வழிக் கல்வி கற்பிக்க, வேண்டிய வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன. தமிழ் வழிப் பயில்வோரை ஊக்குவிக்க அவர்களுக்கு ஊக்க உதவித் தொகை அளிக்கப்படுகிறது. இவ்வூக்கத் திட்டத்தால் அரசுக்கு ஆண்டுக்கு ரூ. 40 இலட்சம் செலவாகிறது. எனினும் இந்த முதலீட்டால் நல்ல கல்வி, சமுதாயப் பயன்கள் கிடைப்பதாக அரசு மன நிறைவு கொள்கிறது. தமிழ் மொழி வாயிலாகக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு உதவும் வகையில் நினைவூட்டுப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் இது வரை ஏறத்தாழ 3,000 ஆசிரியர்கள் பலனடைந்துள்ளனர். இதற்கு 1977-'78ஆம் ஆண்டில் பல ஆயிரம் ரூபாய் அரசால் ஒதுக்கப்பட்டுள்ளது.

கல்லூரிக் கல்வித் துறையின் '77-'78க்கான நிதி ஒதுக்கீடு, முந்தைய ஆண்டான '76-'77க்கான ஒதுக்கீட்டோடு ஒப்பிடும் போது ஏறத்தாழ இரு மடங்காகப் பெருகியுள்ளது. இவ்வளவு கூடுதல் செலவுக்கான காரணம் தமிழ்நாட்டின் உயர்கல்வியை மேம்படுத்துவதற்காகத் தமிழ்நாடு அரசு கொண்டுள்ள தணியாத ஆர்வமும் தளராத அக்கறையுமே ஆகும்.

ஏற்றமிகு எதிர்காலம் :

தமிழ்நாடு கல்லூரிக் கல்வித் துறையில் பல புதிய திருப்பங்களுக்கு 1977ஆம் ஆண்டு வித்து ஊன்றியது. 1978-79ஆம் ஆண்டிலிருந்து எல்லாக் கல்லூரிகளிலும் செமஸ்டர் முறைக் கல்வி ; கல்லூரி ஆசிரியர்களின் நிலையையும், கல்வித் தரத்தையும் உயர்த்த திருத்திய சம்பள வீதங்கள் அளிப்பது; பட்ட, மேற். பட்ட கல்வியினை மேம்படுத்த புகுமுக வகுப்பினைக் கல்லூரிகள் கைவிடுவது; கல்லூரி ஆசிரியர்கள் பெருமளவில் ஆராய்ச்சிப் பட்டம் பெற ஊக்கமளிப்பது ஆகிய புதிய திட்டங்களால் நம் கல்லூரிக் கல்விக்கு ஏற்றமிகு எதிர்காலம் அமைந்திடும் என்பது திண்ணம்.

உயர் கல்வித் துறையில் இழந்துவிட்ட முதலிடத்தை, அரசின் அயரா ஆர்வத்தாலும், கல்லூரிக் கல்வி இயக்ககத்தின் தளரா உழைப்பாலும், ;தமிழ்நாட்டு மாணவர்கள், விரைவில் பெறுவர் என விழைவோமாக!

கி.பி. 2000ல் பொது நூலகம்

—வே. தில்லைநாயகம்,
இயக்குநர்,
தமிழ்நாடு பொது நூலகங்கள்.

எச்சரிக்கை :

''எல்லோர்க்கும் எல்லாம்என்
றிருப்ப தான
இடம்நோக்கி நடக்கின்றது
இந்த வையம் ;
கல்லாரைக் காணுங்கால்
கல்வி நல்காக்
கசடர்க்குத் தூக்குமரம்
அங்கே உண்டாம்!''

என்று எச்சரிக்கை விடுத்தார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அன்று!

அதாவது நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் படிக்க வேண்டும்; இதற்கு உதவுவது மக்கள் கடமை; கடமை தவறியவர்களுக்குக் கடும் தண்டனை கொடுக்க வேண்டும்; இந்த நிலை ஏற்படாது செய்ய வேண்டியது அரசின் பொறுப்பு என்பது இதன் பொருள்.

முயற்சி :

இதை உணர்ந்து தான், படிக்கும் வயது அடைந்த குழந்தைகளுக்கு எல்லாம் கட்டாயக் கல்வி தர வேண்டும் என்கிறது இந்திய அரசியல் சாசனம்.

படியாதவர்களுக்கு —படிக்க வாய்ப்பு இல்லாது போனவர்களுக்கு — முதியோர் கல்வி, சமூகக் கல்வி, எழுத்தறிவிப்புக் கல்வி, உழவர் கல்வி, தொழிலாளர் கல்வி என்று—பல்வேறு முறையில் கல்வி வசதி செய்து தந்து இருக்கிறோம்.

இனி நாட்டு மக்கள் ஒவ்வொருவருக்கும் அடிப்படை அறிவு தரும் கல்வியை அடுத்த பத்து ஆண்டுகளில் தரத் திட்டமிட்டு வருகிறோம். இது தற்போது புறப் பள்ளிக் கல்வி (Non-formal Education) என்று அழைக்கப் படுகிறது.

அர்ப்பணிப்பு :

இந்த முயற்சியில் நூலகங்களின் பங்கு சிறப்பானது.

உருசியப் புரட்சிக்குப் பின்பு மக்களுக்கு முதியோர் கல்வி அளித்து, தொடர்ந்து நூலகங்கள் செயலாற்றியதை இங்கு நினைவு கூர்வது பயனுள்ளதாகும்.

எனவே, அறிவின் முன்னோடிகளாகிய நாம் நூலகப் பணியாளர்களும், நூலக அலுவலர்களும், அரசாங்கமும்—'நூல் உணர்வு பரவ, நூலக உணர்வு பெருக, நூலக இயக்க உணர்வு வளர அயராது உழைப்போம்; ஆர்வத்தோடு உழைப்போம்; ஒன்றாக உழைப்போம்; நன்றாக உழைப்போம்; என்று நூலகப் பணிக்கு நம்மை அர்ப்பணித்துக்கொள்ள வேண்டும். இதுவும் ஓர் இலட்சிய நூலகப் பணியாக அமைய வேண்டும். இது எப்படி?

கி.பி. 2000ல் நூலகம் :

சங்கநாதம் :

காலை 5.30 மணி! ஊர் மக்கள் தங்கள் தினசரி வாழ்க்கையைத் தொடங்க முயன்று கொண்டு இருக்கின்றனர்.



'நூ. . .ல. . .க. . .ம்' என்ற நீண்ட அழைப்பு ஒலி—சங்கொலிகேட்கிறது.தொடர்ந்து

'வாரீர். . .நீவிர். . .வாரீர்!
நூலகம் வெகுதூரம் இல்லை ;
வாரீர். . .நீவிர். . .வாரீர்!

என்ற இசை மிதக்கிறது ஊரின் மையத்தில் இருந்து.

ஆச்சரியமாய் இருக்கிறதா? நூலகமாவது — இசைபாடி அழைப்பதாவது . . . என்று? ஐயம் இல்லை; நூலகம்தான் அழைக்கிறது.

கி.பி. 2000ல் அமைய இருக்கும் இலட்சிய நூலகம் இயந்திர இணைப்புகள் பெற்ற நூலகம் — பணியாற்றப் போகும் ஒத்திகை தான் இப்போது செயல்படத் தொடங்கி உள்ளது.

வருகிறீர்களா? வாருங்கள் ; நூலகம் போகலாம்!

கடை திறப்பு :

காலை மணி 5.51. நூலகத்து வாயிலில் நூலகப் பணியாளர்கள் சிலர் வந்து நிற்கின்றனர். அனைவரும் ஒன்றாய் வாயிலில் முன்னர் இருக்கும் கறுப்புச் சதுரத்தில் நிற்கின்றனர். ஒருவர் கதவின் சாவித் துவாரத்திலே சாவியை வைத்துத் திருப்புகிறார்; கதவு திறக்க மறுக்கிறது!

ஆம்; மறுக்கத்தான் செய்யும். 'நூலகப் பணியாளர்கள் குறைந்தது இருபது பேராவது வந்தால் தான் திறக்கும்' என்ற நினைவு வரவே சாவியை வைத்திருப்பவர் திரும்பிப் பார்க்கிறார். பத்தொன்பது பணியாளரே இருக்கின்றனர். அதோ, மேலும் ஒருவர் வந்து சேர்கிறார்.

பளிச்சென ஓர் ஒளி —ஒலி. கதவின் வலது பக்கத்தில் 'கடை திறப்பு' என்ற பகுதியில் இருபது பேரின் படமும் தெரிகிறது. அன்றுகாலையில் யாரார் வந்தனர் என்பதைத் தானே படம் எடுத்துக் கணக்கிடும் கருவி காட்டிவிட்டுக் கதவு திறக்க உதவுகிறது.

இருபதின்மரும் உள்ளே செல்கின்றனர். அவரவர் பகுதிக்குச் சென்று, வேலையைத் தொடங்குகின்றனர்.

வாசகர் வருகிறார் :

மணி 6.00. நூலகத்தின் அழைப்பு ஒலி—இசை ஒலி —கேட்ட வாசகர் ஒருவர் வருகிறார்.

'வாசகர்வழி' என்று பொறித்த பச்சை வண்ண நடைபாதை வழியாக உள்ளே நுழைகிறார்.

மாணவர்களுக்கு அரசு துணையிருக்கும்

"அரசியல்வாதிகளின் கவர்ச்சிகரமான வார்த்தைகளில் மயங்கி, சவால்களில் ஏமாந்து மாணவப் பருவத்தை வீணடிக்கக் கூடாது. உங்கள் கருத்துக்களை நீங்களே தான் விவாதிக்க வேண்டும். நீங்களே தான் முடிவும் செய்ய வேண்டும். மாணவர்களுக்குள்ளேயே தான் உங்களுடைய தலைமை உருவாக வேண்டும். பொறுமையோடு விவாதியுங்கள். வன்முறையால் பிரச்சினைகளை முடிப்பதற்குச் சிறிதளவுகூட எண்ணக்கூடாது. உங்களுக்கு யாராவது அநீதி இழைத்தால் அதைத் தடுத்து நிறுத்துங்கள். அப்படித் தடுத்து நிறுத்தப்படும் முயற்சிகளுக்கு இந்த அரசு உங்களுக்கு உறுதுணையாக நிற்கும். அப்படியும் மாணவர்களுக்கு யாராவது அநீதி செய்ய முற்பட்டால் இந்த அரசு சட்டப்படி நடவடிக்கை எடுக்கும்!

[மாண்புமிகு முதல்வர் அவர்கள் 30-4-'78—ல்
சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி
விழாவில் ஆற்றிய உரையிலிருந்து....]

அங்கு அமைதியாக சிறு ஒளி—ஒலி வாசகர் பட்டி என்ற பலகையில் ஒன்று என்ற எண்ணும் வாசகர் உருவமும் தோன்றி மறைகிறது.

இப்புதிய நூலகத்தில் வாசகர் முகவரி எழுதிக் கையொப்பம் இட வேண்டியது இல்லை. இயந்திரம், வந்தவர்களைக் கணக்கிட்டுப் படமும் எடுத்து வருகிறது.

பட்டி அறை :

வாசகர், பட்டி அறைப(Catalogue Room) பக்கம் நகர்கிறார். பட்டி இழுவையை இழுக்கிறார். என்ன ஆச்சரியம்!

வாசகர் பார்க்க விரும்பிய ஆசிரியரின் நூல்பட்டி மட்டும் அல்ல; பதிவோடு நூலின் வண்ண உருவமும் சின்னஞ்சிறிய உருவிலே — ஆனால் — தெளிவாகத் தெரிகிறது.

வாசகர் ஆச்சரியத்தோடு பார்க்கிறார். விரும்பிய நூலை எடுக்க விரைகிறார் அடுக்கு அறைக்கு.

அடுக்கு அறை :

அடுக்கு அறை (Stock Room) யின் உள்ளே நுழைகிறார். அங்கு நூல்கள் பொருள் வாரியாக அடுக்கப்பட்டு உள்ளன.

இதில் ஓர் ஆச்சரியம்! பதிப்பகத்தில் இருந்து எவ்வித மேலட்டைப் படத்தோடு வெளியாகியதோ அப்படியே காட்சி தருகிறது. அதே சமயம் அதன் மேல் ஒளி ஊடுருவும் நூலக அட்டை!

பட்டி அறையில் கண்ட நூலின் உருவம் உதவ, சட்டென நூலைக் கண்டுபிடித்து எடுக்கிறார். நூலை எடுத்துப் புரட்டிப் பார்க்கிறார். கை நிறைந்து விடுகிறது.

வேண்டாத ஒன்றை அடுக்கில் திணிக்கிறார். 'அடுக்கில் வைக்காதீர்; அண்மையில் உள்ள மேசையில் வைக்க; தயவு செய்து மேசையில் வைக்க' என்பது மென்மையாகக் கேட்கிறது.

வாசகர் தவறு உணர்கிறார். தேவை இல்லாத நூலை மேசை மேல் வைக்கிறார். வேண்டிய நூல்களை மட்டும் எடுத்துக் கொண்டு படிப்பு அறைப் பக்கம் போகிறார்!

படிப்பு அறை :

படிப்பு அறையில் ஒவ்வொரு வாசகராக வந்து சேர்கிறார்கள். படிப்பு அறை நிறைந்துகொண்டு இருக்கிறது. ஒவ்வொருவரும் படிப்பதில், படித்துக் குறிப்பு எடுப்பதில் ஈடுபட்டு இருக்கின்றனர்.

அதோ! கிழக்கு மூலையில் ஒரு வாசகர் நூலின் பக்கங்களைப் புரட்டிக் கொண்டு இருக்கிறார். கொஞ்ச நேரம்தான் கழிந்து இருக்கும். முதல்நாள் இரண்டாம் காட்சி திரைப்படம் பார்த்ததன் விளைவு? கண்கள் சொக்குகின்றன.

பாவம்! ஒரு நிமிடத்தில் அவர் இருக்கை ஒரு அசைவு அசைகிறது. ஆம்! தூக்கத்தைக் கலைக்கிறது. இயந்திரத் தொடர்பு கொண்ட இருக்கை. அவரும் உணர்கிறார். எழுந்து சென்று முகத்தைக் கழுவிக் கொண்டு வருகிறார். படிப்பைத் தொடர்கிறார். பிறகு பருவ இதழ் அறைக்குச் செல்கிறார்.



பருவ இதழ் அறை :

பருவ இதழ் அறை (Periodicals Room) யில் ஏராளமான பருவ இதழ்கள் மொழிவாரியாக, பொருள் வாரியாக அடுக்கப்பட்டு உள்ளன.

கொலு பொம்மைகள் போல படிப்படியாக அடுக்கி—நிறைந்த இதழ்களை, குறைந்த இடத்தில், சிறந்த முறையில் தெரியும்படியாக அடுக்கிவைக்கப்பட்டுள்ளன, வாசகர்கள் பார்வைக்கு வசதியாக.

அதோ ஒரு வாசகர்! புதிது போலத் தெரிகிறது. மெல்ல மெல்ல அடி எடுத்து உள்ளே வந்து ஒரு ஓரமாக அமர்கிறார். சில இதழ்களைப் புரட்டுகிறார்.

பின் அமைதியாக ஆள் இல்லாத ஒரு மேசைக்குப் போகிறார். கொஞ்ச நேரம் ஆகிறது. அக்கம் பக்கம் பார்க்கிறார். அழகான படம் இருந்த ஒரு சிறிய இதழை எடுத்து இடுப்பினுள் செருகிக் கொள்கிறார். பாவம் அறியாமை!

'இருந்தும் இருந்தும் வாசகர் இப்படி
இழிவாய் நடந்தாரே! பாவம்
இழிவாய் நடந்தாரே!
இருக்கும் இதழை இடுப்பில் ஒளித்து
இழிவாய் நின்றாரே! ஐயோ!
இழிவாய் நின்றாரே!

என்று பாடுவது போல— ஆனால் பாடாமல்—இடுப்பில் உள்ள இதழில் இருந்து ஒரு ஒளி—ஒலி பளிச்செனத் தெரிகிறது; கேட்கிறது.

இதன் குறியீடு உணர்ந்த பருவ இதழ் அறையில் பணியாற்றும் பணியாளர் அவர் அருகில் வருகிறார். இடுப்பைத் தடவிப் பார்க்கிறார். இதழை வெளியே எடுக்கிறார். நூலகர் அறைக்கு அழைத்துச் செல்கிறார்

நூலகர் அறை :

மறைத்த இதழோடு மனம் வருந்தும் வாசகரையும், பணியாளரையும் கண்ட நூலகர் நடந்ததைப் புரிந்து கொள்கிறார்.

அவர் பார்வையே வாசகரை உலுக்குகிறது. வாசகர் இதழை மறைத்ததைத் தானே ஒப்புக் கொள்கிறார்; மனம் வருந்துகிறார். கண்கள் கலங்குகின்றன; மன்னிப்பு வேண்டுகிறார்.

தவறு செய்தவர் தவறை உணரும்போது மன்னிப்பு உண்டு என்பது உணர்த்தப்படுகிறது நடைமுறையில்.

'வேண்டியதைக் கேட்டால், கொடுக்கத்தானே இவை எல்லாம் வைத்து இருக்கிறோம்; இந்த இதழுக்கு ஒரு படி (Xerox) எடுத்துக் கொடுத்து அனுப்புக' என்கிறார் நூலகர்!

கொடுத்து வாங்கும் இடம் :

திருந்திய வாசகர் நூல்கள் கொடுத்து வாங்கும் இடம் (Counter) வருகிறார். நூலகர் சொன்ன செய்தியைச் செப்புகிறார்.

இதற்கு முன்னாலேயே நூலகர் இந்த விவரத்தைக் கொடுத்து வாங்கும் இடத்தில் பணியாற்றுபவருக்குச் சொல்லி விடுகிறார். எனவே, இதழின் அடிப்பாகத்தில் இருந்த ஒரு சிறு துணுக்கை அகற்றிக் கொள்கிறார். பிறகு வாசகர் கையில் இதழைக் கொடுத்து அனுப்புகிறார்.

வாசகர் நகர்கிறார். அந்த வாசகரையும் இதழ் படியையும் இணைத்துப் படம் ஒன்று பதிவாகிறது வெளி வாயிலிலே.

திருட்டுத் தனமாக எடுத்துப் போனால் ஒலி எழுப்பிக் காட்டும் பகுதித் துணுக்கு (Thief detector) —இதழிலிருந்து அகற்றிய துணுக்கு—வரிசையாக அடுக்கி வைக்கப்படுகிறது. எனவே, இதன் மூலம் திருட்டுப் போவது தடுக்கப்படுகிறது.

முடியுமா ?

இப்படி எல்லாம் — நூலகம் திறப்பது முதல், நூலகத்தின் பல்வேறு பகுதிகள் இயந்திர உதவியால்—நடக்குமா? நடக்க முடியுமா? என்ற கேள்வி இந்தக் கட்டுரையை—கதையை —கருத்தைப் படிப்பவர் ஒவ்வொருவர் மனத்திலும் எழுவது இயற்கை! எனவே, முடியுமா என்ற கேள்வி நியாயமானதுதான்!

கனவு :

இப்படி ஒரு கனவு. 1955ல் நூலகர் ஒருவருக்கு எழுந்தது. எழுந்த சூழ்நிலை என்ன?

பெரியதொரு நூலகத்தில்— அறிஞர்கள் படிக்கும் நூலகத்தில் கணக்கெடுப்பு நடந்து முடிந்தது.

பல நூல்கள் காணப்படவில்லை. காரணங்கள் ஆராயப்பட்டன. சமூகத்தில் காணப்படும் குறைபாடுகள் — நடைமுறைகள் — நூலகத்திலும் பிரதிபலிப்பதைக் காண முடிந்தது. இதற்கு மாற்று வழி என்ன?

இயந்திர உதவியை நாடும் எண்ணம் எழுந்தது. கனவு விரிந்தது; கனிந்தது. கனவு நனவு ஆகுமா?

நனவு :

அறிவியல் கனவுகள் பல நனவுகள் ஆகி வருவதைக் காண்கிறோம் இன்று நாம்!

அம்புலியை அழைத்த காலம் மாறிப் போயிற்று. அம்புலிக்கே போய் வந்து விட்டான் மனிதன்!

இம்முறையிலே இன்று மேனாடுகளில் பலவேறு இயந்திர உதவிகள் நூலகங்களில் பயன்படுத்தப்படுகின்றன. நூல்கள்—பருவ இதழ்கள் மைக்ரோ உருவில் பாதுகாக்கப்படுகின்றன. பருவ இதழ்கள் வாமன உருவில் — நுண் உருவில்—படச் சுருள் உருவில் காணக் கிடைக்கின்றன. வாசகர்களை எண்ணுவது, படம் எடுப்பது முதலியன நடக்கின்றன. நூல்களைக் கொடுப்பதும் திரும்பப் பெறுவதும் நிழல்படி முறையில் பதிவு செய்யப்படுகின்றன. நூல் திருடு போவதைத் தடுக்கு முறைகள் நடைமுறையில் வந்து விட்டன.

கால் பட்டால் கதவு திறக்கிறது. அண்ணாசாலையில் உள்ள ஆந்திரா பேங்கில்

நடத்துவது எப்படி ?

இதைச் செயல்முறையில் நடத்துவது எப்படி? முயன்றால் முடியாதது ஒன்றும் இல்லை.

முயற்சி செய்; முயற்சி செய்;
முடியும் மட்டும் முயற்சி செய்;
அயற்சியின்றி முயற்சி செய்;
அடையும்மட்டும்முயற்சிசெய்;

என்று முயற்சி வேண்டும்.

நமது நாட்டில் முழுமையான நூலகப் பணி நடக்க ரூ. 226 கோடி தேவைப்படும் என்று கணக்கிட்டார் நூலகவியல் முன்னோடி டாக்டர் அரங்கநாதன் சில ஆண்டுகளுக்கு முன்னர்!

இதில் ஒரு பத்துக் கோடியை ஒதுக்கினால் — ஒரு கோடியை ஒதுக்கினால் — முன்னோடியாகச் சில காரியங்களை நடத்தலாம். தேவை எல்லாம் மனம்தான்! மனம் கொண்ட ஆள்தான்! ஆளுக்கு உதவும் ஆதரவுதான்!

பாடுபடுவோம் !

ஊருக்கு ஒரு நூலகம் ; அயராது உழைக்கும்நூலகர்; ஆளுக்கு ஒரு நூல் — அதுவும் நான்கு பேர் — தாய், தந்தை, மகன், மகள் ஆகிய நால்வரும் நடு வீட்டில் சேர்ந்து அமர்ந்து நாணம் இல்லாது படிக்கக் கூடிய நல்ல நூல்; அடைய முடியாதது உண்டா? என்ற ஆர்வம் — இலட்சியம் — கொண்டு முயல்வோமானால் — பாடுபடுவோமானால் — மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை சொல்லியது போல — அறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி சொல்லியது போல — 'இப்படை தோற்கின் எப்படை வெல்லும்!'

1000 ஆசிரியர் பதவிகளுக்கு

அரசு அனுமதி

இந்தக் கல்வி ஆண்டில் வரும் ஜூன் முதல் தேதியிலிருந்து மேலும் 1,000 செகண்டரி கிரேட் ஆசிரியர் பதவிகளுக்குத் தமிழ்நாடு அரசு அனுமதி அளித்திருக்கிறது.

இந்த ஆண்டில் 6 லிருந்து 11 வயதுக்குள்ளும், 11 லிருந்து 14 வயதுக்குள்ளும் அதிகப்படியான மாணவர்கள் சேருவார்களாதலால் அவர்களுக்குக் கல்வி புகட்டும் தேவைக்காகப் புதிதாக மேற்கண்ட 1000 செகண்டரி கிரேட் ஆசிரியர் பதவிகளுக்கு அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது.

6 லிருந்து 11 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் விஷயத்தில் ஆரம்பப் பள்ளிகளிலும், 11-லிருந்து 14 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்காக உயர் ஆரம்பப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் ஆகியவைகளிலும் இந்த ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள்.

தேவையை அனுசரித்து மேற்கண்ட இரண்டு பிரிவிலும் எத்தனை எத்தனை ஆசிரியர் பதவிகள் இருக்க வேண்டும் என்பதைப் பள்ளிக் கல்வி இயக்குநர் தீர்மானிப்பார். மேலும், இவைகளில் ஆரம்பப் பள்ளிகளைப் பொறுத்தவரை சில பதவிகளில் ஹையர்கிரேடு பதவிகளாக மாற்றவும் அவருக்கு அதிகாரம் உண்டு. அரசாங்க, அரசாங்க (போர்டு), நகராட்சி, மாநகராட்சி, ஊராட்சி ஒன்றியம், தனியார் பள்ளிகள் ஆகியவைகளுக்கு இந்தப் பதவிகள் பகிர்ந்தளிக்கப்படும்.

மேற்கண்ட பதவிகளில் ஹையர் கிரேடு பதவிகளாக மாற்றப்படும் பதவிகளுக்கு ஹையர்கிரேடு ஆசிரியர்கள் சம்பள விகிதம் ரூ. 150—4—170—5—225.

செகண்டரி கிரேடு ஆசிரியர்கள், மற்றும் அதற்குச் சமமான கிரேடு ஆசிரியர்கள் சம்பள விகிதம்: ரூ. 210—5—245—10—325.

இவை தவிர வழக்கமான விகிதங்களில் பஞ்சப்படி, வீட்டு வாடகைப்படி முதலியவை உண்டு. இந்தப் பதவிகள் எல்லாமே நிரந்தரமானவை.

ஆரம்பப் பள்ளிகளில் செகண்டரி கிரேடு ஆசிரியர்களை நியமிக்கச்சில விதிகள் உண்டு. தலைமை ஆசிரியர் பதவி, 3-லிருந்து 5-ஆம் வகுப்புகளுக்கு ஆங்கிலம் கற்பிப்பது போன்றவைகளுக்காகத்தான் செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் நியமிக்கப்படுவது உண்டு. இந்த விதிகள் எப்படி இருந்தாலும், தற்போது புதிதாக நியமிக்கப்படும் செகண்டரி கிரேடு ஆசிரியர்களை 1-லிருந்து 5 வகுப்புகள் வரை பயன்படுத்திக் கொள்ளலாம்.

தொழுநோய்த் தடுப்பு!

டாக்டர் பி. ஈ. பெஞ்சமின்,
மருத்துவம் குடும்பநல இயக்குநர்.

பள்ளியிறுதியாண்டு பயின்ற மாணவர்களுக்கு, தொழு நோய்த் தடுப்புத் திட்டத்தின்கீழ், ஆறு மாதங்களுக்கு ஒரு தனிப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியின்போது அவர்களுக்குக் கீழ்க்கண்ட துறைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது :

(1) ஒருவருக்குத் தொழுநோய் உள்ளதா என்பதைக் கண்டறிதல்.

(2) தொழுநோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கும் முறை மற்றும் பல.

இந்தப் பயிற்சியின்போது இம் மாணவர்களுக்கு உபகாரச் சம்பளமாக மாதந்தோறும் ரூ. 75 ஆறு மாதங்களுக்குக் கொடுக்கப்படுகிறது. இப்பயிற்சி திருக்கோவிலூர், போலம்பாக்கம், சேத்துப்பட்டு, கரிகிரி (வட ஆர்க்காடு மாவட்டம்) ஆகிய நான்கு இடங்களில் கொடுக்கப்படுகிறது. ஆண்டொன்றுக்கு மொத்தம் 240 பேருக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

பயிற்சி முடிந்தவுடன் இவர்கள் 'தொழுநோய் உதவியாளர்கள்' என அழைக்கப்படுவர். இவர்கள் தமிழ்நாட்டில் உள்ள தொழுநோய்க் கட்டுப்பாட்டு நிலையங்களில் தொழுநோய் உதவியாளர்களாகச் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். ஆங்கிலத்தில் இவர்கள் (Para Medical Workers) என்று அழைக்கப்படுகின்றனர். இவர்களுக்கு ஊதிய விகிதம் ரூ. 250—10—400 என்ற அடிப்படையில் அளிக்கப்படுகிறது.

இவர்களுக்குத் தொழுநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்தின்கீழ் அளிக்கப்படும் வாய்ப்பு மக்களுக்குச் சிறந்த தொண்டாற்ற அளிக்கப்படும் சிறந்த வாய்ப்பு ஆகும். தொழுநோய்க் கட்டுப்பாட்டு நிலையங்கள், 20 அல்லது 15 துணை நிலையங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு துணை நிலையத்திலும் ஒரு தொழுநோய் உதவியாளர் பணி புரிகின்றார். இவர் துணை நிலையம் அமைந்துள்ள ஊரிலும் அதன் சுற்றுப்புற ஊர்களிலும் உள்ள சுமார் 20,000 மக்களுக்குத் தொழுநோய்க் கட்டுப்பாட்டின்கீழ் பணிபுரிகின்றார்கள். அவர்களுக்கு ஒதுக்கப்பெற்ற ஊர்களில் உள்ள மக்களில் யாருக்கேனும் தொழுநோய் உள்ளதா என்பதைக் கண்டறிந்து அவர்களுக்குச் சிகிச்சை அளிக்கின்றார்கள். பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை அல்லது மாதமொரு முறை அந்தந்த நிலையத்தைச் சேர்ந்த மருத்துவ அதிகாரி அத்தொழுநோயாளிகளுக்கு நேரடியாக, அந்தத் தொழு நோயாளிகள் உள்ள ஊர்களுக்கு வந்து சிகிச்சை அளிக்கிறார்கள்.



இந்தத் தொழுநோய் உதவியாளர்களுக்குத் தொழுநோய்ப் படியாக (Special Leprosy Allowance) ரூ. 30 மாதந்தோறும் கொடுக்கப்படுகிறது. இவர்களுக்கு ''மருத்துவம் அல்லாத மேற்பார்வையாளர்'' (Non-Medical Superviser) மற்றும் சுகாதாரக் கல்விப் பரப்புநர் (Health Educator) என்ற பதவி உயர்வுகளும் அளிக்கப்படுகிறது. தற்போது 1,250 தொழுநோய் உதவியாளர், தொழுநோய்த் தடுப்புத் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் பணிபுரிகின்றனர்.

—நன்றி : சென்னை வானொலி.



தமிழ்நாட்டில் கல்வி ஒலிபரப்புகள்!

மனசை ப. கீரன்

'கற்றில ராயினும் கேட்க' என்ற வள்ளுவன் வழங்கிய தாரக மந்திரம் கல்வி ஒலிபரப்புகளுக்கு முற்றும் பொருந்தும். 'நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம்' என்ற பாவேந்தரின் மணிமொழி நல்லதொரு ஒலிபரப்புக்கும் சாலப் பொருந்தும். சிறந்ததொரு ஒலிபரப்பு, அன்று கனிவும் அரிய அறிவியல் உண்மைகளையும் இணைத்துச் சொல்லுவதால், ஒரு பல்கலைக் கழகத்தின் நல்ல பணியையும் நயம்பட ஆற்றுகிறது வானொலி என்றால் மிகையில்லை.

தமிழகத்தில் வானொலியின் சாதனை :

அண்மைக் காலத்தில் ஆக்கப் பணியில் வானொலியின் பங்கு, பணியை உணர வேண்டுமானால் ஒருபுறம் பொருளாதார முன்னேற்றப் பாதையினைத் திரும்பிப் பார்க்க வேண்டும். ஆடுதுறை, ஐயாறு, கோவை வேளாண்மை ஆய்வு நிலையங்களில் கண்ட புரட்சிகர பட்டி தொட்டிகளிலுள்ள பாமர விவசாயிகளும் அறிந்து, தமது வயல்களில் செயல்படுத்தியுள்ளனர். அதனால் தமிழகம் எங்கும் பசுமைப் புரட்சியின் பலனை உள்ளங் கை நெல்லிக்கனி எனக் காண்கிறோம். பற்றாக்குறை நீங்கி அண்டை மாநிலங்கட்கும் உணவுப் பொருள்களை வழங்கியுள்ளோம். இந்தச் . சாதனை கைகூட வானொலியின் விவசாய ஒலிபரப்புகள் மிகப் பெரிதும் உதவியுள்ளன. அதைப் போலவே பங்களா தேஷ் போரின் போதும், தேர்தலின் போதும் மணிக்கு மணி ஒலிபரப்பான செய்தி அறிக்கைகளைப் பொது மக்கள் எப்படி எதிர்பார்த்தனர் என எண்ணிப் பார்த்தால் வானொலியின் வன்மை வெள்ளிடைமலையாகும்.

அண்மைக் காலத்தில், 1976 ஜூலை இடையில் கல்வி ஒலிபரப்புகள் தொடங்கியபோதும் சுமார் 5,000 பள்ளிகளில் மட்டுமே வானொலிப் பெட்டிகள் இருந்தன. அவ்வெண்ணிக்கை 1977ல் 22,000 ஆயிற்று. சில மாதமுன் வானொலி— தொலைக் காட்சி செயல்படுதல் பற்றி ஆய்ந்த வர்கீஸ் அறிக்கை இந்தியா முழுதிலும் 50,000 பள்ளிகளிலும், தமிழகத்தில் மட்டும் 29,000 பள்ளிகளிலும் வானொலிப் பெட்டிகள் இருப்பதாகக் குறிப்பிட்டுப் பாராட்டுகிறது. இவ்வாண்டு ஏப்ரல் முதலில் 31,800 பள்ளிகளில் வானொலிப் பெட்டிகள் இருந்தன. மொத்தமுள்ள 36,000 பள்ளிகளில் வானொலிப் பெட்டியே இல்லாத பள்ளியில்லை என்ற நிலை உருவாகும் நாளும் வெகு தொலைவில் இல்லை.

இந்தியாவில் வானொலி செயல்படத் தொடங்கிச் சுமார் 50 ஆண்டுகள் ஆகின்றன. கல்வி ஒலிபரப்புகள் துவங்கி 40 ஆண்டுகள் ஆகின்றன. கல்வி ஒலிபரப்புகளைத் தொடங்கிய நிலையங்களில் சென்னை நிலையத்திற்கு முதலிடம் உண்டு. 3-10-1938ல் சென்னை நிலையம் கல்வி ஒலிபரப்புகளைத் தொடங்கிற்று. அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் திருச்சிராப்பள்ளி நிலையமும் சென்னையோடு தோளோடு தோள் சேர்ந்து கல்விப் பணி புரியலாயிற்று.

இன்றைக்குத் தமிழகத்தில் சென்னை-திருச்சி நிலையங்கள் சேர்ந்து திட்டமிட்டு, வானொலிக் கல்வி நிகழ்ச்சிகளை அமைப்பதில் தமக்குள் பகிர்ந்து கொண்டு வழங்கி வருகின்றன. இரு நிலையங்களிலும் கல்வி ஒலிபரப்புக்கு எனத் தனி நிகழ்ச்சி அமைப்பாளர்கள், எழுத்தாளர்கள், அமைப்பு உதவியாளர்கள் உள்ளனர். சென்னை அல்லது திருச்சி நிலையம் வழங்கும் நிகழ்ச்சியினை நெல்லை, கோவை, புதுவை நிலையங்களும் அஞ்சல் செய்கின்றன.

புதுவை மாநிலமும் தமிழகப் பாடத் திட்டத்தையே பள்ளிகளில் நடைமுறைப்படுத்துவதால் புதுவை நிலையமும் தமிழக ஒலிபரப்புகளை அஞ்சல் செய்ய ஏதுவாயிற்று. புதுவை மாநிலமும் தமிழகக் கல்வித் துறையின் சாதனையைத் தொடர்ந்து, உயர்நிலைப்பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள் அனைத்திற்கும் வானொலிப் பெட்டிகளை வாங்கி வழங்கியுள்ளது.

40 ஆண்டுகளாகக் காணாத வளர்ச்சி தமிழகத்தில் கடந்த இரண்டே ஆண்டுகளில் ஏற்பட்டுள்ளது. இச்சாதனை எப்படி நிகழ்ந்தது?

பள்ளிக் கல்வி இயக்குநர் டாக்டர் எச். எஸ். எஸ். லாரன்ஸ் வெளிநாட்டுப் பள்ளிகளில் வகுப்புக்கு வகுப்பு வானொலிப் பெட்டிகள் உள்ளதையும், மாணவர்க்கு ஒலிபரப்புகளும், இசை நிகழ்ச்சிகளும் எழுச்சியூட்டுவதையும் கண்டுள்ளார். தமிழகமும் அவ்வாறு திகழ வேண்டும் என்று விரும்பினார். அவரது விருப்பத்திற்கேற்ப ஆய்வாளர்களும், தமிழகப் பெற்றோர்-ஆசிரியர் சங்கங்களும், அரிமா சங்கம்—ஜேஸீஸ் போன்ற தன்னியக்க நிறுவனங்களும், ஊரக வளர்ச்சித் துறையும், கொடையுள்ளம் கொண்ட பெருந்தகையாளர்களும் மனமுவந்து உதவியதாலேயே இச்சாதனை கைகூடிற்று. இது கண்ட பிற மாநிலங்களும் இதே பாதையைப் பின்பற்ற முனைகின்றன.

கல்வி ஒலிபரப்புகள் வகுப்பு ஆசிரியர் உதவியோடு கேட்குமாறு, பள்ளி நேரங்களிலேயே ஏற்பாடு செய்யப்படுகின்றன. 4-5ஆம் வகுப்புகளுக்காகத் தொடக்கப் பள்ளிகளுக்கான நிகழ்ச்சிகள் 12-10—12-30 மணிக்கிடையில் இருந்தன. பள்ளி மாணவர்கள் மதிய உணவுக்குச் செல்லுமுன்னரே நிகழ்ச்சிகள் முடிய வேண்டும் எனக் கருதி, 18-7-'78 முதல் தொடங்கும் தொடக்கப் பள்ளிகளுக்கான நிகழ்ச்சிகள் முற்பகலிலேயே 11-40—12-00க்குள் ஒலிபரப்பாகும்.

'கல்வி வெல்ல வேண்டுமானுல் தொடக்கக் கல்வி வெற்றி பெறல் வேண்டும்' என்ற கல்வியாளரின் கருத்திற்கேற்ப, கிழமைக்கு 4 நாட்கள் ஒலிபரப்பான தொடக்கக் கல்வி நிகழ்ச்சிகள் இனித் திங்கள் முதல் வெள்ளி வரை கிழமைக்கு 5 நாட்கள் ஒலிபரப்பாகும். இவற்றில் 2 நாட்களில் கதைப் பாடல்கள் வடிவத்தில் இசையோடு கலந்த நிகழ்ச்சிகள் இருக்கும். பிற நாள் நிகழ்ச்சிகளும் சிறுவர்க்குகந்த பாடல் ஒன்றுடன் தொடங்கும் அறிவியல், சுற்றுப் புறத்தூய்மை, உடல் நலம், ஆட்சி முறை போன்றவற்றிற்குச் சிறப்பிடம் உண்டு. வியாழக்கிழமைகளில் பாரதக் கதைகளும் கேட்கலாம்.

17—7—'78 பிற்பகல் 2-10க்குத் தொடங்கும் உயர்நிலை, நடுநிலைப் பள்ளி நிகழ்ச்சிகள் 25 நிமிட நேரத்திற்கு இருக்கும். 6 முதல் புதிய உயர்செகண்டரி முதலாவது வகுப்பு வரை 6 வகுப்புகளுக்கும் வாரத்திற்கு ஒரு நிகழ்ச்சி உண்டு. 6ஆம் வகுப்பிற்கான நிகழ்ச்சி மட்டும் பிற்பகல் 12.05—12.30 மணிக்கிடையில் இருக்கும். வகுப்பிற்கு ஒரு பாடம் என்றபடி நிகழ்ச்சிகள் இருக்கும். 7 முதல் 10 வகுப்பு வரை 2 ஆண்டுகளாக மாணவரிடையில் நல்ல வரவேற்புப் பெற்ற கட்டமாகப் பாடும் பயிற்சி அளிக்கும் பாடல் நிகழ்ச்சிகள் இருக்கும். பாரதியார், பாரதிதாசன், கவிமணி, நாமக்கல் கவிஞர், தமிழன்பன் பாடல்களும் நாட்டுப் பண், தமிழ்த்தாய் வாழ்த்து ஆகியவையும் இதில் இடம் பெறும். உடற்பயிற்சி—விளையாட்டுகள் பற்றிய உரைகளும் உண்டு.

எல்லா வகுப்புக்கான நிகழ்ச்சிகளிலும் மாணவர்கள் நேரில் பார்க்க வேண்டிய இடங்கள் பற்றிய 'சென்று பார்ப்போம்' நிகழ்ச்சிகளும், மாணவர்கள் உற்சாகமாகப் பங்குபெறும் 'சொல்லுங்கள் பார்க்கலாம்' வினடி வினு நிகழ்ச்சிகளும் அதிக அளவில் இருக்கும்.

சென்னை நிலையம் மட்டும் 20 வெளியூர்களுக்குச் சென்று ஆங்காங்கே 10 பள்ளிகளைச் சேர்ந்த 20 மாணவர்களைக் கூட்டி 'வினடி வினு' நிகழ்ச்சிகளை நடத்தும். இவ்வாறே திருச்சி நிலையமும் செய்யும். எல்லா நிகழ்ச்சிகளிலும் மாணவர்களின் குரல் ஒலிக்கும்.

வகுப்பு வாரியான ஆங்கில நிகழ்ச்சிகள் இல்லாவிடினும் மாணவரின் ஆங்கில அறிவை வளர்க்கும், தேசிய நிலையில் தயாரிக்கப்படும் ஆங்கில நிகழ்ச்சிகள் தொடக்க நிலை, உயர்நிலை என இரு வகையாகச் சூலை முதல் சனிக்கிழமைதோறும் காலை 11.15, மாலை 2.40 மணிக்கு 20 நிமிடத்திற்குக் கேட்கலாம். இவற்றை முறையே நடுநிலை, உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் கேட்டுப் பயன் பெறலாம்.

ஆசிரியர்களுக்காக ஆங்கிலப் பயிற்று முறைகள் பற்றிச் சனிக்கிழமைகளில் 12.05—12.30 மணிக் கிடையிலும் சமுதாயத்திற்குப் பயனுள்ள கல்வித் திட்டங்களைச் செயல்படுத்துவதில் ஆசிரியர் பங்கு பற்றிய கலந்துரையாடல்கள் 11.35—12.00 மணிக்கிடையிலும் ஒலிபரப்பாகும். முந்தியவை பெங்களூர் மண்டல ஆங்கில நிறுவனத்திலும், பிந்தியவை மாநிலக் கல்வி ஆய்வுப் பயிற்சி நிறுவனத்தாலும் அமைத்து வழங்கப்படுகின்றன.

கேட்டுப் பயன் பெறலாம்!

ஜூலை இடையில் நிகழ்ச்சிகள் ஆண்டு முழுவதற்கும் நாள்வாரியாக நடக்கும் தலைப்புக்களுடன் சுவரொட்டிகளும், நிகழ்ச்சி விவரங்களுடன் வகுப்பு வாரியாகக் கையேடுளும் அச்சிடப்பட்டு எல்லாப் பள்ளிகட்கும் மாவட்டக் கல்வி அலுவலர்கள் வழியாக வழங்கப்படுகின்றன.

தொடக்கப் பள்ளிகள் 11.40க்குச் சற்று முன் நாள்தோறும் மாணவர்களைக் கூட்டி அன்றைய நிகழ்ச்சி பற்றிச் சுருக்கமாகக் கூறி ஆர்வமூட்டி வானொலியைக் கேட்கச் செய்ய வேண்டும். 6 முதல் புதிய 11-ஆம் வகுப்பு வரை கிழமைக்கு ஒரு நாள் மட்டுமே நிகழ்ச்சி உண்டு. கல்வித் துறை பள்ளிகளைக் கேட்டுக் கொண்டுள்ளவாறு ஆண்டு முதலிலேயே பாட வேளைகளை வானொலி கேட்குமாறு அமைத்துக் கேட்க வேண்டும். சிறிது திட்டமிட்டு வானொலி கேட்க வைத்து மாணவர்க்குக் கல்வியில் ஆர்வமூட்டலாம்.

6 முதல் புதிய 11ஆம் வகுப்பு வரை நிகழ்ச்சியின் முடிவில் நிகழ்ச்சி பற்றிய வினவும் ஒலிபரப்பப்படும். அத்தகைய வினக்களுக்கு ஆண்டு முழுவதும் விடை எழுதும் மாணவரின் வகுப்புக்கு

1976-'77-ஆம் ஆண்டுக்கான கல்வி ஒலிபரப்புப் பரிசளிப்பு விழா (23—11—'77) காஞ்சிபுரத்தில் நடைபெற்றபொழுது மாண்புமிகு கல்வியமைச்சர் திரு. சி. அரங்கநாயகம் அவர்கள் உரையாற்றுதல்.

தொடக்கப் பள்ளி ஒலிபரப்பு எழுத்தாளர்களுக்கான பயிற்சி முகாமினை, கல்வி ஆராய்ச்சிப் பயிற்சிக்கான தேசியக் குழு, மாநிலக் குழு, சென்னை வானொலி நிலையம் கூட்டாக நடத்தின. அதில் பயிற்சி பெற்ற எழுத்தாளர்கள் தொடக்கப்பள்ளி மாணவர்களிடம் நேரிலேயே வகுப்புகள் நடத்தினார்கள்.

எல்லாப் பள்ளிகளுக்கும் வானொலிப் பெட்டி

தமிழ்நாட்டிலுள்ள எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் விரைவில் வானொலிப் பெட்டி வைக்கப்படும். ஏற்கெனவே 90 சதவிகிதப் பள்ளிகளில் இந்த வசதி இருக்கிறது.

பள்ளிக்கூடங்களுக்கான ஒலிபரப்பு நிகழ்ச்சிகளில் வரும் ஆண்டில் அதிகப்படியாக இசை, நாடகங்கள், வினா-விடை நேரங்கள் இடம்பெறும்.

வானொலி ஒலிபரப்புகளைக் கேட்போருக்கு ஊக்கமளிக்கும் பொருட்டு ஒரு பரிசுத் திட்டமும் அமல் நடத்தப்படும். இதில் சிறந்த மாணவருக்கும் பரிசு வழங்கப்படும். மாவட்டம் வாரியாகப் பள்ளிகளுக்கு இப் பரிசுகள் கிடைக்கும்.

பள்ளிகளுக்கான ஒலிபரப்பு நிகழ்ச்சிகளில் ஆசிரியர்களின் பங்கு குறிப்பிடத்தக்கது. பள்ளி ஒலிபரப்புக்கு எந்தெந்த விஷயங்களை இந்தக் கல்வியாண்டில் தேர்ந்தெடுப்பது என்பது பற்றி ஆராய நிபுணர்கள் குழுவொன்றும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

முறைசாராக் கல்வித்திட்டம் பற்றிய நிகழ்ச்சிகள் தமிழ்நாட்டில் 374 இடங்களில் ஒலிபரப்பாகிறது. இவற்றை மதிப்பீடு செய்து, கிடைக்கப்பெறும் அறிக்கைகள் ஊக்கமளிப்பதாக இருக்கின்றன.

2 பேருக்குப் பாிசுகள் வழங்கப்படும். நிகழ்ச்சிகளை மதிப்பீடு செய்து எழுதுவதில் சிறந்த உயர்நிலை, நடுநிலைப் பள்ளிகள் ஒவ்வொன்றுக்குச் சுழற்கேடயம் தரப்படுகிறது.

1978-'79ஆம் கல்வியாண்டு முதல் தொடர்ந்து நிகழ்ச்சிகள் பற்றிய கருத்துக்களைத் தெரிவிக்கும் தொடக்கப் பள்ளிகளுக்கு —வருவாய் மாவட்டம் ஒவ்வொன்றிலும் ஒரு தொடக்கப் பள்ளிக்குக் கோப்பை வழங்கப்படும்.

பள்ளி விழாக்கள், வெள்ள நிவாரணம் போன்ற பொதுப் பணிகள் பற்றிய செய்திகளையெல்லாம் சுருக்கமாகப் பள்ளிகள் சென்னை-திருச்சி நிலையங்களுக்கு உடனுக்குடன் எழுதலாம். அவை அவ்வப்போது கல்வி நிகழ்ச்சிகளில் ஒலிபரப்பப்படுகின்றன. வானொலி, மக்களின் கருவி. அதைப் பள்ளிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்—ஆசிரியர் சங்கங்கள் யாவும் தோளோடு தோள் நின்று நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

முதற் பரிசு

புருக்கள்

திரு. எம். கங்காதரன்,
சன்னதித் தெரு, பட்டீஸ்வரம் அஞ்சல்,
கும்பகோணம்.

புருக்கள்

இட்டதோர் தாம ரைப்பூ
இதழ்விரிந் திருத்தல் போலே
வட்டமாய்ப் புருக்கள் கூடி
இரையுண்ணும் அவற்றின் வாழ்வில்
வெட்டில்லை குத்து மில்லை
வேறுவே றிருந்த ருந்தும்
கட்டில்லை; கீழ்மேல் என்றும்
கண்மூடி வழக்க மில்லை.

சிற்றூர்

புதுச்சேரி என்று சொல்லிப்
போம்வழி கேட்டேன், பையன்
'இதைத்தாண்டி அதோயி ருக்கும்
பழஞ்சேரி இடத்தில் தள்ளி
ஒதிச்சாலை யோடு சென்றே
ஓணான் பச்சேரி வாய்க்கால்
குதிச்சேறிப் போனால் ஊர்தான்
கூப்பிடு தொலைவே' என்றான் !

ரண்டாவது பரிசு

சிற்றூர்

திரு. வி. கணேசன்,
16, மெக் நிக்கல்ஸ் ரோடு,
சேத்துப்பட்டு, சென்னை—31.



மூன்றாவது பரிசு

குன்றம்

திரு. ஆர். ரங்கநாதன்,
அரசு உயர் நிலைப் பள்ளி,
நங்கநல்லூர், சென்னை—61.

குன்றம்

குன்றத்தின் 'சாரல்' குன்றின்
அருவிகள் குதிக்கும் 'பொய்கை'
பன்றிகள் மணற்கி ழங்கு
பறித்திடும் 'ஊக்கம்' நல்ல
குன்றியின் மணியால், வெண்மைக்
கொம்பினால் அணிகள் பூண்டு
நின்றிடும் குறத்தி யர்கள்
'நிலாமுகம்' பார டாநீ.

ஆறுதல் பரிசு

காடு

செல்வி நளினி சந்தான கோபாலன்,
29-சி, எட்வர்டு எலியட்ஸ் ரோடு,
சென்னை—4.

காடு

வன்மைகொள் பருக்கைக் கல்லின்
வழியெலாம் பள்ளம், மேடு!
முன்னாக இறங்கி ஏறி
முதலைகள் கிடப்ப தைப்போல்
சின்னதும் பெரிது மான
வெடிப்புகள் தாண்டிச் சென்றேன்!
'கன்மாடம்' எனும்பு ருக்கள்
கற்களைப் பொறுக்கக் கண்டேன்!

63 வயதினிலே!

முதியோர் கல்வி, இரவுப் பள்ளிக்கூடங்கள் இந்தியாவில், குறிப்பாகத் தமிழகத்தில் பரவி வருகின்றன. இந்தத் துறையில் அமெரிக்காவின் அனுபவம் சற்றுக் கூடுதலாகவே இருக்கிறது; பட்டப் படிப்புக்குக் கூட, 60 வயதுக்கு மேல் ஆனவர்கள் இரவுக் கல்லூரிகளிலும், சாதாரணக் கல்லூரிகளிலும் சேர்ந்திருக்கின்றனர்.

தாத்தாவும் பாட்டியும் படிப்பது ஒருபுறம் இருக்க, பள்ளிப் படிப்பை இடையிலே விட்டுவிட்டு ஏதோ ஒரு வேலையில் அமர்ந்து பின்னர் வேலை உயர்வுக்கு வழியில்லாமல் போன வாலிபக் குமரிகளுக்கும், இளைஞர்களுக்கும் இந்தப் பள்ளிக் கூடங்கள் வரப்பிரசாதமாக இருக்கின்றன.

'கல்வி கரையில' என்பார்கள்; 'கற்றது கைம்மண்ணளவு, கல்லாதது உலகளவு' என்றும் சொல்வார்கள். ஆகவே, படிப்புக்கு வயது ஒரு தடையாக இல்லை. அதை என்றும், எப்போதும் படிக்கலாம்.

ஓய்வு நேரத்தில் பட்டப் படிப்புக்கு முதியோர்களும் இளைஞர்களும் வரிந்துகட்டிக்கொண்டு இரவுக் கல்லூரிகளில் சேரத் துடிக்கின்றனராம். எங்கே தெரியுமா? அமெரிக்காவில்!

இங்குள்ள ஜான் டாம்ப்கின், லாரா டாம்ப்கின் என்ற முதியவர்களுக்குப் படிக்க வேண்டும் என்பதில் கொள்ளை ஆசை. இவர்கள் நியூயார்க்கிலே யாங்கர்ஸ்க்கு அருகில் இருக்கும் எலிஸபெத் ஸேட்டன் கல்லூரியில் சேர்ந்து படிக்கின்றனர். லாரா, மொழிகள் கற்கிறார்; ஜான் வரலாறு, இலக்கியம் முதலியவற்றில் பட்டம் பெறப் படிக்கிறார்.

'நள்ளிரவு உயர்நிலைப் பள்ளி' என்பது மிசிகனில் வான் டைக்கில் உள்ளது. 47 வயதான டாரிஸ் வாக்கர் என்ற பெண்மணி உயர்நிலைப் பள்ளித் தேர்வுக்குப் படிக்கிறார். பள்ளிநேரம் நள்ளிரவு முதல் காலை 3 மணி வரை! எனவே, அருகில் உள்ள ஃபோர்டு மோட்டார் தொழிற்சாலையில் இருக்கும் தொழிலாளர்கள் இரவு 11 மணிக்கு வேலை விட்டதும் இப்பள்ளிக்கு வருகின்றனர்; காலை 3 மணி வரை படிக்கின்றனர். 8வது படிவம் வரை படித்து விட்டு பள்ளி விட்டவர் டாரிஸ், இப்பொழுது இந்த வாய்ப்பு கிடைத்தது குறித்து மகிழ்ச்சி அடைகிறார்.

முதியோர் கல்வி, மாலைப் பள்ளி, இரவுப் பள்ளி என்று பல பெயர்களைக் கொண்டது இக்கல்வித் திட்டம். 'கல்வி என்பது இளைஞர்களுக்கே உரித்தான ஒன்று' என்ற கருத்தினைச் சிதற அடித்து விட்டது இது.

இருபது வயதான இளைஞர் ஒருவர், கல்லூரியில் படிக்கிறார். தரைகளை மெழுகுவது, அறைகளைச் சுத்தம் செய்வது, ஜன்னல்களைக் கழுவுவது போன்ற வேலைகளைச் செய்து அலுத்துப்போய் வேறு வேலைக்குப் போகமுடியாது என்ற நிலையை அடைந்தபோது தனது கல்வி அறிவை வளர்த்திட முடிவு செய்து, இப்போது உயர்நிலைப் பள்ளித் தேர்வுக்குச் சமமான ஜி.கி.டி. தேர்வுக்கு எழுதப் பள்ளியில் சேர்ந்துள்ளார்.

கல்லூரியில் சேர்ந்த புதிய மாணவர்கள் அனைவருமே வேலை உயர்வு காரணத்திற்காகச் சேர்ந்தவர்கள் அல்லர்.

உதாரணமாக, ஹாரி கெர்ஷ்: 63 வயதான இளைஞர் இவர்! புகழ்பெற்ற ஹார்வர்டு பல்கலைக் கழகத்தில் சேர்ந்திருக்கும் முதல் ஆண்டு மாணவர். இவர் கூறுகிறார்: " 'ரிடயர்' ஆனவன் நான், எவ்வளவோ கேளிக்கைகளிலும் விளையாட்டுக்களிலும் புகுந்திருக்கலாம். ஆனால், என் மனம் அவற்றை நாடவில்லை. முறையான கல்வியை இழந்தவன் நான். அதனை இப்பொழுது ஈடு கட்ட விரும்புகிறேன். புதிய வேலைக்கோ தொழிலுக்கோ நான் இப்பொழுது படிக்கவில்லை."

"20 வயதான குழந்தைகள் இருக்கும் சூழ்நிலையில், 60 வயதினைத் தாண்டிய நான் படிப்பது சற்று சங்கடமாகத்தான் இருக்கும். ஆனால், அறிஞர்களின் உரைகளைக் கேட்பதும், சிறந்த நூல்களைப் படிப்பதும், அறிஞர்களுடன் உரையாடுவதும் உள்ளத்துக்கு நிறைவைக் கொடுக்கின்றன."

ஹிக்கின் போதாம் 63 வயதானவர். இலக்கியம் கற்க டெட்ராய்ட்டில் இருக்கும் வேன் மாநிலப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்திருக்கிறார். "இந்த வயதிலே புதிய வேலை தேடப் போகிறேனா என்ன? கற்றுக் கொள்ள எவ்வளவோ இருக்கின்றன. சிறிதளவாவது கற்றுக் கொள்ளலாமே என்றுதான் கல்லூரியில் சேர்ந்திருக்கிறேன்" என்கிறார்.

இருவருமே பட்டம் பெறுவதற்கே படிக்கின்றனர். வேலையில் முன்னேற்றம் பெறுவதற்கோ, பட்டம் பெறுவதற்கோ நோக்கம் இல்லாமல் கல்லூரியில் சேர்ந்திருக்கும் வயது வந்தவர்கள் நிறையப் பேர் இருக்கின்றனர். கல்வி கற்கும் மகிழ்ச்சியை அனுபவிக்கவே சேர்ந்துள்ளதாக இவர்கள் கூறுகின்றனர். இவர்களுக்குத் தனிப் பாடங்கள் இருக்கின்றன. 'ஓய்வு நேரத் திட்டம்' என்பது தான் இதன் பெயர். ஓய்வு நேரக் கல்வி, முதியோர் கல்விக் கழகங்களில் மட்டுமல்ல, அமெரிக்காவில் இருக்கும் ஆயிரத்திற்கு மேற்பட்ட சமூகக் கல்லூரிகளிலும் உள்ளன.

மதிய உணவு நேரத்திலும் பாடத் திட்டம் ஒன்று நடக்கிறது. பாஸ்ட்டன் நகரில் இருக்கும் வணிகர்கள், தொழிலதிபர்கள் இதில் பங்கெடுத்துக் கொள்ளச் சௌகரியமாக இருக்கிறதாம்.

"டூ ஸம்திங் டிஃபரண்ட் இன் கார்ப்பொரேடட்" என்பது ஒரு நிறுவனத்தின் பெயர். (முற்றிலும் மாறான வேறு ஏதாவது செய்யுங்கள்). இதுவும் ஒரு முதியோர் கல்வி நிலையமே. இதில் 3,500 மாணவர்கள் படிக்கின்றனர்.

மாணவர்களின் வசதிக்கு ஏற்ப அவர்களுக்குப் படிப்பு நேரம் ஒதுக்கப்படுகிறது.

"இந்நிலையம், இன்னுமொரு புதுமை முறையைக் கையாண்டு உள்ளது. மகளிர் சங்கங்கள், விளையாட்டுச் சங்கங்கள், டெட்ராய்ட் பெருநகர் நிலையம், ஒய்.எம்.சி.ஏ. முதலியவற்றின் வழியாகவும் கல்வித் திட்டங்கள் வழங்குகிறது. மக்கள் விரும்பும் வேறு இடங்களிலும் கூட, கல்வி வழங்க இது தயாராக இருக்கிறதாம்.

ஒரு மாணவர் கூறுகிறார்: "எனக்குப் பிடித்தமான பாடம் படிக்க ஒவ்வொரு இடமாக அலைய வேண்டியதில்லை."

—தகவல்: அமெரிக்கத் தகவல் நிலையம், சென்னை.

அதிருஷ்டத்தின் இன்குரல் கேட்டிட

இன்றே வாங்கிடுவீர் தமிழ்நாடு பரிசுச் சீட்டை.

2 முதல் பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 50,000

மாமல்லபுரம்

3 இரண்டாவது பரிசுகள்
ஒவ்வொன்றும் ரூ. 10,000
5 மூன்றாவது பரிசுகள்
ஒவ்வொன்றும் ரூ. 5,000
மற்றும், மூன்று வரிசைகளில்
(BO,BP,BQ), ஆறுதல் பரிசுகள்
உட்பட ஏராளமான பரிசுகள்.

மொத்தம் ரூ. 3,90,000
மதிப்பு கொண்ட 2,655 பரிசுகள்.

இக்குலுக்கலிலிருந்து கிடைக்கும் வருவாய் 4,000 கிராமங்களுக்குக் குடிநீர் வசதியளிப்பதற்காகப் பயன்படுத்தப்படும்.

குலுக்கல் தேதி: 20-6-1978

பரிசுச் சீட்டின் விலை: ரூ. 1.

தமிழ்நாடு பரிசுச் சீட்டு



வெளியிட்டோர்:
இயக்குநர்,
தமிழ்நாடு பரிசுச்சீட்டுத் திட்டம்,
சென்னை 600 002

DIPR/25041/78A TAM



திரைப் படத் தொழில் வளர....வாழ...!

திரைப்படத் தொழில் நுட்பக் கல்லூரி 1948ஆம் ஆண்டு துவக்கப்பட்டு, கணிசமான வளர்ச்சி பெற்று வந்துள்ளது. திரைப்படத் தயாரிப்பு சம்பந்தப்பட்ட அனைத்துப் பிரிவுகளிலும் பயிற்சியளித்து, தேர்வு நடத்தி வெற்றி பெற்றோர்க்குச் சான்றிதழ் வழங்குதல், கல்வியை வளர்ப்பதிலும் கலையின்பத்தை நல்குவதிலும் திரைப்படத்திற்குள்ள சக்தியை மக்களுக்கு உணர்த்துதல், திரைப்படத் தொழில் பற்றிய ஆய்வு நிகழ்த்துதல் ஆகியவை இக்கல்லூரியின் குறிக்கோள்களாகும்.

வேலை வாய்ப்பு :

அரசு அலுவலர்களையும், திரைப்படத் தொழில் தொடர்புடைய அரசுச் சார்பற்ற தொழில் நுட்ப வல்லுநர்களையும் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்று இக்கல்லூரிக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கி வருகிறது.

படப்பிடிப்பு, ஒலிப்பதிவு மற்றும் ஒலிப் பொறியியல், படச்சுருள் கழுவுதல், படம் இயக்குதல், திரைக்கதை வசனம் எழுதுதல், படத் தொகுப்பு, நடிப்பு ஆகியவற்றில் இங்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

தொலைக்காட்சிக்கான திரைக் கதை வசனம் எழுதுதல், படப் பிடிப்பு, ஒலிப் பொறியியல் ஆகியவற்றில் பயிற்சியளிக்கும் திட்டமொன்று ஆய்வில் உள்ளது. மேலும், ஒப்பனைக் கலையில் சான்று இதழ்ப் பயிற்சி (டிப்ளமா) பாடப் பிரிவு துவக்குவதற்கும் ஒரு திட்டம் உள்ளது.

இக் கல்லூரியில் பயிலும் மாணவர்கள் திரைப்படத் தயாரிப்பு நிறுவனங்களிலும், ஆய்வுக் கூடங்களிலும், தொலைக்காட்சி நிலையங்களிலும் வேலை வாய்ப்புப் பெறலாம்.

படச் சுருள் காப்பகம் :

1977-78ஆம் ஆண்டில் படச் சுருள் காப்பகம் ஒன்று நிறுவுவதற்காக ரூ. 1.40 இலட்சம் அரசால் வழங்கப்பட்டுள்ளது. பல நல்ல தரமான பழைய படங்கள் பழுதுபட்டதாலும், பாதுகாக்கப்படாததாலும் சேதமடைந்து விடுகின்றன. ஆகவே, அப் பழைய படங்களை விலைக்கு வாங்கியும் இலவசமாகக் கிடைத்தால் அவற்றையும் சேர்த்து, வருங்காலத்தினருக்காகப் பாதுகாத்து வைக்கும் நோக்குடன் இக்காப்பகம் அமைக்கப்படுகிறது.

படப் பிடிப்புத் தளம் :

இக்கல்லூரியிலுள்ள படப் பிடிப்பு வசதிகளும், படப்பிடிப்புத்தளமும் படம் தயாரிக்கும் தனியாருக்கு வாடகைக்கு வழங்கப்படுகின்றன. இப்படி வழங்குவதால், அரசுக்கு வருவாய் கிடைப்பதுடன், புகழ்பெற்ற படத் தொழில் வல்லுநர்களின் செயல் திறன்களை நேரில் அறியவும், அவர்களுடன் படப்பிடிப்பில் பங்கு கொள்ளவும் மாணவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கிறது.

படத் தயாரிப்பாளர்களுக்குத் தேவைப்படும் இப்படப் பிடிப்புத் தளம், முழுமையாகப் பயன்படுத்தப்படுவதற்குரிய வகையில் வசதிகளைப் பெருக்குவது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

படங்களுக்குப் பரிசு :

குடிப் பழக்கத்தினால் விளையும் கேடுகள், தேசிய ஒருமைப்பாடு, நாட்டுப் பற்று போன்ற தேசிய

எங்கள் சேமிப்புத் திட்டங்கள் அனைத்தும்
தங்கள் வாழ்வின் முக்கியமான கட்டங்களில்
கைகொடுத்து உதவிடும்!

மேலும், மேலும் உங்கள் சேமிப்பு வளரத்

துணையாகும்!

TNSC BANK

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிட்.,

(ஒரு ஷெட்யூல்டு வங்கி)

379, என். எஸ். ஸி. போஸ் ரோடு, சென்னை-600 001.
(தொலைபேசி எண். 20367)
மற்றும் சென்னையில் உள்ள அதன் கிளைகள்.

சேயின் நலனே தாயின் பணி.
உங்கள் நலனே எங்கள் பணி.

உடற்பயிற்சி ஆசிரியர்கட்குச் சீருடை அலவன்ஸ்

தமிழ்நாட்டில் முதல் தடவையாக உடற் பயிற்சிக் கல்வி ஆசிரியர்கள் அனைவரும் சீருடைக்காக (அலவன்ஸ்) தலா ரூ. 50 பெறுவர்.

பள்ளிகளின் விளையாட்டுப் பயிற்சிக் கட்டண நிதியிலிருந்து இந்தப் படி வழங்கப்படும். அரசாங்கம், நகரசபைப் பள்ளிகள் மற்றும் உதவி பெறும் பள்ளிகளின் உடற் பயிற்சிக் கல்வி ஆசிரியர்களும் இந்தப் படியைப் பெறுவதற்குத் தகுதியுடையவர்களாவார்கள்.

இந்த ஆசிரியர்கள் எந்த மாதிரியான சீருடை அணிய வேண்டும் என்று பள்ளிக் கல்வி டைரக்டர் அறிவித்துள்ளார்.

அளவில் நலன் தரும் பொருள்கள் பற்றிய தரமான படங்கள் தயாரிப்பதை ஊக்கப்படுத்துவதற்காக, இப்படிப்பட்ட தமிழ்ப் படம் ஒவ்வொன்றுக்கும் ஒரு இலட்சம் ரூபாய் வீதம் ஐந்து தமிழ்ப் படங்களுக்கு ஆண்டு தோறும் உதவித் தொகை வழங்க அரசு தீர்மானித்துள்ளது.

முதற் கட்டமாக, 1976-'77ல் தயாரிக்கப்பட்டுத் தணிக்கைசெய்யப்பட்ட படங்கள் இது தொடர்பான தேர்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. இதற்கென அமைக்கப்பட்ட தேர்வுக் குழு, அரசின் நிதி உதவியைப் பெறத் தக்க தயாரிப்பாளர்களின் தகுதிகளை ஆராய்ந்து போட்டியில் கலந்து கொண்ட படங்களைப் பார்த்த பின்னர் மூன்று படங்களைத் பரிசுக்குரியதாகத் தேர்ந்தெடுத்தது; அப்படங்களாவன: 'அன்னக்கிளி', 'சில நேரங்களில் சில மனிதர்கள்', 'சந்ததி'.

நிதி உதவி :

மேலும் நடைமுறை ஆண்டிலிருந்து சிறந்த படங்களுக்கும், சிறந்த நடிகர்கள், சிறந்த படத் தொழில் நுட்ப வல்லுநர்கள் ஆகியோருக்கும் பரிசு வழங்கும் திட்டத்தையும் மீண்டும் செயற்படுத்துவது குறித்தும், தமிழ்த் திரையுலகின் முன்னோடியாக விளங்கிய இயக்குநர் இராஜா சாண்டோ நினைவு நிதி உதவி ஆகியவை வழங்குவதற்கான புதிய திட்டத்தையும் செயல்படுத்த அரசு முடிவெடுத்துள்ளது.

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு :

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு மாநிலத்தில் நடைபெறும் முக்கிய நிகழ்ச்சிகளைத் தேர்ந்தெடுத்துப் படமாக்கி, செய்திப்படங்களாக மத்திய அரசின் திரைப்படப் பிரிவின் மூலம் வெளியிடுகிறது.

இத்துடன் அரசின் பல்வேறு துறைகளின் செயல்களை, கருத்து விளக்கப் படங்களாக (டாக்குமெண்டரி) எடுத்து, இத் திரைப்படப் பிரிவு வெளியிடுகிறது. இப்படங்கள் (35 மில்லி மீட்டர் அளவில்) திரையரங்கங்களுக்கும், (16 மில்லி மீட்டர் அளவில்) அரசின் செய்தி, விளம்பரப் பிரிவுகளுக்கும் அனுப்பப்பட்டு, பொது மக்களுக்குக் காட்டப்படுகின்றன. பல்வேறு அரசுத் துறைகளுக்கான கருத்து விளக்கப் படங்களைத் (டாக்குமெண்டரி) தயாரிப்பதற்காக 1978-'79ஆம் ஆண்டில் இரண்டு இலட்சம் ரூபாய் இத் துறைக்கு ஒதுக்கீடு செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு திரையரங்குக் கழகம் :

1972ஆம் ஆண்டு துவக்கப்பட்ட தமிழ்நாடு திரையரங்குக் கழகம் பொறுப்பு வரையறுக்கப்பட்ட - முற்றிலும் அரசுசார் நிறுவனமாகும். தமிழ்நாட்டில் பகுதி நிலைத் திரையரங்கங்களைக் கட்டவும், நிலையான திரையரங்கங்களாக அவற்றை மாற்றி அமைத்திடவும் நிலையான புதிய திரையரங்கங்களைக் கட்டவும், அத்தகைய திரையரங்கங்களுக்குத் தேவையான கருவிகள் முதலியவற்றை வாங்கவும் நிதியுதவியளிப்பதே இக்கழகத்தின் தலையாய நோக்கமாகும். செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 25 இலட்சம், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மூலம் கடனாகக் கிடைக்கும் ரூ. 50 இலட்சம் ஆகியவை இக் கழகத்தின் நிதி ஆதாரங்களாகும்.

கடனுதவி :

இன்றைய நிலையில், சட்டப்படி, செல்லக்கூடிய ஒப்பளிப்புகள் 77 ஆகும். இவற்றில் 58 நபர்கள் திரையங்கங்களைக்கட்டி முடித்து, படங்களைத் திரையிட்டு வருகின்றனர். திரையரங்கம் ஒன்றுக்குக் கடன் உதவியின் உச்ச வரம்பு ரூ. 1.20 இலட்சம் ஆகும். தமிழ்நாடு திரையரங்குக் கழகம் இது வரையில் ரூ. 93.90 இலட்சம் கடன் தொகை அனுமதித்துள்ளது. அத்தொகையில் ரூ. 75.30 இலட்சம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. கிராமப்புறங்களில் திரையரங்கங்களைக் கட்டும் பணியை ஊக்குவிப்பதில் திரையரங்குக் கழகம் வெற்றி கண்டுள்ளது.

சமூகம் படிக்கிறது!

முன்பு ஒரு காலத்தில் சமுதாயத்தின் சில பகுதி மக்கள் படிக்க முடியாது; அவர்கள் படிக்கக் கூடாது என்று ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தனர்.

நல்ல வேளையாக சமூகப் புரட்சி துவங்கி விட்டது. நூற்றாண்டுக் காலங்களாகப் பழக்கத்தில் இருந்த அடக்கி வைக்கும் முறை மறைந்தது.

இப்போது எல்லோரும் படிக்கலாம். வாயில் வெள்ளிக் கரண்டியால் உணவு ஊட்டப்படும் சீமான் வீட்டுச் செல்லப்பிள்ளையானாலும், கலயத்தில் கஞ்சி குடிக்கும் ஏழையின் மகன் ஆனாலும் யார் வேண்டுமானாலும் சரி, இப்போது படிக்கலாம்.

இதில், மனிதனுக்கு மனிதன் பேதமில்லை; ஒருவன் கல்விகற்றால், சமூகம் படிக்கிறது என்று பொருள்.

—பேரறிஞர் அண்ணா

செந்தமிழ் நாட்டின் சீர்மல்கும் சிங்காரக் கடற்கரைகள்

தெ. இராமானுஜம்,
வெளியீட்டு அலுவலர்,
சுற்றுலாத் துறை.

இந் நாடு பல ஆயிரம் ஆண்டுகளாகவே இயற்கையின் பேருதவியைப் பெருமளவு பெற்றுத் திகழ்ந்து வருகிறது. இத்தகைய இயற்கை அழகை ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே கண்டு களித்துப் பயன் துய்த்தனர் தமிழர்கள். குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல், பாலை என நிலத்தின் இயல்பு கண்டு ஐந்து வகையாகப் பிரித்தனர்.

இவ்வைந்து வகை நிலங்களில் ஒன்றான நெய்தல்தான் கடலும் கடல் சார்ந்த இடமும். சற்றுஏறக்குறைய ஆயிரம் கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரையைத் தமிழகம் தன்னகத்தே பெற்றிருக்கிறது. சென்னைக்கு வடக்கே பழவேற்காட்டில் ஆரம்பித்து, தெற்கில் கன்னியாகுமரி மாவட்டத்தில் முடிவடையும் இந்த நீண்ட நெடுங்கடற்கரை ஒரு காவியமாகத் திகழ்கிறது.

பல்லவ, சோழ, பாண்டியப் பேரரசுகள் கடல் வாணிபம் நடத்திப் பொருள் ஈட்டியதும் தமிழகத்தின் பண்பாட்டை உலகின் பல நாடுகளிலும் வேர் ஊன்றச் செய்ததும் இக்கடற்கரையிலிருந்துதான். அசோகன் பௌத்த மதத்தைப் பரப்பச் சீடர்களை இலங்கைக்கு அனுப்பியதும் தமிழகத்தின் கடற்கரை வாயிலாகத்தான், ஆங்கிலேயர்கள் ஆட்சி இந்திய மண்ணில் வேரூன்றியதும் தமிழகக் கடற்கரையில்தான்.

மாமல்லைக் கடற்கரையோரம் பல்லவர்கள் கல்லில் காவியம் வடித்தனர். காவிரி சங்கமத்தருகே காவிரிப்பூம்பட்டினம் அமைத்து கடற்கரை அழகு கண்டு துய்த்தனர் சோழர்கள். ''பூழியர் கோன் தென்னாடு முத்துடைத்து'' எனும் ஔவை மூதாட்டியின் முதுமொழிக்கிணங்க தூத்துக்குடியில் முத்துக் குளித்தனர் பாண்டியர்கள். அம்மட்டோ! சேது சமுத்திரம் அறியாதார் யார்? இராமன் இலங்கைக்குச் செல்ல வானர சேனைகளைக் கொண்டு தமிழகத்தின் கடற்கரையிலிருந்து பாலம் அமைத்ததாகக் கம்பராமாயணம் கூறுகிறது. இலங்கையிலிருந்து திரும்பிய இராமன் சிவபெருமானை வழிபட்டது இராமேச்சுரத்தில் என்று கூறப்படுகிறது. அதனாலன்றோ இராமேச்சுரம் இந்தியாவின் புனிதத் தலங்களில் ஒன்றாக விளங்குகிறது! நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் யாத்ரீகர்களைத் தன்பால் ஈர்த்து, தேசிய ஒற்றுமைக்கு அணிகலனாக இவ்வூர் விளங்குகிறது.

கன்னியாகுமரிக் கடற்கரைக்கு சற்று அப்பால் கடலில் அமைந்த பாறை யொன்றில் தியானத்தில் அமர்ந்து அன்னையின் அருள் பெற்றார் சுவாமி விவேகானந்தர். காந்தியடிகளின் மனத்தைக் கவர்ந்ததும் கன்னியாகுமரிக் கடற்கரைதான்.

இத்தகு எண்ணிலடங்காச் சிறப்புக்கள் பெற்றுள்ள தமிழகத்தின் கடற்கரை, சுற்றுலா வளர்ச்சியிலும் தனியிடம் வகிக்கிறது. ஓய்வுக்காகக் கடற்கரை நாடும் சுற்றுலா மேலோங்கி நிற்கும் இந்நாளில் தமிழகத்தின் சிறப்பு மிகு கடற்கரையில் ஆங்காங்கு ஏற்ற வசதிகள் செய்து சுற்றுலாப் பயணிகள் பயன் துய்க்கத் தமிழக அரசு திட்டமிட்டுச் செயலாற்றி வருகிறது.

பழவேற்காடு, சென்னை, கோவளம், மாமல்லை, கடலூர், பிச்சாவரம், பூம்புகார், தரங்கம்பாடி, கோடிக்கரை, இராமேச்சுரம், மண்டபம், வாலிநோக்கம், திருச்செந்தூர், கன்னியாகுமரி, கொளச்சல் ஆகிய இடங்களில் அமைந்த கடற்கரைகள் நமக்குத் தெரிந்த கவின்மிகு கடற்கரைகளாகும். இவற்றைத் தவிர நமது கண்ணுக்குப் படாத இடங்கள் இன்னும் எத்தனையோ இருக்கின்றன.

உலகிலேயே இரண்டாவது நீண்ட கடற்கரை மெரினா கடற்கரை என்பது சென்னை மாநகர மக்களின் தனிப் பெருமை, தற்பெருமையும் கூட. இக் கடற்கரையின் வடக்கில் கோடானு கோடி தமிழ் உள்ளங்களைக் கொள்ளை கொண்டு தமிழுக்குப் புத்துணர்ச்சி அளித்து ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவாலயம் நாள் தோறும் எண்ணற்ற மக்களைத் தன் வசம் ஈர்த்த வண்ணமுள்

ளது. இக்கடற்கரையை வளப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டுப் படிப்படியாகச் சீரமைக்கப்பட்டு வருகிறது. அதற்கடுத்து அடையாறில் உள்ள எலியட்ஸ் கடற்கரை உல்லாசப் பொழுது போக்கிற்கும், குளிப்பதற்கும் உகந்த இடமாக விளங்குகிறது.



சென்னையை விட்டுச் சுமார் 20 கிலோ மீட்டர் தெற்கே போனால் நம்மை வரவேற்பது முட்டுக்காடு — கோவளம் கடற்கரை, தென்னை மரங்கள், உப்பங்கழிகள், பக்கிம்ஹாம் கால்வாய், அவ்விடத்து மேடு பள்ளமான நிலப்பாங்கு, குன்றுகள், மீனவர்கள் மீன் பிடிக்கும் காட்சி, யாவும் ஒன்று சேர்ந்து இவ்விடத்தைக் கண்கொள்ளாக் காட்சிகளின் உறைவிடமாக மாற்றியுள்ளன. இங்கு தாஜ் நிறுவனத்தைச் சேர்ந்த ''ஃபிஷர்மென்ஸ் கோவ்'' என்ற ஓட்டல் அமைந்துள்ளது.

அதற்கடுத்து உலகப் புகழ் பெற்ற மாமல்லை. அதன் நீண்ட வெள்ளி மணற் கடற்கரையைக் கண்டு மயங்காதவர் யாருமில்லை. கடலலைகள் தாலாட்ட, கற்கள் கவி பாட, மயக்கும் மாலை நேரத்தில் மேலைத் திசையில் சாயும் கதிரவன் காட்டும் வண்ணக் கோலங்கள் நம்மை வேறோர் உலகத்திற்கே இட்டுச் செல்கின்றன. மாமல்லைக் கடற்கரையில் இந்தியாவில் அயல்நாட்டுப் பயணிகள் தங்கி மகிழ்வதற்கேற்ற கடற்கரைகளுள் மாமல்லையும் ஒன்றாகும். கேரளத்தில் உள்ள கோவளமும், கோவா கடற்கரையும் மற்ற இரண்டு இடங்கள் ஆகும். தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மற்றும் இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகம், இங்கு கடற்கரைக் குடில்கள் கட்டியுள்ளன. இது தவிர சில்வர் சாண்ட்ஸ், கோல்டன் சன் என்ற இரு தனியார் குடில்களும் உள்ளன. ஐடியல் பீச் ரிசார்ட் என்ற மற்றொரு ஓட்டலும் விரைவில் திறக்கப்பட இருக்கிறது.

தமிழகத்திலேயே பல்வேறு நாட்டுச் சுற்றுலாப் பயணிகள்

அதிகமாகத் தங்கி மகிழும் கடற்கரை மாமல்லைக் கடற்கரைதான். அடுத்தபடியாக சென்னைக்கும் மாமல்லைக்கும் இடையே உள்ள கோவிளந்தாங்கல் என்னும் கோவளமும், கன்னியாகுமரியும் அயல் நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் தங்கும் வசதி படைத்தவைகளாகும். சென்னைக்குச் சற்றுத் தெற்கே 'கோல்டன் பீச் என்ற' மற்ருெரு ஓட்டலும் இருக்கிறது.

சென்னை முதல் மாமல்லை வரை உள்ள கடற்கரை முழுவதையும் மேம்பாடு செய்யும் பெருந்திட்டம் ஒன்றை அரசு தீட்டியுள்ளது. இதன் மூலம் படிப்படியாக இக்கடற்கரைப் பகுதி மேம்பாடு செய்யப்படும். இந்த அறுபது கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரைப் பகுதி ஒரு தனி உலகமாகவே மாறி மக்களை மகிழ்விக்கும் நாள் வெகு தூரத்தில் இல்லை.

அடுத்தபடியாக இரண்டு கடல்கள் ஒரு சமுத்திரம் ஒன்றுசேரும் கன்னியாகுமரி பலவண்ண மணற்பாங்கு கொண்டது. புனிதத் தலமாகக் கருதப்படுவது. சூரிய உதயம்-மறைவு ஆகிய காட்சிகள் காண்போர் மனத்தில் என்றும் நிலைத்து நிற்கும் காட்சிகளாகும். இந்த நீலக் கடலோரத்தில் தான் தேவி கன்னியாகுமரி நின்று நித்தம் தவம் செய்து நம்மைக் காத்து அருள்புரிகிருள் என்று கூறப்படுகிறது. இங்கும் தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சுற்றுலாப் பயணிகளுக்காக மாளிகை (ஓட்டல்) கட்டியுளளது.

இராமேச்சுரம் தீவின் கடற்கரை சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்ற மற்ருெரு முக்கிய இடம் ஆகும். பவழக் கோரைகளுக்குப் பெயர் பெற்ற குருசடைத் தீவும் இதன் அருகில்தான் உள்ளது. உயிரியல் ஆராய்ச்சியாளர்களின் தேவலோகம் என்று அழைக்கப்படும் இத் தீவில் ஓர் ஆராய்ச்சி நிலையம் உள்ளது. இந்திய நார்வீஜிய மீன் வளத் திட்டத்தின் கீழ் நவீன முறையில் மீன் பிடிக்க உதவும் திட்டம் மண்டபத்தில் செயல்பட்டு வருகிறது. எனவே இராமேச்சுரம் கடற்கரையை மேம்படுத்தும் திட்டம் ஒன்றும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

இயற்கையின் எழில் பூங்காவாக விளங்குவது சிதம்பரத்திற்குக் கிழக்கே சற்றேறக் குறைய 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பிச்சாவரம். அதன் சிறப்பை அறிஞர் அண்ணு கூறுகிருர், கேளுங்கள்: ''தம்பி! கடல் நீரின் மீது ஒரு காடு வேறெங்கும் அதிகம் காணப்படாததும் உப்பங்கழிகளில் மட்டுமே வளரக் கூடியதுமான பலவகை மரங்கள், கொடிகள், செடிகள் நிரம்பி உள்ளன. ஆலுக்குள்ள விழுதுகள் போல அந்த மரங்களிலிருந்து கிளம்பித் தண்ணீரைத் தொடுகின்றன. உள்ளேயும் செல்கின்றன. இடையிடையே திட்டுகள் உள்ளன. அவை மேய்ச்சல் இடங்களாகப் பயன்படுகின்றன. விழுதுகளும் கொடிகளும் வழி மறித்து நிற்கின்றன. வளைத்தும், பிரித்தும், நீக்கியும் வழி காண வேண்டியிருக்கிறது. அது மட்டுமா? செம்போத்தும், குருகும், வக்காவும், வண்ணப் பறவைகளும், இனிய இசை எழுப்பும் பறவைகளும் உள்ளன. ஆள் அரவம்கேட்டதும் மரத்திலிருந்து கிளம்பிச் சிறகடித்துக் கொண்டு வேறிடம் செல்லும் காட்சி,வெளிர் நீலவண்ண நீர் சூழ் பச்சை, மேலே நீலமும் வெண்மையும் கொண்ட மேகக் கூட்டம் இடையில் வெண்ணிறக் கொக்குகள், விமானப் படை அணி வகுத்துச் செல்வதுபோல! இதை நீங்கள் மட்டுந்தாஞ கண்டு களித்திடக் கற்றீர்கள், என்று கூறுவதுபோல் துள்ளித் துள்ளி மேலே வருகின்றன மீனினம்.''

இவ்வளவு அழகு வாய்ந்த பிச்சாவரத்தை மேம்படுத்தவும் அரசு திட்டமிட்டுள்ளது. தமிழர் பண்பாட்டின் நிலைக்களஞக ஒரு காலத்தில் விளங்கிய பூம்புகாரில், நமது பண்பாட்டின் நினைவுச் சின்னங்களாக சிலப்பதிகாரக் காட்சிகள் நிறுவப்பட்டுள்ளன. நாள் தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் இதனைச் சென்று கண்டு களித்து வருகின்றனர்.

அண்மைக் காலத்தில் கடற்கரைச் சுற்றுலா பெருமளவில் வளர்ச்சி பெற்று வருகிறது. காலையிலும், மாலையிலும் கடலோரம் காற்ருடச் சென்றவர்களுக்கு அதன் இரகசியம் நன்கு விளங்கும். அந்த வாய்ப்பினைப் பெருதவர்களுக்கு அக்காட்சியைப் படம்பிடித்துக் காட்டுகிருர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

நீலக் கடலே வாழ்க—ஒளி
நெளியும் கடலே வாழ்க
மாலைப் போதில் கடலே—வரும்
மக்கட் கின்பம் தருவாய்
காலைப் போதில் கதிரோன்—தலை
காட்டும் கடலே வாழ்க
ஏலேலோ பண்ணுலே—வலை
இழுப்போர் பாடும் கடலே.

சீர் மல்கும் கடற்கரைகளின் பயன் இதனுல் தெள்ளிதின் விளங்கும். இக்கடற்கரைகளில் சோழர் காலத்தில் பூம்புகார் கடற்கரையில் பல்வேறு நாட்டினர் எந்நாளும் குழுமி இருந்தது போலவே இப்போதும் வந்து தங்கி மகிழ்ந்து செல்ல அவற்றை வளப்படுத்த வேண்டியது நமது கடமையாகும். எனவே இக்கடற்கரைகளின் எழிலைப் பாது காத்து அங்கு தேவையான வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிடல் வேண்டும். அம்முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளது.

தமிழகத்தில் தொழிற் கல்வி

திரு. சு. வையாபுரி
தொழில் நுட்பக்கல்லூரி இயக்குநர்

ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு இன்று அடிப்படையாக அமைவது, அறிவியல், தொழிலியல் வளர்ச்சி என்பது உலகறிந்த உண்மை. இவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்த தமிழக அரசு, தொழிற் கல்வி வளர்ச்சியின் மீது தனிக் கவனம் செலுத்துகின்றது. இதன் பயனாக, தமிழ்நாடு இன்று தொழிற் கல்வித் துறையில் முன்னணியில் உள்ள மாநிலங்களில் ஒன்றாக விளங்குகிறது.

தொழிற் கல்வி கீழ்க்கண்ட நான்கு வகையான கல்வி நிலையங்களில் கற்பிக்கப்படுகின்றது.

1. தொழிற் பயிற்சி நிலையம் (Industrial Training Institute.)
2. தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளி (Technical High School.)
3. பல்தொழிற் பயிலகம் (Polytechnics)
4. பொறியியற் கல்லூரி. (Engineering College.)

தொழிற் பயிற்சி நிலையங்கள், தொழிலாளர் பயிற்சிக்காக ஏற்படுத்தப்பட்டவை. அவை தொழிலாளர் துறையில் (Labour Department) கீழுள்ளன. ஏனைய மூன்றும் தொழில் நுட்பக் கல்வித் துறையின் கீழ் உள்ளன.

தொழிற் கல்வி வளர்ச்சி :

1951ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில், ஒரு சில பொறியியற் கல்லூரிகளும் பல்தொழில் பயிலகங்களும் இருந்தன. இந்த எண்ணிக்கை படிப்படியாக வளர்ந்தது. தற்போது இருக்கும் கல்வி நிலையங்களின் எண்ணிக்கை வருமாறு :

1. பொறியியற் கல்லூரிகள் 13
2. பல்தொழில் பயிலகங்கள் 44
3. தொழில் நுட்ப உயர் நிலைப் பள்ளிகள் 14

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து, எண்ணிக்கையை அதிகரிக்காமல், உள்ள வசதிகளைச் சீர்செய்து, ஒருமுகப்படுத்தித் தரத்தை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. தொழில் வளர்ச்சியில் புதிதாகத் தோன்றும் துறைகளிலும், பிரிவுகளிலும் தேவைப்படும் புதிய இயல்களில் பாடத்திட்டங்கள் துவக்கப்படுகின்றன. இதனால், படிப்பு முடிந்ததும் வேலை வாய்ப்புகள் பெருகியுள்ளன. இன்றைய நிலையில், தமிழகத்தின் பொறியியற் கல்லூரிகளில் ஆண்டுக்கு 2,000க்கும் மேற்பட்ட மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர். மற்றும் பல்தொழில் பயிலகங்கள் 5,398 மாணவர்களையும், தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகள் 840 மாணவர்களையும் ஒவ்வொரு ஆண்டும் பயிற்சிக்கு ஏற்றுக்கொள்கின்றன.

இந்த மாணவர்களின் பயிற்சிக்காக ஆண்டுதோறும் அரசு கணிசமாக செலவு செய்கிறது. சராசரியாக ஒரு மாணவனுக்காக அவன் பயிற்சி பெற்று வெளியேற அரசு செலவிடும் தொகை கீழே தரப்பட்டுள்ளது.

1. பொறியியற் கல்லூரி —ரூ. 14,900.
2. தொழில் நுட்பப் பயிலகம் —ரூ. 4,650.
3. தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளி—ரூ. 2,100.

இந்த இடத்தில் தனியார் துறைக் கல்வி நிலையங்களுக்கு அரசு அளிக்கும் மானியம் பற்றிக் குறிப்பிடுதல் வேண்டும். 1977-78 ஆண்டு நடைமுறைப்படி தொடராச் செலவினத்தில் 80 சதவீதமும், தொடரும் செலவினத்தில் நிகரப் பற்றுக்குறையில் 80 சதவீதமும் இக்கல்வி நிலையங்களுக்கு அரசு மானியமாக அளித்து வந்ததை 1978-79ஆம் ஆண்டு முதற் கொண்டு 90 சதவீதமாக உயர்த்தி உள்ளது.

அண்மைக் காலத்தில் தொழிற் கல்வி வளர்ச்சிக்காகச் செய்யப்படும் ஏற்பாடுகளைக் கீழ்க்கண்ட வகைகளாகப் பிரிக்கலாம்.

1. கல்வித் தரச் சீரமைப்பு.
2. ஆராய்ச்சி.
3. தொடர்கல்வி மற்றும் அறிவுரை உதவித் திட்டங்கள்.
4. வேலை பெற உதவும் திட்டங்கள்.
5. ஆசிரியர் பயிற்சி.
6. பிற்பட்டோர் மற்றும் பெண்கள் கல்வி.
7. மற்ற திட்டங்கள்.

கல்வித் தரச் சீரமைப்பு :

மாணவர்களின் உண்மையான தரத்தை அறிய ஆண்டிறுதியில் மட்டும் ஒரு தேர்வு நடத்துவது பலனளிக்காது. அதற்கெதிராக, ஆண்டு முழுவதும் மாணவன் எவ்வாறு கல்வி கற்கிருன் என்பதை கற்பிப்பவர்களே கவனிக்க வேண்டும் என்பதும் மற்றும் கற்பிக்கும் போதே மாணவர் கற்ற அளவை மதிப்பீடு செய்ய வேண்டும் என்பதும், இன்றைய கல்வி முறைக் கோட்பாடாகும். இந்த அடிப்படையில் கல்வி ஆண்டை இரண்டாகப் பிரித்து, இருமுறை தேர்வுகள் நடத்தும் அரையாண்டுக்கல்வி முறை (Semester system), கல்வியகத்திலேயே மதிப்பீட்டு முறை (Internal evaluation) ஆகியவை தமிழ்நாட்டின் எல்லாப் பொறியியற் கல்லூரிகளிலும், தொழிற் பயிலகங்களிலும் தொடங்கப்பட்டுள்ளன. இந்தச் சீர்திருத்தங்களைத் தமிழ்நாட்டில் முதன் முதலாக அமல் நடத்தியது தொழிற்கல்வித் துறையாகும். இந்த அரையாண்



டுக் கல்வி முறை மற்றும் கல்வியகத்திலேயே மாணவர் தர மதிப்பீட்டு முறை ஆகியவை தவிர கல்வியைப் பலதுறைப்படுத்தல், புதிய பாடங்கள் தொடங்குதல், கல்வியிடைத் தொழிற் பயிற்சி (Sandwich Course) முதலிய திட்டங்களும், கல்வியின் தரம் சீராக்கப் பயன்படும் எனக் கருதப்படுகிறது. கல்வியிடைத் தொழிற் பயிற்சி முறையில் படிக்கும் மாணவர் படித்த பின் தொழில் ஏற்று நடத்த ஆற்றலும், மனவுறுதியும் பெறுகின்றனர். இந்த வகையான பல திட்டங்கள் எவ்வாறு பொறியியற் கல்லூரிகளிலும் மற்ற பயிலகங்களிலும் செயல்படுத்தப்படுகின்றன என்பதைச் சுருக்கமாகப் பார்ப்போம்.

பொறியியற் கல்லூரிகள் :

இன்று தமிழ்நாட்டில் 13 பொறியியற் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இவற்றில் 7 கல்லூரிகள் தொழில் நுட்பக் கல்வித் துறையின் நேர் பார்வையில் இயங்கி வருகின்றன. ஆண்டுக்கு சுமார் 1,400 மாணவர்கள் (திருச்சி மண்டலப் பொறியியற் கல்லூரி சேர்ப்பு எண்ணிக்கையில் 50 சதவீதம் உட்பட) சேர்க்கப்படுகின்றனர். இந்த எண்ணிக்கையை 1,500 ஆக உயர்த்தும் எண்ணம் அரசின் ஆய்வில் உள்ளது. இவர்களுக்குத் தொழிற் கல்வி கற்பிப்பதில் கடந்த சில ஆண்டுகளில் எடுத்துக் கொண்ட புதிய முயற்சிகளில் முக்கியமானவை பின்வருமாறு :

1. கல்வியைப் பலதுறைப் படுத்தல்.

2. தொழில் வளர்ச்சியுடன் இணைந்த புதுப் பாடங்கள் ஆரம்பித்தல்.

3. மாலை நேரப்பட்டப்படிப்பு.

தொழில் துறை வளர வளர, அதற்குத் தகுந்தவாறு பல புதிய பாடங்கள் ஏற்படுத்த வசதியாக, பட்டப் படிப்புப் பாடத் திட்டத்தில் விருப்பப் பாடங்கள் படிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் பல புதிய பாடத் திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன. தற்போது பொறியியற் கல்லூரிகளில் அளிக்கப்படும் பாடத்திட்டங்கள் எண்ணிக்கை கீழ்வருமாறு :

பாடத்திட்டம்	எண்ணிக்கை
பட்டப் படிப்பு	15
பட்ட மேற்படிப்பு (டிகிரி நிலை)	31
பட்ட மேற்படிப்பு (டிப்ளமா நிலை)	6

பல்தொழில் பயிலகத்தில் டிப்ளமா படிப்புப் பெற்று வேலை பார்ப்பவர்கள் மேலே படிக்க அவா இருந்தாலும் பண நெருக்கடியால் படிக்க முடிவதில்லை. இப்படிப்பட்டவர்களுக்கு வேலையில் சிறிது அனுபவம் பெற்றவுடன் மாலை நேரங்களில் பொறியியல் கல்லூரிகளில் மாலைநேரப் பட்டப் படிப்பு படிக்க வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் ஆண்டொன்றுக்குச் சுமார் 700 பேர் பயனடைகிறார்கள்.

பல்தொழிற் பயிலகங்கள் :

இன்றைய நிலையில் ஆண்டொன்றுக்கு 5,398 மாணவர்கள் தமிழகத்திலுள்ள 44 பல்தொழில் பயிலகங்களில் சேர்க்கப்படுகின்றனர். இப்பயிலகங்களில் கல்வித் தரச் சீர்மைப்பில் காணப்படும் புது முயற்சிகள் பின்வருமாறு :

1. தொழில் வளர்ச்சியுடன் இணைந்த புதுத் துறைகள்.

2. தேர்வு முறையில் சீர் திருத்தம்.

3. கல்வியிடைத் தொழிற் பயிற்சி.

வேளாண்மைப் பொறியியல், வைத்தியத் துறைக் கருவி நுட்ப மின்னணுவியல், பற்றவைப்பியல் போன்ற இன்னும் பல புதிய துறைகளில் கல்வி கற்கக் கடந்த சில ஆண்டுகளில் வசதி செய்யப் பட்டுள்ளது. தற்போது பல் தொழிற் பயிலகங்களில் கற்பிக்கப்படும் பாடத் துறைகள் எண்ணிக்கை கீழ்வருமாறு :

பாடத்திட்டம்	என்ணிக்கை
டிப்ளமா படிப்பு	37
டிப்ளமா மேற்படிப்பு	18
சான்றிதழ் படிப்பு	17



அடுத்து, ஏற்கெனவே குறிப்பிட்டபடி தேர்வு முறைகளில் சீர்திருத்தமான அரையாண்டு முறை, கல்வியகத்திலேயே மாணவர் தரம் மதிப்பீட்டு முறை, ஆகியவற்றுடன் கேள்வி வங்கி முறை என்ற ஒருபுதுத் திட்டமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கேள்வி வங்கி முறை என்பது ஒரு பாடத்தில் கேட்கக் கூடிய பல நூறு கேள்விகளை பட்டியலாகத் தயாரித்து வைத்துக் கொண்டு, அந்தப் பட்டியலிலிருந்து தேர்வுக்கு, சில கேள்விகளைப் பொறுக்கி எடுத்து, மாணவர்களை பதிலெழுத சொல்லுவதாகும். இந்த முறை, தேர்வில் கொடுக்கப்படும் கேள்விகள் பாடத் திட்டத்தை மீறியவைகளாக இருக்காமல் பார்த்துக் கொள்கிறது. கேள்விகள் ஆராய்ந்து எழுதப்பட்டவைகளாக இருப்பதால் பாடங்களை மாணவர்கள் புரிந்து கொண்டு இருக்கிறார்களா என்பதைத் தரமிடத் தகுந்தவாறு விரிவாகவும், முழுமையாகவும் இருக்கும். இந்த முறையானது இப்பொழுது 187 பாடங்களில் செயல்படுத்தப் படுகிறது.

கல்வியிடைத் தொழிற் பயிற்சி (Sandwich Course) முறையில் பயனை முன்னமேயே பார்த்தோம். இந்த முறையானது 12 பல்தொழிற் பயிலகங்களில் 12 துறைகளில் சிறப்பாகச் செயல் படுத்தப்படுகிறது.

தொழில் நுட்ப உயர்நிலைப்பள்ளி :

தமிழகத்தில் 14 தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகள் உள்ளன. இவற்றில் ஆண்டுக்கு 840 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். சிறு வயதிலிருந்தே, தொழில் துறையில் ஆர்வமுள்ள மாணவர்களுக்குத் தொழிற் பயிற்சி அளிக்க இந்தப் பள்ளிகள் உதவுகின்றன. இந்தப் பள்ளிகளில் பொதுக் கல்வியுடன், தரமான தொழிற் பயிற்சியும் பெற்ற மாணவர்கள், உற்பத்தி முறைகளை எளிதாகப் புரிந்து கொள்வதால், தொழில் நிர்வாகிகள் இவர்களை விரும்பித் தங்கள் தொழிற்சாலைகளில் சேர்த்துக் கொள்ள வாய்ப்புண்டு. இவர்கள் தொடர்ந்து மேற்படிப்புப் படிக்க முடியும். இந்த வகைப் பள்ளிகளில் அந்தந்த வட்டாரத் திற்கேற்பப் பயன்படும் தொழிற் பயிற்சிகளைக் கற்பிக்கும் வழி வகைகள் செய்யப்பட்டுள்ளன. எடுத்துக் காட்டாகக் கிராமப் புறங்களில், பம்பு, டிராக்டர், பழுதுபார்த்தல் போன்ற பாடங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பாடத்திட்டச் சீரமைப்பு :

வளர்ந்துவரும் தொழிற் கல்வியின் தரத்தைச் சீராக வைத்து இருக்கப் பாடத் திட்டங்களை அடிக்கடி மறு பரிசீலனை செய்வது அவசியம். அதன் பொருட்டு பாடத் திட்ட அமைப்பு மையம் (Curriculam Development Centre) நிறுவப்பட்டுள்ளது. இம் மையம், பல புதிய பாடத் திட்டங்களை வகுக்கிறது; பல்தொழில் பயிலகத்துக்காக இது வரை பத்துப் புதுத் துறைகளுக்குப் பாடத் திட்டங்களை வகுத்துள்ளது. இம் முயற்சி, டிப்ளமா படிப்பில் இந்தியாவிலேயே மாநில அளவில் முதல் முயற்சியாகும். மேலும், பயிலும் மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள் இல்லாத குறையைப் போக்க எண்ணி, நல்ல தரமான நூல்களை வெளியிட இந்த மையம் முடிவு எடுத்து, பல்தொழில் பயிலகங்களில் எல்லாப் பாடங்களுக்கும் நூல்கள் எழுதத் திட்டமிட்டது. இது வரை ஆறு நூல்கள் வெளி வந்துள்ளன. மொத்தம் முப்பத்தோரு தலைப்புகளில் நூல்கள் தயாரிக்கப்படுகின்றன. இந்தத் திட்டமும் ஒரு முன்னோடியான முயற்சியாகும்.

வணிகவியல் தேர்வுகள் :

எல்லா வகையான தொழிற் கல்வியும் ஒரே துறையின் கீழிருத்தல் நலமென்பதறிந்து, தமிழக அரசு, வணிகவியல் தேர்வுகள் நடத்தும் பணியைத் தொழில் நுட்ப இயக்ககத்திற்கு மாற்றியது. இவ்வியக்ககத்தில் வணிகவியல் பாடத் திட்டங்களின் தேர்வு முறைகள் செம்மையாக்கப்பட்டுள்ளதோடு, இம்மாநிலத்திலுள்ள ஒப்புதல் அளிக்கப்பட்ட வணிகவியல் பள்ளிகளில் கல்வி கற்பிக்கும் தரமும் உயர்த்தப்பட்டுள்ளது.

ஆராய்ச்சி மற்றும் தொடர்கல்வி வசதிகள் :

அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறைகளில் பல ஆராய்ச்சிகள் நடத்த வேண்டி, வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. அறிவியல் மற்றும் தொழில்ஆராய்ச்சி நிறுவனம், தரம் உயர்த்தும் திட்டம் ஆகியவைகள் அளித்து வரும் நிதி உதவியுடனும் மற்றும் மாநில அரசு உதவியுடனும் ஆராய்ச்சி செய்தும் பயிற்சி பெற்றும் டாக்டர் பட்டம் பெற ஆசிரியர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. தனியார் கல்லூரிகளில் டாக்டர் பட்டப் படிப்புக்கு வேண்டிய ஆராய்ச்சிகள் செய்யத் தமிழக அரசு கணிசமான உதவித்தொகை அளிக்கிறது. இதுவரை தரம் உயர்த்தும் திட்டத்தின் கீழ் 21 ஆசிரியர்கள் பட்டம் பெற்றுள்ளனர். 13 ஆசிரியர்கள் இப்பொழுது பயிற்சி பெறுகின்றனர். தங்கள் செலவில் டாக்டர் பட்டம் பெற்றவர் எண்ணிக்கை 30; இப்பொழுது சென்றிருப்பவர்களின் எண்ணிக்கை 17. தாங்கள் பணி புரியும் கல்லூரிகளிலேயே பதிவு செய்துகொண்டு ஆராய்ச்சி செய்வோரின் எண்ணிக்கை 108.

அறிவியலும், தொழில் நுட்ப இயலும், நாள்தோறும் வளருபவை. கருத்தளவிலும் செயல் முறைகளிலும், ஏற்பட்டுள்ள வளர்ச்சி—ஏற்படும் வளர்ச்சி, எதிர்பாராத வேகத்தில் அமைந்திருக்கிறது. இதை மனத்தில் கொண்டு, பல ஆண்டுகளுக்கு முன்னர் பட்டம்பெற்று,தொழில் புரியும் தொழில் நுட்பப் பொறியாளர்களுக்கும், அறிவியலாளர்களுக்கும், இன்றைய அறிவியலில் பொறியியலின் முன்னேற்றத்தை அறிமுகப்படுத்த அவர்கள் படித்த படிப்புக்குத் தொடர்பாக உள்ள பாடங்களைக் கொண்ட வகுப்புகள் மாலை நேரத்திலோ பகல் நேரத்திலோ குறுகிய கால வரையறைக்குள் நடத்தப் படுகின்றன.

பல்தொழில் நுட்பப் பயிலகங்களுக்கும், பொறியியல் கல்லூரிகளுக்கும் தொழில் துறையுடன் நெருங்கிய தொடர்பு ஏற்படவும் ஒத்துழைப்பு இருக்கவும் பேராசிரியர்களின் ஆழ்ந்த அறிவு, தொழில் துறைகட்கு நேரிடையாகப் பயன்படவும், தொழில் கூடங்களும், அரசுத் துறைகளும் தங்கள் பணிகளில் ஏற்படும் சிக்கல்களை ஆசிரியர்களுடன் தொடர்பு கொண்டு விளக்கம் பெற ''அறிவுரை உதவித் திட்டம்'' (Consultance Service)

அமைக்கப்பட்டுள்ளது. இதனுல்; தொழில் துறைகளுக்கும் நன்மை, கல்லூரி மற்றும் பயிலகங்களுக்கும் நன்மை.

வேலை பெற உதவும் திட்டங்கள் :

வளர்ந்து வரும் தொழில் வளர்ச்சிக்கேற்றவ்ாறு பாடத் திட்டங்களை மாற்றியும் புதிதாக அமைத்தும், கல்வி புகட்டப்படுகின்றது. படிக்கும் மாணவர்களுக்கும் படித்துப் பட்டம்-டிப்ளமா பெற்ற மாணவர்களுக்கும் வேண்டிய பயிற்சி அளிக்க - வேலை வாங்கித் தரப் பல திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவை யாவன :

1. பயிலும் பொழுதே பொருளீட்டும் திட்டம்.

2. வேலை தேடித் தரும் திட்டம்.

3. சிறந்த செயல் வடிவமைப்புத் திட்டம்.

இதற்காகவே ஒவ்வொரு தொழிற் கல்வி நிலையங்களிலும் தனிப் பிரிவு ஒன்று இயங்கிப் பணிபுரிந்து வருகின்றது.

பயிலும்போதே பொருளீட்டும் திட்டத்தில், இறுதியாண்டு படிக்கும் மாணவர், கல்வி கற்காத நேரங்களிலும் விடுமுறையின் போதும் பயிலக இயந்திரங்களைப் பயன்படுத்திச் சில்லறை வேலைகள் செய்யலாம். இவர்களுக்கு ஊதியமும் தொழிற் பயிற்சியும் கிடைக்கின்றன.

வேலை வாங்கித் தரும் திட்டத்தில், பல துறைகளிலும் பயிற்சி பெற்ற மாணவர்களின் பெயர்களை வரிசைப்படுத்தி, அந்தந்தத் துறையைச் சேர்ந்த தொழில் நிறுவனங்களுக்கு அனுப்பி, வேலை கொடுக்குமாறு பரிந்துரை வழங்கி வேலை வாங்கிக் கொடுக்கப்படுகிறது.

செயல் வடிவமைப்புத் திட்டத்தில், இறுதியாண்டு படித்த மாணவர் ஒவ்வொருவரும் தனக்குப் பிடித்தமான கருவியை அல்லது செயல் வடிவமைப்பை உருவாக்க வாய்ப்பளிக்கப்படுகிறுர். மாணவர்கள் உருவாக்கிய கருவிகளையும், வடிவமைப்புக்களையும் ஆராய்ந்து, சிறந்தவற்றிற்கு உயர்ந்த பரிசுகள் வழங்கப்படுகின்றன. இதனுல் மாணவரின் தன்னம்பிக்கை வளர்க்கப்பட்டு, எந்தத் தொழிலையும் ஏற்றுக் கொள்ளும் துணிவு உண்டாக்கப்படுகிறது. ஆண்டுதோறும் ஒரு சிறப்பு நிகழ்ச்சி ஏற்பாடு செய்து அப்போது கல்லூரிகளிலும்-பல்தொழில் பயிலகங்களிலும் செய்யப்பட்ட சிறந்த செயல் வடிவமைப்புகளுக்கு பரிசுகள் வழங்கப்படுகின்றன. அதிக எண்ணிக்கையில் சிறந்த செயல் வடிவமைப்புகள் உருவாக்கிய கல்லூரிக்குச் சுழற்கோப்பை பரிசும் வழங்கப்படுகிறது.

ஆசிரியர் பயிற்சி :

மேற்படிப்பு :

பல வகைப் படுத்தப்பட்ட பாடத் திட்டங்களை நடத்துவதற்குரிய திறமைகளை ஆசிரியர்கள் பெற்றிருக்க வேண்டும். இன்றைய சூழ்நிலைக்கேற்றவாறு உருவாக்கிய பாடங்களை செம்மையுற நடத்த ஆசிரியர்களைப் பயிற்சி பெறச் செய்யப் பல திட்டங்கள் உள்ளன. பொறியியற் கல்லூரியிலிருந்தும், பல்தொழில் பயிலகங்களிலிருந்தும் ஆசிரியர்கள் ஆண்டுதோறும் மேற்புடிப்புக்கு அனுப்பப்படுகிறுர்கள்.

தொழில் நுட்ப ஆசிரியர் பயிற்சி நிறுவனம் :

பல்தொழில் பயிலக ஆசிரியர்களுக்குத் தற்காலத் தொழில் நுட்பம், அதன் முறைகள் ஆகியவற்றைப் பயிற்றுவிக்கவும், மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கும் முறையைக் கற்பிக்கவும் வேண்டி, தொழில் நுட்ப ஆசிரியர் பயிற்சி நிறுவனம் மத்திய அரசால் சென்னையில் நிறுவப்பட்டுள்ளது. இதில் தொழில் நுட்பக் கல்வித் துறையைச் சார்ந்த ஆசிரியர்கள் பலர் பயிற்சி பெற்று வருகின்றனர்.

நிதி ஒதுக்கீடு :

தொழில் நுட்பக் கல்விக்கென திட்ட செலவினத்திற்காகச் சென்ற சில ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட நிதி விவரங்களைக் கீழே காணலாம் :

ஆண்டு	செலவு (ரூபாய் இலட்சத்தில்)
1974—75	70.06
1975—76	49.76
1976—77	70.12
1977—78	90.97
1978—79	93.81

பிற்பட்டோர் மற்றும் பெண்கள் கல்வி :

தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலைசாதியினருக்காக கல்லூரிகளிலும் மற்றும் பல்தொழில் பயிலகங்களிலும் 18 சதவிகித இடங்கள் ஒதுக்கப்படுகின்றன. எல்லா தொழில் நுட்பக் கல்லூரிகள் மற்றும் பயிலகங்களிலும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலைசாதியினர், தேர்வுகளில் நன்கு வெற்றி பெற அவர்களுக்கென்று தனியாக சிறப்பு வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

பெண்களுக்கென, தனியாக மூன்று பயிலகங்கள் சென்னை, மதுரை, கோவை ஆகிய இடங்களில் உள்ளன. இப்பொழுது இந்த மூன்று பயிலகங்களிலும் 420 மாணவிகள் சேர்க்கப்பட்டு இருக்கின்றனர். ஆனுல் இந்த எண்ணிக்கையை விண்ணப்பம் செய்வோர் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது இது மிகவும் குறைவாக உள்ளது. அதனுல் இப்பயிலகங்களில் படிக்கும் வாய்ப்பைப் பல பெண்கள் இழக்கும் நிலை உள்ளது. இதைக் கருத்தில் கொண்டு முதன் முறையாக நான்கு ஆண்கள் பயிலகங்களில் பெண்களுக்கென இடங்கள் ஒதுக்க அரசு முடிவெடுத்துள்ளது.

தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் :

தற்போது பொறியியற் கல்லூரிகள் பொதுப் பல்கலைக் கழகங்களுடன் இணைந்துள்ளன. அண்மைக் காலத்தில், அறிவியல் கலைக் கல்லூரிகள் எண்ணிக்கையில் பெரிதும் பெருகியுள்ளதால், பொதுப் பல்கலைக் கழகங்கள் தொழில் கல்வியில் போதிய அளவு கவனம் செலுத்த முடியவில்லை. இதனால் தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் நிறுவ வேண்டிய அவசியத்தை உணர்ந்த தமிழக அரசு 1978-'79க்கான நிதி அறிக்கைத் தொடரில், ''பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம்'' ஒன்றினை நிறுவ முடிவெடுத்துள்ளது.

நன்கு வளர்ந்த பல்தொழில் பயிலகங்கள் தாமே புதுக் கல்வித் திட்டங்கள் வகுக்கவும், உள்ள பாடத் திட்டங்களைச் சீராக்கவும், தொழில் நிறுவனங்களுடன் இணைந்து செயலாற்றவும், பயிற்சி அளிக்கும், கற்பிக்கும் முறைகளில் தன்னிச்சையாகச் செயல்படவும் உரிமை அல்லது தன்னாட்சி வழங்கலாம் என்று முடிவு எடுக்கப்பட்டு மூன்று பயிலகங்களுக்குத் தன்னாட்சி முறை வழங்கப்பட்டுள்ளது. இதுவும் நாட்டிலேயே முன்னோடியான முயற்சியாகும்.

மாநிலத் தொழிற் கல்விப் பயிற்சி வாரியம் :

பல்தொழில் பயிலகங்களில் கல்வித் திட்டம் வகுத்தல், தேர்வுகள் நடத்துதல் ஆகியவை தொழில் நுட்ப இயக்குநரின் பணி. இந்தப் பணியை மேற்பார்வையிடுவதற்கும், அரசுக்குத் தொழிற் கல்வி பற்றிப் பொதுவாகப் பரிந்துரை கூறவும், கல்வி அமைச்சர் தலைமையில் மாநில தொழில் நுட்பக் குழு என்ற அமைப்பு செயல்படுகிறது. இக்குழு தற்போது ஒரு பரிந்துரை செய்யும் குழுவாகவே செயல்பட்டு வருகிறது. இதை ஒரு சட்டப்படி அதிகாரமுள்ள குழுவாக அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

புதிய பல்தொழில் பயிலகங்கள் :

தமிழ்நாட்டில் தர்மபுரி, நீலகிரி, புதுக்கோட்டை மாவட்டங்கள் நீங்கலாக ஏனைய மாவட்டங்களில் ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டோ பல்தொழில் பயிலகங்கள் இருக்கின்றன. இக்குறையைத் தீர்க்கும் நோக்கத்தோடு முதற்கண் தர்மபுரியில் அரசினர் பல்தொழில் பயிலகம் ஒன்றினை நிறுவும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது.

தொழில் நுட்பக் கல்வியின் வளர்ச்சிப் பாதையில் கடந்த காலப் பணிகளின் வெற்றி, எதிர்கால முயற்சிக்கு ஊக்கத்தையும், நம்பிக்கையையும் அளிக்கிறது.

அடித்தளத்து மக்கள் அறிவொளி பெற...!

அரிசன-பழங்குடியினரின் நலனை மேம்படுத்துவதற்கான அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளைக் கீழ்க்காணும் மூன்று பெருந் தலைப்புகளின்கீழ் வகைப்படுத்தலாம்:

(1) கல்வி.

(2) வேலைவாய்ப்பும், பொருளாதார முன்னேற்றமும்.

(3) மக்கள் சுகாதாரமும், வீட்டு வசதியும்.

ஆண்டுதோறும் அரிசன, பழங்குடி மக்களின் நலத்திற்கென ஒதுக்கப்படும் நிதியில் பெரும் பகுதி அரிசனங்கள்—பழங்குடியினர் கல்விக்காகச் செலவிடப்படுகிறது.

1976-77ஆம் ஆண்டு இறுதி வரையில், 1 முதல் 9ஆம் வகுப்பு வரையில் படிக்கும் அரிசன-பழங்குடியினர் மாணவர்களுக்கும், கிறித்துவர்களாக மாறிய அரிசன மாணவர்களுக்கும் (மெட்ரிக் படிப்புக்கு முந்தியபடிப்புக்கு) புத்தகச் செலவுக்கும், சிறப்புக் கட்டணங்களுக்கும் படிப்புதவித் தொகை, பணமாக வழங்கப்பட்டது. தேவையானபோது படிப்புதவித் தொகையுடன் தேர்வுக் கட்டணமும் பணமாகவே வழங்கப் பட்டது. மேற்கூறிய படிப்புதவித் தொகையை வழங்குவதற்குப் பெற்றோர் / காப்பாளரின் ஆண்டு உயரளவு வருமான வரையறை ரூ. 3,000 ஆகும்.

1977-'78ஆம் ஆண்டிலிருந்து 4 முதல் 11 வகுப்பு வரையில் படிக்கும் அரிசன, கிறித்துவர்களாக மாறிய அரிசன மாணவர்களுக்கு அவர்களது பெற்றோரது ஆண்டு வருமானத்தைக் கருத்திற் கொண்டு பாராமல் எல்லாப் பாடப் புத்தகங்களையும் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

அரிசன, பழங்குடி வகுப்பைச் சார்ந்த (மதம் மாறியவர்கள் உட்பட) மாணவர்களுக்கு, தங்கிப் பயிலும் படிப்புதவித் தொகை, தங்கிப் பயிலாப் படிப்புதவித் தொகை, தொடரா இன மானியங்கள் ஆகியவை, பள்ளி இறுதிப் படிப்பிற்குப் பிறகு கலைப் படிப்பு, அறிவியல் படிப்பு, தொழிற்படிப்புக்குத் தொடர்ந்து வழங்கப்படும்.

நூலக அறிவியல், உடற் பயிற்சிக் கல்வி ஆகிய பட்டப்

படிப்புகளுக்கும் படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது.

கல்வியில் சிறந்த மாணவர்களுக்கு வழக்கமாக அளிக்கப்படுகின்ற படிப்புதவித் தொகையுடன் ''காந்தியடிகள் நினைவுச் சிறப்புக் கல்வி உதவித் தொகை'' தனிப்பட்ட முறையில் செயலாக்கம் அளிக்கின்றது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் முதலாவதாகவும், இரண்டாவதாகவும் வெற்றி பெறும் அரிசன மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் கல்லூரிக் கல்வியைத் தொடருவதற்கு உதவி செய்யப்படுகிறது. அவர்கள் ஒவ்வொருவருக்கும் திங்கள் ஒன்றுக்கு 80 ரூபாய் சிறப்புக் கல்வி உதவிப் பணம் அளிக்கப்படுகிறது. அம் மாணவர்கள், மாணவர்கள் இல்லத்தில் தங்க வேண்டுமென்ற நிபந்தனையோ வருமான வரையறையோ இத்திட்டத்தின்கீழ் இல்லை.

தமிழ்நாட்டில் அரிசன நலப் பள்ளிகள் 942 உள்ளன. இப் பள்ளிகளில் அரிசன, பழங்குடியினர் ஏனைய வகுப்பைச் சேர்ந்த சுமார் 1.36 இலட்சம் மாணவர்கள் கல்வி பயிலுகின்றனர்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் பாலவாக்கத்திலுள்ள தொடக்கப்பள்ளி, நடுநிலைப் பள்ளியாக 1977-'78ஆம் ஆண்டில் உயர்த்தப்பட்டது.

பழங்குடியினருக்காக, தங்கிப் பயிலும் பள்ளிகள் 85 உள்ளன. இவை அரிசன-பழங்குடியினர் நலத் துறையின் நிர்வாகத்தின் கீழ் உள்ளன.

அரிசன நலப் பள்ளிகளில் அல்லது அரசினர் மாணவிகள் இல்லங்களில் தங்கிப் பயிலும் மாணவிகள் அனைவருக்கும் ஒவ்வோர் ஆண்டும் இரண்டு ஜோடி உடைகள் வழங்கப்படுகின்றன.

எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் 60 சதவீதம் மதிப்பெண்களும் அதற்கு அதிகமாகவும் பெற்று உள்ள அரிசன-பழங்குடியினர் கிறிஸ்தவ மதத்திற்கு மதம் மாறிய அரிசன மாணவர் ஒவ்வொருவருக்கும் தகுதி மானியமாக 300 ரூபாய் ஒவ்வோர் ஆண்டும் வழங்கப்பட்டு வருகிறது. இதேபோல், புகுமுக வகுப்புத் தேர்வில் முதல் வகுப்பில் தேறிய அரிசன-பழங்குடி கிறித்துவ மதத்திற்கு மாறிய அரிசன மாணவர்களுக்கு ரொக்க மானியமும் வழங்கப்பட்டு வருகிறது.

அரிசனக் குடியிருப்புப் பகுதிகளில் 50 பாலர் பள்ளிகளை ஏற்படுத்த அரசு 1977-'78ஆம் ஆண்டில் ஆணை பிறப்பித்துள்ளது. ஒவ்வொரு பாலர் பள்ளியிலும் 70 குழந்தைகள் இருப்பர்.

1978-79ஆம் ஆண்டில்மேலும் 50 பாலர் பள்ளிகளை அரிசன குடியிருப்புப் பகுதிகளில் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக, 4.88 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

அரிசன நலப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு நண்பகல் உணவு அளிக்கப்படுகிறது.

மாணவர்கள் பள்ளிக்குத் தவறாது வருகை தர அவர்களை ஊக்குவிப்பதும், வருமானத்தை உயர்த்துவதற்கு மாணவர்களை அவர்களது பெற்றோர் வேலை பார்க்க அழைத்துச் செல்வதைத் தவிர்ப்பதும் நண்பகல் உணவு அளிப்பதன் நோக்கமாகும்.

'கேர்' நிறுவனத் திட்டத்தின் கீழ் கல்வித் துறை ஒரு மாணவனுக்கு ஒரு நாளைக்கு 90 கிராம் உணவுத் தானியங்கள், 6 கிராம் எண்ணெய் ஆகியவற்றை ஒரு கல்வியாண்டில் 100 நாட்களுக்கு வழங்கி வருகிறது.

தமிழ்நாட்டில் அரிசனங்களுக்காகவும் பழங்குடியினருக்காகவும் 1,028 பள்ளிகளை இத் துறை நடத்தி வருகிறது. இக்கல்வியாண்டில் அரிசன-பழங்குடியினர் நலப் பள்ளிகள் திறக்கப்பட்ட பிறகு மாணவர்களுக்கு அவர்கள் எந்த வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருந்த போதிலும் அதனைக் கருதிப் பாராது அவர்களுக்குப் பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், சிலேட்டுகள் ஆகியவை இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

தட்டச்சு-சுருக்கெழுத்துக் கல்வியில் போதிய அளவு எண்ணிக்கையில் அரிசன, பழங்குடி மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பெறவில்லையாதலால் மேற் சொன்ன பதவிகளுக்கு அவர்களுக்காக ஒதுக்கி வைக்கப்பட்டு உள்ள பதவிகள் நிரப்பப்பட இயலவில்லை. இதனைக் கருத்தில் கொண்டு, அரிசன-பழங்குடி வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்குத் தட்டச்சு-சுருக்கெழுத்துக் கல்வியில் பயிற்சி அளிப்பதற்கான சிறப்புத் திட்டம் ஒன்றை அரசு கொண்டு வந்துள்ளது.

அரிசன நல உயர்நிலைப் பள்ளிகளில் 9 முதல் 11 வரை வகுப்புகளில் தவறிய மாணவர்களுக்கு (அரிசன-பழங்குடி மாணவர்களுக்கு) இலவசமாகப் பயிற்சி அளிக்கும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அரிசன மாணவர்கள் தங்களது வாழ்க்கை நிலையை வளப்படுத்திக்கொள்ள 11 பட்டயக் கணக்கர் பாடமுறையைப் பயில உதவுவதற்காக அரசு திட்டம் ஒன்றிற்கு அனுமதித்துள்ளது.

சட்டத் தொழிலை மேற்கொள்ள அரிசன பழங்குடியினரிடையே உள்ள சட்டப் பட்டதாரி மாணவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் பொருட்டு அவர்களுக்கு நிதியுதவி அளிக்கும் முக்கியத் திட்டம் ஒன்றை அரசு கொண்டு வந்துள்ளது.

பள்ளிகள், கல்லூரிகள், தொழிற்பயிற்சிப் பள்ளிகள் ஆகியவற்றில் பயிலும் மாணவர்களுக்கு மாணவர் இல்ல வசதிகள் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகின்றன.

அரிசனங்களுக்கென்று 602 மாணவர் இல்லங்கள் உள்ளன. இவற்றில் மொத்தம் 37,829 மாணவர்கள் உள்ளனர். 1978-79ல் மாணவர்களுக்காக 11 உயர்நிலைப்பள்ளி மாணவர் இல்லங்களையும், மாணவிகளுக்காக 2 உயர்நிலைப் பள்ளி மாணவியர் இல்லங்களையும், கல்லூரி மாணவர் இல்லம் ஒன்றையும் தொடங்கக் கருதப்பட்டுள்ளது.

மருத்துவக் கல்வி, பொறியியல் கல்வி ஏனைய தொழிற் கல்வி நிறுவனங்கள் உட்பட, கல்வி நிறுவனங்களில் அரிசனங்களுக்கும் பழங்குடி மக்களுக்கும் உரிய இடம் கொடுக்க, 18 சதவீத இடங்கள் அரிசன மாணவர்களுக்கும் பழங்குடி மாணவர்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன.

பிற்பட்டோர் நலம்...

பிற்பட்ட வகுப்பினைச் சார்ந்தவர்கள் கல்வி கற்கப் போதிய வசதியின்மையால் இன்னமும் பிற்பட்ட நிலையிலேயே இருக்கிறார்கள். அவர்களுடைய முன்னேற்றத்தினைக் கருத்திற் கொண்டு, கல்வி மேம்பாட்டிற்கு வழிவகை செய்வது மிக அவசியம். எனவே, பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும், குற்றப் பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும் கல்வி வசதிக்காக, படிப்பு உதவித் தொகை மற்றும் உண்டி, உறையுள் வசதிகள் அளித்து ஊக்குவிக்கப்படுகிறது.

பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு ஒன்பதாம் வகுப்பிலிருந்தும், குற்றப் பரம்பரைப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட மாணவர்களுக்கு முதலாம் வகுப்பிலிருந்தும் படிப்பு உதவித் தொகை வழங்கப்படுகிறது. இந்த உதவித் தொகை பெறுவதற்கு மாணவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 2,500க்கும் அதிகமாக இருக்கக் கூடாது.

உதவித் தொகை பெற பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் முந்தைய ஆண்டுத் தேர்வில் 40 சதவீதம் மதிப்பெண்கள் பெற்றிருந்தாலே போதுமானது. ஆனால், குற்றப் பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினைச் சேர்ந்த மாணவர்கள் முந்தைய ஆண்டுத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருந்தாலே போதுமானது.

மேலும், கலை, அறிவியல், மருத்துவம், பொறியியல், பட்ட மேற்படிப்பு மற்றும் சட்டம் போன்ற படிப்புகளுக்கும் உதவித்தொகை வழங்கப்படுகின்றது. மேலும், அவர்களுடைய முன்னேற்றத்திற்காகப் பட்டயக் கணக்கர் (சார்ட்டர்டு அக்கவுண்டன்ட்) பயிற்சி பெறும் மாணவர்கட்கு உதவித் தொகை வழங்க அரசு 1973-74ஆம் ஆண்டு முதல் அனுமதித்திருக்கிறது. 1978-79க்கு ரூ. 40,000 ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

1977-78ஆம் ஆண்டு முதல் அரசு உயர் பள்ளி வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு உதவித் தொகையினைப் பணமாக வழங்குவதற்குப் பதிலாக, குறிப்பிட்ட புத்தகங்களை வழங்கும் கல்வி நிலையங்களுக்கு அவைகளுக்காகத் தனிக் கட்டணமும், பள்ளி இறுதி நிலைத் தேர்வு எழுதும் மாணவர்களுக்குரிய தேர்வுக் கட்டணமும், அரசுத் தேர்வுகள் இயக்குநருக்கு அரசால் நேரிடையாகச் செலுத்தப்படும். இச்செலவுகள் முன்பு வழங்கப்பட்டு வந்த உபகாரச் சம்பள அளவுக்கு ஏற்கப்படும்.

1974-75ல் அரசு பிற்பட்ட வகுப்பு மற்றும் குற்றப்பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பு மாணவர்களின் படிப்பு உதவித் தொகைக்கான பெற்றோர்களின் ஆண்டு வருமானத்தை ரூ. 2,000த்திலிருந்து ரூ. 2,500க்கு உயர்த்தியது. ஆனால், இச்சலுகை படிப்புக் கட்டணச் சலுகைகளுக்கு வழங்கப்படவில்லை. எனவே, ஆண்டு வருமானம் ரூ. 2,000த்திற்கு மேல் உள்ள பெற்றோரின் குழந்தைகள் (மாணவர்கள்) தமிழ்நாடு கல்வி விதிகள் 92-ன் படியோ அல்லது இத்துறையின் வாயிலாகவோ படிப்புக் கட்டணச் சலுகையைப் பெற முடியவில்லை. எனவே, வருமான வரம்பை ரூ. 2,000த்திலிருந்து ரூ. 2,500க்கு உயர்த்த உத்தேசிக்கப்பட்டு உள்ளது.

புகுமுக வகுப்பு வரையிலும் மாணவர்களிடம் படிப்புக் கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை. புகுமுக வகுப்பிற்குமேல் பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும் மிகப் பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும் அவர்களுடைய பெற்றோர்களின் வருமானம்ஆண்டிற்கு ரூ. 1,500க்கு மேற்படாதிருப்பின் முறையே அரைக் கட்டணச் சலுகையும் முழுக் கட்டணச் சலுகையும் வழங்கப்படுகிறது.

மாணவர் விடுதிகளுக்கான கட்டடங்கள் கட்டும் பொறுப்பைத் தமிழ்நாடு அரிசன வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. நடப்பாண்டில் தமிழ்நாட்டில் பல்வேறு

இடங்களில் பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்காக 50 விடுதிகள் கட்டப்பட்டு வருகின்றன.

அரசினர் நடத்தும், குற்றப் பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் பள்ளிகளில் படிக்கும் எல்லா மாணவர்களுக்கும் புத்தகங்களும் சிலேட்டுகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

இதனால் பயன்பெறும் மாணவர்கள் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்துள்ளது. ஆரம்பப் பள்ளிகளில் முதல் வகுப்பு முதல் மூன்றும் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு இலவசமாக அளிக்கப்பட்ட புத்தகம், சிலேட்டுகள் பெற்றவர்கள் 1977-78ல் 40,300 பேர். 1978-79ஆம் ஆண்டிலும் இதே அளவு மாணவர்களுக்கு இவ்வுதவி அளிக்கப்படும்.

குற்றப் பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் பள்ளிகளிலும், உணவு விடுதிகளிலும் உள்ள எல்லா மாணவ, மாணவியருக்கும் ஒவ்வொரு ஆண்டும் 2 செட் ஆடைகள் வழங்கப்படுகின்றன.

கல்லூரிகளில் படித்து அதிக மதிப்பெண்கள் பெற்ற பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும், குற்றப்பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும் தாங்கள் எடுத்துள்ள பாடத்தில் அதிகத்திறமை பெற 1975-'76-ஆம் ஆண்டு முதல் தனிப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டம் சென்ற இரண்டு ஆண்டுகளாக நடைமுறையில் உள்ளது. இதற்கு 1978-'79-ஆம் ஆண்டிற்கு ரூபாய் 25,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

டிசம்பர் '71-ல் பிற்பட்ட வகுப்பு மாணவர்களை ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., மற்றும் உயர் அரசுப் பணிகளுக்கான தேர்வுகள் எழுதப் பயிற்சி அளிக்கும் வகையில் சிறப்புப் பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வாறாக, பிற்பட்ட வகுப்பு மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

குழந்தைகளுக்குத் தேவை சத்தான உணவு
பயிர்களுக்குத் தேவை
விஜய்

குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு எல்லாச் சத்துக்களும் அவசியம். அதுபோலவே பயிர்களின் வளர்ச்சிக்குத் தழை, மணி, சாம்பல் சத்துக்கள் மூன்றையும் அளித்தால்தான் முழுப் பலனைப் பெறலாம்.

இம் மூன்று சத்துக்களையும் ஒருங்கே கொண்டவை விஜய் காம்ப்ளெக்ஸ் உரங்கள். உங்கள் பயிர்களுக்கும் நிலங்களுக்கும் ஏற்றவாறு சத்துக்களை அளிக்க விஜய் 17-17-17, விஜய் 14-28-14 காம்ப்ளெக்ஸ் ரகங்கள் உங்களுக்கு இப்போது கிடைக்கின்றன. விஜய் உரங்கள் நவீன முறையில் தயாரிக்கப்பட்டு, நன்கு பரிசோதிக்கப்பட்ட தரமான உரங்களாகும்.

தரமான விஜய் உரங்களைத் தயாரிப்பது, இந்தியாவின் மிகப்பெரிய உரத் தொழிற்சாலைகளில் ஒன்றான மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்.

உங்கள் பயிர்களுக்கு விஜய் உரங்களைப் பயன்படுத்தி அதிக விளைச்சலைப் பெறுவதற்கான சாகுபடி முறைகளை அறிய, கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதி, இலவச வெளியீடுகளைப் பெறுங்கள்.

ஏரியா மானேஜர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
5/1 ராமச்சந்திரபுரம், தென்னூர், திருச்சி 620 017

VIJAY
MADRAS FERTILIZERS



MFL-1517

கல்வியும் கிராம வளர்ச்சியும்

டாக்டர் மால்கம் எஸ் ஆதிசேஷய்யா

துணை வேந்தர், சென்னைப் பல்கலைக் கழகம்

கல்வியும் கிராம வளர்ச்சியும் தொடர்பான சில குறிப்புகளை முதற்கண் நாம் அறிந்து கொள்வது தக்கதாகும்.

கல்வி இரு வகைப்படும். கல்வி நிலையங்களில் அளிக்கப்படும் அனைத்துப் பயிற்சிகளும், பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்களில் அளிக்கப்பெறும் கல்வி நெறியும் ஆக இரண்டும் இதனுள் அடங்கும். கல்விக்கான, வரவு-செலவுத் திட்டத்தில் 98சதவீதத் தொகை இக்கல்விப் பணிக்காகச் செலவிடப் பெறுகிறது. இரண்டாவது வகைப்பட்ட கல்வியில் உழவர் கல்வி, தொழிலாளர் கல்வி, இளைஞர் கல்வி, மகளிர் கல்வி, விளையாட்டு, தேசிய சமூக நல அணி, தேசிய மாணவர்படை, பள்ளி, கல்லூரிகளில் தொடர்ந்து படிக்க இயலாதோர் கல்வி, அஞ்சல் வழிக் கல்வி, தனிக் கல்வி ஆகிய அனைத்தும் அடங்கும், இன்னொரு வகையாகக் குறிப்பிடுவதானால் கல்வி என்பதில் எல்லா வகையான முறைசாராக் கல்வியும் (Non-formal Education) அடங்கும். கல்வித் துறையின் ஆண்டுச் செலவில் 2 சதவீதம் இதற்கெனச் செலவிடப் பெறுகிறது.

கிராம வாழ்க்கை நிலையினை மேம்படுத்தும் நோக்குடன் மேற்கொள்ளப்படும் எல்லா முயற்சிகளும் ''கிராம வளர்ச்சி''யாகக் கருதப்படும்.

1. கிராம வாழ்க்கை நிலையில் உள்ள ஏற்றத் தாழ்வுகளை அகற்றுதல்; நில உடைமையில் நேர்மையின்மையைக் களைதல்.

2. உற்பத்தித் திறன், வருவாய், வாழ்க்கைத் தரம் ஆகியவற்றை உயர்த்துதல்.

3. வீட்டு வசதி, சாலை, குடிதண்ணீர், நல்வாழ்வுச் சூழல், பண்பாடு போன்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்.

4. அரசியல் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் மக்கள் பங்கு கொண்டு, நலம் பயக்கும் வகையில் செயற்படுதல்.

மாறுக நிலவும் சூழல்

கல்வி, கிராம வளர்ச்சி இவற்றிற்கிடையே யுள்ள தொடர்பு பற்றி நேர்மாறுக நிலவும் சூழல் பற்றி நாம் முதலில் அறிந்து கொள்ள வேண்டும்.

பள்ளிக் கல்வி, கல்லூரிக் கல்வி ஆகியவற்றுக்கும், கிராம வளர்ச்சியை எதிர்நோக்கியுள்ள சிக்கல்களுக்கும் தொடர்பில்லாத நிலை இருந்து வருகிறது. வறுமை, சமனற்ற சீர்கேடு, குறைந்த உற்பத்தித் திறன், வேலையில்லாச் சிக்கல், படித்த கல்விக்கான பணி வாய்ப்பின்மை, ஊட்ட உணவின்மை, மக்கள் தொகைப் பெருக்கம் ஆகியவை கிராம வளர்ச்சியை அச்சுறுத்தும் சூழல்களாகும். இவைகளுக்குத் தீர்வு காண இப்போதைய கல்வி முறையால் இயலாது. அரசியல் வளர்ச்சியின் வாயிலாக, தொழில் வளங்களின் மூலமாக, அயராத உழைப்பின் வழியாகத்தான் மேற்சொன்ன சிக்கல்களுக்குத் தீர்வு காண இயலும். நிலவுடைமை, பயன்பாடு, நில மேம்பாடு, முறையாகப் பாசன நீரைப்பயன்படுத்துதல், கலைகள், கைத்திறத் தொழில்கள், வேளாண் தொழில்கள், விற்பனை முறை, பங்கீட்டு முறை ஆகியவற்றை மேம்படுத்துதல், கடன் வசதிகள் செய்து கொடுத்தல், இடுபொருள்கள் வழங்குதல், ஆராய்ச்சிக்கு வகை காணல், காலங் காலமாக நிலவி வரும் முறைகளை மாற்றியமைத்து வாழ்க்கை நிலையை மேம்படுத்துதல் ஆகியவை இதனுள் அடங்கும். இப்பணிகளெல்லாம் முதலில் முடிக்கப்பட வேண்டும். இல்லையேல் கிராம வாழ்க்கை நடைமுறையில் நமது பள்ளிகள் உருவாக வேண்டுமென்ற நமது குறிக்கோளுக்கு ஊறு நேரலாம். கிராமச் சூழலில் இயல்பாக இன்று காணப்படும் வறுமை, சமனின்மை, தேக்கநிலை ஆகியவற்றோடு பள்ளிக் கல்வி முறையும் சேர்ந்து மூழ்கிவிடும்.

இரண்டாவது முரண்பட்ட கருத்துகள் வருமாறு : கிராமப் பள்ளிகள், கிராமப் பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றைத் தனிப்பட்ட அமைப்பாகத் தோற்றுவிப்பதன் மூலம் கிராமச் சிக்கல்களுக்குத் தீர்வு காண முயல்வது என்பது இயலாததாகவும் வெற்றி தராததாகவும் முடியும். தனிப்பட்ட அமைப்பு முறையானது ஒரு சாராருக்கே கல்வி என்னும் கொள்கையில் அமைவதாகும். கல்வியின் குறிக்கோளுக்கும் இயல்புக்கும் முரணானது. தமது குழந்தைகளின் பொருட்டுப் பெற்றோர்கள் நாடும் கல்வி முறையும் இஃது அன்று.

வேளாண்மை அல்லது கிராம நலம் அல்லது ஊட்டச் சத்து உணவு நடை முறைகளில் அல்லது குடும்ப நலத்தைப் பள்ளி, கல்லூரிக் கல்வித் திட்டங்களில் சேர்ப்பதால், கிராம வளர்ச்சிச் சிக்கல்களுக்குத் தீர்வு காண முடியாது. ஏனெனில்,

(அ) பள்ளி, கல்லூரிக் கல்வியானது ஒரு பொது அமைப்புக்கு வழி கோலுவதாகும்.

அது தனித்த திறன்களை வளர்ப்பது மட்டுமன்று.

(ஆ) இந்த முறையினை நடைமுறைப்படுத்தும்போது பயிற்றுவிப்பிலும் நடைமுறையிலும் பல சிக்கல்கள் தோன்றும்.

ஆக்கவழித் திட்டங்கள் :

இந்த அடிப்படையில் சில ஆக்க வழித் திட்டங்களை உருவாக்குதல் இயல்வதாகும். கிராம வளர்ச்சியின் உடனடித் தேவைகளைப் பொறுத்துச் சில இங்கே குறிக்கப்பெற்றுள்ளன. அவை-

—பள்ளி, கல்லூரிக் கல்வியிலிருந்து கல்வி தொடராமற் போன இளைஞர், மகளிர் கல்வி.

—பல்கலைக் கழகக் கல்வி (கலை, அறிவியல் மற்றும் தொழிற்கல்வி)

—பள்ளிக் கல்வி ஆகிய இவற்றோடு தொடர்புடையவை.

உழவர் கல்வி :

மைய அரசு உயரிய உற்பத்தித் திறன் குறியீட்டு இலக்கினை வரையறை செய்கிறது. இதற்கு இணங்க மாநில அரசு, மாவட்டம், வட்டம், வட்டாரம் எனப் பகுதி பகுதியாகப் பகுத்துப் பல்வேறு இலக்குகளை நிச்சயிக்கிறது. வட்டார அலுவலர், விரிவாக்க அலுவலர் ஆகியோர் நூற்றுக் கணக்கான உழவர்களிடம் இத் திட்டத்தினைக் கொண்டு செல்கின்றனர். இந்த இலக்குகளையே நம்பிக் கொண்டிருக்க முடியாது. இத்தகு முறையினால் கிராம வளர்ச்சியினைப் பெற முடியாது. உழவர்களுக்குக் கிடைக்கக் கூடிய மானியங்கள், உதவித் தொகைகள் பற்றிய விவரங்கள் கிராம வளர்ச்சி அலுவலருக்குத் தெரியும். ஏனென்றால் அவற்றின் நிர்வாகம் அவரிடம் உள்ளது. ஆனால், கிராம வளர்ச்சி என்பது இவற்றையெல்லாம் நம்பி இல்லை. பின்வரும் துறைகளில் உழவர்களுக்குப் பயிற்சி அளிப்பதனால் கிராம வளர்ச்சியினைக் காணலாம்:

(அ) இயற்கைச் சூழலுக்கு அடிபணிதலை நீக்கி அதனைக் கட்டுப்படுத்தும் முறை.

(ஆ) காலம் காலமாக இருந்து வரும் நடைமுறைகளையும் பழைய வழக்கங்களையும் தவிர்த்துப் புதிய தொழில் நுட்ப முறையில் சோதனை முயற்சி மேற்கொள்ளல்.

(இ) குடும்ப நிர்வாகம்என்பது வேறு ; பண்ணை நிர்வாகம் வேறு. குடும்பப் பற்றும் பாசமும் எவ்வாறு குடும்ப நிர்வாகத்தை முறைப்படுத்துகிறது? பண்ணையின் செவ்விய நிர்வாகம் எவ்வாறு பயன் அளிக்கும் என்பதை அறிதல்.

கிராமக் கல்வி வளர்ச்சியில் ஈடுபட்டுள்ளோரும் வேளாண்மை விரிவாக்க அலுவலரும் இத்தகைய கல்வியையே குறிக்கோளாகக் கொள்ளுதல் வேண்டும். இந்தப் பணியிலே வேளாண் பல்கலைக் கழகங்கள் ஆர்வமும் முனைப்பும் கொள்ள வேண்டும். இதற்காக அமைந்த நெறி முறையே தொழில்நுட்பத் திறன் முறை (Techno cracy) என அழைக்கப்படும் முறையாகும். இது அடிப்படை முறையிலேயே செய்யப்படும் சோதனையாகும். நடைமுறையறிவு மற்றும் கல்வி ஆகியவை இதில் உள்ளடங்கியவை ஆகும். இந்தக் கோட்பாடு வழியில் நாம் செயல்படலாம். அடிப்படை முறையில் தொடங்கிப் படிப்படியாக நடைமுறைக் கல்வியைக் கொண்டு வருவதனால் உற்பத்தித் திறன் பெருகும்; வேலைவாய்ப்புகள் உருவாகும்.

பள்ளி, கல்லூரிகள் சாராதார்க்குக் கல்வி

இன்று பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் உள்ள இளைஞர்களை விட கல்வி பயிலாது வெளியில் உள்ள இளைஞர்களும் குழந்தைகளும் மிகுதியாக உள்ளனர். இப்படிப்பட்டவர்களைப் பள்ளியில் பயிலக் கொண்டு வர வாய்ப்பில்லாதது கொடுமையாகும். இவர்களைப் பள்ளிக்குக் கொண்டு வருவதற்கான அதிகாரமும் ஒரு குறிப்பிட்ட எல்லையில் நின்றுவிட்டது. இது அதன் தவறுமல்ல.

பள்ளிக்கு வெளியே உள்ளவர்களுக்கான முழுமையான புதிய புறக்கல்வித் திட்டமே இங்கு வேண்டப்படுகிறது. இத்திட்டம் குழந்தைகளையும் இளைஞர்களையும் பணிக்குத் தயாராக்குவதுடன் அவர்களுக்குப் பொதுக் கல்வியையும் ஊட்டும். இதற்காகக் கிராமங்களில் கிடைக்கும் வாய்ப்பு, வசதி, வேலைவாய்ப்பு மதிப்பீடுகள் செய்யப்பட வேண்டும். நாட்டில் பெரும்பான்மையாக உள்ள வேலையில்லா ஆசிரியர் பயிற்சிப்பள்ளிகள், வேளாண் பல்கலைக் கழகங்கள் ஆகியவை மேற்கண்ட மதிப்பீட்டினை மையமாகக் கொண்டு பின்வரும் அடிப்படையில் கல்வித் திட்டத்தை அமைத்துக் கொள்ள வேண்டும்:

1. நன்செய், புன்செய் உழவுத் தொழில்.
2. விலங்கின வளர்ப்பு.
3. மீன் வளம்.
4. காட்டு வளம்.
5. கிராமக் கைத்தொழில் மற்றும் கலைகள்.
6. துணைத் தொழில் கலைகள்.

முறைசாராக் கல்வியில் அடங்கும் இத்தகைய கல்வியானது கிராம வளர்ச்சிக்கு விரைவாகவும் உடனடியாகவும் பயன்தர வல்லதாகும்.

கல்லூரிக் கல்வி :

அடுத்து, கிராம வளர்ச்சியில் பல்கலைக் கழகக் கல்லூரிக் கல்வியின் பொருத்தம் குறித்து நோக்குவோம். ஒருபுறம் கலை, அறிவியல் கல்லூரிகள், மறுபுறம் தொழிற்சார்புக் கல்லூரிகள். இவை தொடர்பான பல்கலைக் கழகங்களுக்கிடையே வேறுபாடுகளும் கண்டறியப்பட வேண்டும்.

கலை, அறிவியல் கல்லூரிகள் பல்கலைக் கழகங்களைப் பொறுத்தவரை, பல்கலைக் கழக மானியக் குழு கிராம வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டு செயற்படுத்தத் திட்டம் வகுத்து 17 பல்கலைக் கழகங்களைத் தேர்ந்து எடுத்துள்ளது. பட்ட வகுப்பு நிலையில் பயிற்றுவிக்கப் பெறும் 3 பாடங்களுள், இரண்டு பாடங்கள் கொள்கைக் கல்வியாகவும் மூன்றாவது பாடம் இவ்விரண்டின் செயற்பாட்டுப் பயிற்சியாகவும் இத்திட்டத்தில் அமையும் :

தாவரவியல், வேதியல், பழத் தோட்டக்கலை.

விலங்கியல், வேதியல், மீன் வளர்ப்பு.

தாவரவியல், வேதியல், மண்ணியல்.

இயற்பியல், வேதியல்; உரங்கள்.

நுண் உயிரியல், தாவரவியல், ஊட்டச் சத்துணவு நடைமுறை.

பொருளியல், வ்ணிகவியல், வேளாண் பொருள் சந்தை அல்லது நில மேலாண்மை.

பொருளியல், அரசியல், ஊராட்சி முறை.

செயல்திறனை உருவாக்காமல் உள்ள இந்த அணுகுமுறையில் பலன்கள் இல்லை.

அண்மைக்காலம் வரை கண்டறியப்பட்ட அரிய விஞ்ஞான முடிவுகளைக் கலை, அறிவியல் பல்கலைக் கழகங்களில் இணைப்பதன் மூலம் பயிலுதல், பயிற்றுவித்தல், மதிப்பீடு செய்தல் ஆகிய முத்திறன்களிலும் புதுமை உண்டாக்க வேண்டும்; அப்போதுதான் சிக்கல்களுக்குத் தீர்வு காணமுடியும்.

இப்போது பயிற்றுவிக்கப்படும் அறிவியல் துறைகள் தொழில் வயப்பட்ட மேலைநாடுகளின் போக்கினைப் பின்பற்றி, நாம் கடன் பெற்றுக்கொண்ட மாதிரிகளாக அமைந்துள்ளன. ஊர்ப்புறச் சூழல்களுக்கு ஏற்ற வகையில் கிராம நல வளர்ச்சிக்கு உதவும் வகையில் சிற்றூர் இயல்பு நெறிகளுக்கு ஏற்றவகையில் நாம் பயிலும் சமூகம், மனிதயியல், இயற்கை அறிவியல், இயற்பியல், மருத்துவம், பொறியியல் முதலிய அறிவியல் ஆற்றல்களை வகைப்படுத்துவது பல்கலைக் கழகங்களின் முன் நிற்கும் நெடும் பணியாகும். இவ்வழியில்தான் பல்கலைக் கழகக் கல்வி அமைய முடியும்.

தொழில் சார்ந்த கல்லூரிகள் பல்கலைக் கழகங்களைப் பொறுத்த வரையில், வேளாண்மை, கால்நடை, மருத்துவம், பொறியியல் கல்லூரிகள் நேரிடையாகக் கிராம வளர்ச்சிக்குத் துணை புரிய இயலும்.

தொழிற்சார்புக் கல்லூரிகளையும் பல்கலைக் கழகங்களையும் அணுகும்போது, சிறப்பாகக் குறிக்கத் தக்க 3 கருத்துகளை ஆராய்வோம்: முதலாவதாக, தொழில் சார்ந்த இக்கல்வி நிலையங்கள் ஆண்டு முழுவதும் கிராம வளர்ச்சிக்கு ஆக்கம் தரவல்ல ஆய்வுத் திட்டங்களில் ஈடுபட வேண்டும். இரண்டாவதாக, ஆய்வுத் திட்டங்களினால் ஆக்கபூர்வமான விளைவு ஏற்பட வேளாண்மை, உடல் நலம், மற்றும் பொறியியல் விரிவாக்க அலுவலர்கள் வாயிலாக ஆய்வுக் கூடங்களுக்கும்; நிலம் அல்லது செடி அல்லது விலங்கின வளர்ப்பு இவைகளுக்குமிடையே தொடர்பு இருக்க வேண்டியதும் இன்றியமையாததாகும். கொள்கை நிலைக்கும், செயல் நிலைக்கும் உள்ள தொடர்பு குறைவுடையதாகவே உள்ளது. இறுதியாக, மருத்துவம், பொறியியல் படிப்பில் உள்ள மாணவர்கள் ஐந்தாண்டில் ஈராண்டினில் உயர்நிலைப் பள்ளி அல்லது புகுமுக வகுப்பில் படித்ததையே மீளவும் படிக்கிறார்கள் என்னும் உணர்வும் வளர்ந்து வருகிறது. ஆகவே, இந்த ஓராண்டை மருத்துவக் கல்வி மாணவர்கள் இறுதி ஆண்டில் தொடக்கச் சுகாதார நிலையத்திலும், பொறியியல் மாணவர்கள் கிராம வேளாண்மை மையங்களிலோ தொழிற்சாலைகளிலோ பயனுறச் செலவிடலாம்.

பள்ளிக் கல்வி :

பள்ளிக் கல்வியைப் பொறுத்த வரை, கிராம வளர்ச்சிக்குத் தொடர்பாகப் பெரும்பாலும் திட்டமேதும் இடம் பெறவில்லை என்றே கூறிவிடலாம். இந்தச் சூழலில் ஒவ்வொருவரையும் கிராம வளர்ச்சிப் பணியில் ஈடுபட உருவாக்கும் களமாகப் பள்ளி அமைய வேண்டும். கல்வி பயிலும் அனுபவத்தோடு பணி அனுபவத்தினையும் அவர்களுக்கு அளிப்பதே பள்ளிகளின் தொடக்க முயற்சியாக அமைதல் வேண்டும். ஆனால் இதற்கு ஏராளமான முன்னோட்ட முயற்சிகளும் இடைவிடாத முயற்சிகளும் தேவை. மூலப் பொருள்கள் வேலைவாய்ப்புக்கள் ஆகியவை குறித்துக் கிராமப் பகுதிகளில் மதிப்பீடு செய்யவும், கல்வி கற்பிப்பதற்கான வசதிகளைப் பெருக்கும் திட்டங்கள், ஆசிரியர்களுக்குப் பயிற்சியும் மறுபயிற்சியும் அளித்தல், மாநில வாரியாகவும் வட்டாரச் சூழல்களுக்கேற்பவும் பணியனுபவத்தில் போதுமான வளர்ச்சியினைக் கண்காணிப்பதற்கு மாநில அளவில் அமைப்பு ஒன்றினை மராட்டிய மாநிலத்தில் உள்ளதைப்போல உருவாக்க வேண்டும்.

சிந்திக்கும் திறனும், பழக்கமும், வருமுன் உணர்வும், துல்லிய சிந்தனையும், பரந்த மனமும் வாய்ந்த உணர்வுகளை உருவாக்குவதும், கல்வியின் குழு உணர்வுகளை உருவாக்குவதும் கல்வியின் உடனடியான குறிக்கோள்களாக வேண்டும். கல்வித் திட்டத்தில் மாற்றங்களைச் செய்து கொண்டிராமல் எழுத்து, படிப்பு, கணக்கு ஆகிய முத்திறன்களை வளர்ப்பதற்கான தொடக்க முயற்சிகளில் நாம் ஈடுபட வேண்டும். பொருளியல், அறிவியல், உடல் நலம், சுகாதாரம் தொடர்பான — அறிவு வளர்ச்சியும் பெருக வேண்டும்.

இவை கிராம வளர்ச்சிக்கு நெடுந்தொலைவில் இருப்பதாகத் தோன்றலாம். எனினும் கிராம வளர்ச்சிக்குப் பணி புரியும் களத்தை உருவாக்கும் நோக்கிலேயே பள்ளிகள் அமைத்தலே நமது குறிக்கோளாகும்.

முடிவுரை :

பன்முகப்பட்ட முறைசாராக் கல்வியானது கிராம வளர்ச்சிக்கு நேரடியாகவும் இன்றியமையாத வகையிலும் பயன் நல்க வல்லது என்பது பொதுவான முடிவாகும். கிராம வளர்ச்சியின் பன்முகப்பட்ட தேவைகளையும் காட்சிகளையும் போலப் பல திறப்பட்டதாகவும் தனித் தன்மையினதாகவும் இது விளங்குகிறது. முறையான கல்வியானது தொழிற்கல்வி நிலையில், மாற்றி அமைக்கப்பட்டால் கிராம வளர்ச்சிக்கு முன்னதைப் போலவே பயன் நல்கும். கிராமச் சமூக அமைப்பில் மாற்றம் காணாத வரை எவ்வகையான சீர்திருந்திய பள்ளி முறையும் உண்மையிலேயே கிராம வளர்ச்சியை மேம்படுத்துமா என்னும் வினா எழக்கூடும். கிராமச் சமூகத்தில் பொருளால் நலிவுற்ற பிரிவினரைக் கூட்டுவித்தும் கல்வி புகட்டியும் நில உடைமை ஆதிக்கம், தொழில் ஆதிக்கம், அரசியல் ஆதிக்கம் ஆகியவற்றை உடைத்தெறிய வழிகாண வேண்டும். அப்போதுதான் நியாயமான கிராம சமுதாயக் கட்டுக்கோப்பு ஒன்று உருவாகும். இந்தச் செயல்கள் அனைத்தும் கல்வி அமைப்பில்—முறைசாராக் கல்வி அமைப்பில் உள்ளடங்கியவை. இவை அரசியல் நடவடிக்கைகளாக எண்ணப்பட்டு புறக்கணிக்கப்படலாகா. இந்தக் கருத்தில்தான் முறைசார் கல்வியும், முறைசாராக் கல்வியும் ஒரே நீரோட்டமாக இணைந்து அமைந்து கிராம வளர்ச்சியில் குறிக்கத் தக்க விளைவினை ஏற்படுத்தும் நாள் வரும் என்று நாம் நம்புவோமாக! அந்த நாள் மலரும் வரை பள்ளி, பல்கலைக் கழக அமைப்பினைச் சீரமைத்துப் பணிபுரிவதே நமது நோக்கமாக அமைய வேண்டும். அப்போதுதான் கிராம வளர்ச்சிக்குக் கல்விப் பணியும் குறிப்பிடத் தக்க பயனை நல்க முடியும்.

—தமிழாக்கம் : டாக்டர்
சி. பாலசுப்பிரமணியன்,
தமிழ்த் துறைத் தலைவர்,
சென்னைப் பல்கலைக் கழகம்.

கணிப்பொறி

டாக்டர் வி. சி. குழந்தைசாமி,

மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்.

வருங்கால வரலாற்றாசிரியர்கள், இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற சாதனை பற்றி எழுதும்பொழுது, அறிவியல் வல்லுநர்கள் அணுவைப் பிளந்ததையோ, அதன் ஆற்றலைப் பயன்படுத்தியதையோ, அல்லது விண்வெளிப் பயணத்தையோ, அதைத் தொடர்ந்து மனிதன் வெண்மதியில் கால் வைத்ததையோ, முதலிடம் கொடுத்து எழுத மாட்டார்கள். இவையனைத்திலும் மேலான, இன்னும் நாம் கற்பனை செய்யவோ, கணக்கிடவோ இயலாத பல விளைவுகளைத் தன்னுள் அடக்கியிருக்கும் கருவியான Computer எனப்படும் கணிப்பொறியினைக் கண்டு பிடித்ததைத்தான், இந்த நூற்றாண்டின் உன்னத சாதனையாக உறுதியாகக் கூறுவார்கள். அதற்குக் காரணம் என்னவெனில், மற்ற வெற்றிகள் மனிதனது சாதனைகளில் ஒரு மகத்தான முன்னேற்றத்தைக் காட்டுகிறது. ஆனால் கணிப்பொறி என்னும் கருவி, அவனுக்கு ஒரு புது சகாப்தத்தைப் படைத்துக் கொடுத்திருக்கிறது; கொடுக்க இருக்கிறது. விண்வெளிப் பயணம் ஒரு புதுச் சாதனை; கணிப்பான் கண்டு பிடிப்பு, ஒரு புது சகாப்தம்.

நீண்ட வாழ்க்கைப் பாதையில், முடிவில்லாத முன்னேற்றப் பயணத்தை மேற்கொண்டிருக்கும் மானுடம் தனது நாகரிக வளர்ச்சியில் இரு முக்கிய கட்டங்களைத் தாண்டி, இன்று மூன்றாவது கட்டத்தில் அடியெடுத்து வைத்திருக்கிறது. மனித சமுதாயத்தின் நாகரிக வளர்ச்சியின் முதற் கட்டம் வேளாண்மை நாகரிகம். இன்றிலிருந்து சுமார் 6,000 அல்லது 7,000 ஆண்டுகட்கு முன் தொடங்கிய அந்த நாகரிகம் வளர்ந்து, வாழ்ந்து, பரவி, பல பேரரசுகளைப் படைத்தது. அந்த நாகரிகத்தில் நிலமும், நீரும், செல்வங்களாக நின்றன.

சுமார் முந்நூறு ஆண்டுகட்கு முன்பு, இன்று நாம் பரவலாகக் காணும் தொழில் நாகரிகம் முகிழ்த்தது. இதில் நிலவளம், நீர்வளத்தோடு கனிவளம், எண்ணெய் வளம், மின் விசை ஆகியவற்றைக் காணவும் பயன்படுத்தவும் திறனும், கருவியும் கொண்ட சமுதாயங்கள் உயர்ந்தன. இன்று மனித சமுதாயம் அடியெடுத்து வைக்கும் புது யுகத்தை, அறிஞர்கள் 'கல்வியறிவு யுகம்' அல்லது 'கல்வியறிவுச் சகாப்தம்' (Knowledge era) என்று கூறுகிறார்கள். இந்த யுகத்தின் முக்கியமான வளம், முதன்மையான செல்வம் மனிதனது கல்வியறிவு. அவனது படைப்பாற்றல்: இதிற் சிறந்த மக்கள், மற்றப் பொருள் வளங்கள் அனைத்தையும் படைக்கலாம் என்ற நம்பிக்கையைத் தன்னுள் கொண்டது இந்தப் புதிய சகாப்தம். ஒவ்வொரு நாகரிகமும் உருவாவதற்கு, அடிப்படைக் காரணமாயிருந்தது அவ்வப்பொழுது மனிதன் படைத்த முக்கியமான கருவிகள். வேளாண்மை நாகரிகத்தை விளைவித்தது கலப்பை. தொழில் நாகரிகத்தைத் தோற்றுவித்தது (Steam Engine) எனப்படும் 'ஆவி விசைப் பொறி'. மூன்றாவது யுகமான அறிவு யுகத்திற்கு அடிகோலியது 'கணிப்பொறி' எனும் கருவி.

வேட்டையாடும் பருவத்திலிருந்து, படிப்படியாக வளர்ந்த மனிதன் எத்தனையோ கருவிகளைப் படைத்திருக்கிறான். எத்தனையோ பொறிகளைச் சமைத்திருக்கிறான். அவனது ஆராய்ச்சி உணர்விலும், படைப்பாற்றலிலும் உருவான விந்தைகள் எண்ணற்றவை. இவையனைத்தினின்றும் மாறுபட்ட படைப்பு கணிப்பான். இந்த வேற்றுமையைத் தெரிந்து கொள்வது அதன் முக்கியத்தை உணர்வதற்கு அடிப்படையாகும்.

இது வரை மனிதன் படைத்த பொறிகள் அனைத்தும், இயற்கைப் பொருள்களிலிருந்தும் 'வினை ஆற்றலை' ஒரு 'வகை'யிலிருந்து இன்னொரு 'வகைக்கு' மாற்றுவதற்குத்தான் பயன்படுத்தப்பட்டன. சான்றாக, நிலக்கரியிலிருக்கும் எரி ஆற்றலை மின் ஆற்றலாகவும், அதையே மீண்டும் பொறி ஆற்றலாகவும் மாற்றுவதைக் கூறலாம். அதைப் போல, பெட்ரோல் போன்ற எண்ணெய்ப் பொருள்களின் எரி ஆற்றலை, பொறி ஆற்றலாகவும், அதையே மீண்டும் மின் ஆற்றலாகவும் மாற்றுவதைக் கூறலாம். இதன் மூலம் மனிதன் தனது உடல்வலியையும், உடல் திறனையும் பன்மடங்கு வளர்த்துக்கொண்டான்.

கால்களின் மூலம் ஓடுவதை விடப் பன்மடங்கு வேகமாக நகரப் பலவகையான ஊர்திகளைப் படைத்தான். கண்ணால் காண்பதைவிடப் பன் மடங்கு தொலைவிலும், பன்மடங்கு நுண்மையானவற்றையும், பார்க்கும் ஆற்றலைத் தரும் கண்ணாடிக் கருவிகளைப் படைத்தான். கையால் தூக்குவதை விடப் பன்மடங்கு கனமான பொருள்களைக் கையாளத் தக்க பொறிகளைப் படைத்தான். இவையனைத்தும் அவனது தசை உறுப்புக்களின் வலியை மிகுத்தன. அவனது சிந்தனையின், பகுத்து ஆயும் அறிவின், வேலையில் துணை செய்யவோ, அவற்றின் கூறுபாடுகளை ஏற்றுக் கொள்ளவோ, ஏற்றம் செய்யவோ இந்தப் பொறிகள் திறனற்றன.

தனது பட்டறிவை, கல்வியறிவைப்பயன்படுத்தி, இடம், பொருள், காலத்திற்கேற்ப, முடிவு செய்யும் சிந்தனையின் பொறுப்பின் எந்தப் பகுதியையும், அவன் எந்த இயந்திரத்தினிடத்திலும் ஒப்படைக்க இயலவில்லை. எவ்வளவு எளிதான முடிவாயிருந்தாலும் அதை அவனேதான் செய்ய வேண்டியிருந் . இந்தப் பணியில், அவனது சி ,தனையின் வேகத்தை அதிகப் ப ்த்தவோ, தெளிவிற்கான பல வ கைச் சான்று களை அலசி ஆயும் வேகத்தை அதிகப்படுத்தவோ, அவன் நேற்று வரை எந்தப் பொறியையும் படைத்திருக்கவில்லை. அவனது அறிவுத் துறையில், சிந்தனைத் துறையில், முடிவு எடுக்கும் முக்கிய பணியில், வேகத்தையும், வினைத் திறனையும் பன்மடங்கு உயர்த்தும் வலிமை கொண்டதுதான் Computer எனப்படும் கணிப்பொறி. எனவேதான் இதன் படைப்பு, மனிதனது வாழ்க்கைப் பயணத்தில் ஒரு முக்கியமான, மகத்தான கட்டமாக இருக்கிறது.

இனி, கணிப் பொறியின் ஆற்றல் பற்றிப் பார்ப்போம். அது செய்யக் கூடியதெல்லாம், அடிப்படைக் கணித முறைகளான கூட்டல், கழித்தல், ஆகியன; அத்துடன் தன் முன் இருக்கும் இரு வழிகளிலிருந்து ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுப்பது. மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் இதில் அதிசயிக்கத் தக்கது

எதுவுமில்லை எனத் தோன்றும். உண்மைதான். ஆனால் இவற்றை, கணிப்பொறி மிக விரைவில் செய்யக்கூடும். எவ்வளவு விரைவில் என்பதற்குச் சில சான்றுகள் கூறுவது பொருத்தமாகும். மத்தியதரமான கணிப்பொறிகள் ஒரு நிமிடத்தில் 2 கோடி கூட்டல்களைப் போட முடியும். பெரியதான கணிப்பொறிகள் ஒரு நிமிடத்தில் 12 கோடி கூட்டல்கள் வரை கூடப் போட முடியும். இந்த இடத்தில் சற்றுச் சிந்தித்துப்பார்க்க வேண்டியது முக்கியம். கண் இமைக்கும் நேரத்தில், 20 இலட்சம் கூட்டல்கள்! கற்பனை செய்து பார்க்கக் கூட இயலவில்லை. இந்த வேகம், கணிப்பொறியின் முக்கியமான கூறுபாடு. அதன் வலிமையின் அடிப்படை. இந்த வேகத்தின் காரணமாக, இதற்குமுன் இயலாதது என்ற நிலையில் இருந்த பல செயல்கள் இன்று இயன்றவையாகிவிட்டன. அதன் இரண்டாவது முக்கியமான கூறுபாடு தனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் தகவலின் அடிப்படையில் ஒவ்வொரு கட்டத்திலும், இரண்டு சாத்தியமான வழிஅல்லதுமுறை, அல்லது பொருள்களில் ஒன்றைத் தேர்ந்தெடுப்பது. இந்தத் திறன் இருப்பதனால் முடிவுகள் எடுக்கும் பல பணிகளை மனிதன் இன்று கணிப்பொறியின் கையில் ஒப்படைக்க இயலுகிறது.

கணிப்பொறியின் ஆற்றலில் இரண்டு முக்கிய கூறுபாடுகளைப் பார்த்தோம். இனி இது எப்படி வேலை செய்கிறது என்பதையும் கொஞ்சம் தெரிந்து கொள்ள வேண்டும். கணிப்பொறியின் மொழி, எழுத்து வடிவில் அமைந்தது அல்ல. அடிப்படையில் அது எண் வடிவில் அமைந்தது. எண்ணும், சுழி (Zero) ஒன்று முதல் ஒன்பது ஆக பத்து எண்களைக் கொண்டதல்ல. சுழி, ஒன்று என்ற இரண்டுஎண்களைக் கொண்டது. இன்று நாம் எழுதும் இலட்சம், கோடி போன்ற தொகைகட்கு, பத்து எண்கள் வேண்டுமென்பது இன்றியமையாததல்ல. சுழி, ஒன்று என்ற இரண்டை வைத்துக் கொண்டே எவ்வளவு பெரிய தொகையையும் எழுதலாம். அதிக இடங்களைப் பயன்படுத்த வேண்டியிருக்கும்; அவ்வளவுதான். கணிப்பொறிக்குள் இந்த எண்ணும், நாம் எழுதும் வரி வடிவத்தில் இல்லை. ஒரு மின் விளக்கை எடுத்துக் கொள்வோம். அது எரியும் நிலையை ஒன்று என்றும், அணைந்த நிலையை சுழி என்றும் வைத்துக் கொண்டால் ஒரு மின் விளக்குத் தொகையின் அணைந்த அல்லது எரியும் நிலையைவைத்துக் கொண்டே, பல எண் தொகுப்புக்களை அமைத்து விடலாம். அதுபோன்று, மின் பாதை, அதாவது Electric Circuit எரிநிலை, அணைந்த நிலைதான் கணிப்பொறிக்கும் பயன்படுத்தப்படுவது. முறையே Yes, No அதாவது உண்டு, இல்லை என்ற நிலையாகவும் நாம் அதை எடுத்துக்கொள்ளலாம்.

கணிப்பொறியின் துணை கொண்டு பல சிக்கலான கணிதப் பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்றன. பல்வகையான அறிவியல், பொறியியல், வணிகம், நிர்வாகம், சமூக இயல் தொடர்பான செய்திகள், கணிப்பானின் துணை கொண்டு ஆராயப்படுகின்றன. இலக்கியம், கலை போன்ற துறைகளில் கூட அது பயன்படுத்தப்படுகிறது. ஆனால் இந்தத் துறைகள் அனைத்தைப் பற்றிய செய்திகளையும், சுழி, ஒன்று என்ற எண் வடிவில் மாற்றித்தான் கணிப்பான் அலசுகிறது; ஆராய்கிறது. எவ்வளவோ சிக்கலான எழுத்துவடிவில் இருக்கும் செய்திகளை, இரண்டு எண் வடிவில் மாற்றுவதும், மாற்ற இயலும் என்ற நிலையும் எண்ணி எண்ணி வியக்கத் தக்கன. அதேபோன்று, கணிப்பொறியில் செய்யப்படும் முடிவுகள் அனைத்தும் ஆம், இல்லை என்ற அடிப்படையில் அமைவதுதான். இந்த இரண்டு வகைப் பதில்களை வைத்துக் கொண்டே, எவ்வளவோ சிக்கலான பிரச்சினைகளையும் தீர்ப்பது இயலுகிறது.

எளிதில் நாம் தீர்க்க முடியாத பல கணிதப் பிரச்சினைகளைக் கணிப்பொறியைக் கொண்டு தீர்க்கிறோம். இங்கும் நாம் கவனிக்க வேண்டியது ஒன்று. கணிப்பொறி கூட்டல், கழித்தல் என்ற இரண்டு கணிதப் பணிகளைத் தவிர வேறு எதுவும் செய்ய இயலாதது என்பதாகும். எவ்வளவு பெரிய நிகரிகள் (Equations) அல்லது சமன்களைத் தீர்ப்பதானாலும், அந்த வழிவகையை வெறும் கூட்டல், கழித்தல் என்ற அடித் தளச் செய்முறைக்குக் கொண்டு வந்துதான் மேற்கொண்டு அந்தக் கணக்குகட்கு விடை காண வேண்டும். நுட்பமானதும், ஆழ்ந்து கற்றவர்கட்கே எளிதில் புரியாததுமான கணித முறைகளனைத்தையும், கூட்டல், கழித்தல் அடிப்படையில் கொண்டுவர முடியும் என்பதும் எண்ணி எண்ணி வியக்கத் தக்க ஒன்றாகும். மிக எளிய சான்றாக, இரண்டை எண்ணூறால் பெருக்குவதாக வைத்துக் கொள்வோம். கணிப்பொறி இரண்டை, எண்ணூறு முறை கூட்டி விடை கண்டுபிடிக்கும். நடுத்தரக் கணிப்பான்கூட, ஒரு வினாடியில் 3,50,000 கூட்டல் போட முடியுமாதலால், இதனால் எந்தக் கால விரையமும் ஏற்படுவதில்லை. இது போன்றே, மற்ற எல்லாக் கணிதச் செய்முறைகளுமாகும்.

இன்று மேலை நாடுகளில், கணிப்பான் பயன்படுத்தப்படாத துறையே இல்லை. குறிப்பிடத்தக்க ஒரு சிலவற்றை மட்டும் காண்போம். முதலாவதாக விண்வெளிப் பயணத்தை எடுத்துக் கொள்வோம். ஒரு



திரு. க. இராசாராம் அவர்கள், தமிழக அரசின் ‘ சிறப்புப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தில்லியில் தங்கியிருந்து மத்திய-மாநில உறவுகள் பற்றிய பணிகளைக் கவனிப்பார். இந்தப் பதவி, அமைச்சர் அந்தஸ்து உடையதாகும்.

மே 15-ஆம் நாள், திரு. க. இராசாராம் அவர்கள் இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

தில்லியில் தமிழக அரசுக்குச் சொந்தமான ‘தமிழ்நாடு இல்லம்’ கட்டடத்திலுள்ள அலுவலகத்திலிருந்து அவர் தமது பணிகளைக் கவனிப்பார்.

தமிழக அரசின் சிறப்புப் பிரதிநிதி

"மாணவர் சமுதாயத்திற்கு இன்றைய தினத்தில் மிகுந்த பொறுப்புள்ள இலட்சிய நோக்குகளும் குறிக்கோள்களும் தெளிவாக வரையறுக்கப்பட வேண்டும். அப்படி முடிவெடுக்கப்படுகின்ற இலட்சியங்கள் பொதுவாக மனிதனின் நல்வாழ்வுக்கு வித்திட வேண்டும். அவற்றை நிறைவேற்றும் பொழுது ஜாதி, மத வித்தியாச மனப்பான்மை தலையெடுக்கக் கூடாது.

"விலை மதிப்பில்லா மாணவப் பருவத்தில் படிப்பில் அக்கறை செலுத்த வேண்டும். படித்து முடித்தவுடன், ஏற்கனவே தெளிவு படுத்தப்பட்ட இலட்சியங்களை, கொள்கைகளை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுக்க வேண்டும். அம்முயற்சியில் எந்த விதமான வர்க்க பேதமும் தலையெடுக்கக் கூடாது. நம்முடன் இருக்கும் அனைவரையும் ஒரே குடும்பத்தில் உள்ளவரைப் போல, பாச உணர்வுடன் நடத்த வேண்டும்.

— [illegible], முதல்வர் அவர்கள், ஆற்றிய உரையிலிருந்து.

விண்கலம் செல்ல வேண்டிய பாதையை முன் கூட்டியே கணித்து வைத்திருக்கிறார்கள். அது செலுத்தப்பட்ட பின் அதன் பாதை கணக்கிட்டபடி இருக்கிறதா, என்பதைக் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் சரி பார்க்கிறார்கள். சரியில்லாவிட்டால், அதன் பாதையைத் திருத்துகிறார்கள். விண்கலம் ஓரிடத்தில் இருக்கும் பொழுது, அதன் வேகம், செல்லும் திசை, அங்கு உள்ள வெப்பநிலை அழுத்தம், ஆகிய விவரங்கள் கீழே அனுப்பப்படுகின்றன. இவற்றைப் பயன்படுத்தி, முன்பே அளிக்கப்பட்டு உள்ள சில கணிதச் சமன்பாடுகளைத் தீர்ப்பதன் மூலம் அடுத்த அரை மணி அல்லது ஒரு மணி நேரத்தில் விண்கலம் எங்கிருக்கும் என்பதை நிர்ணயிக்கிறார்கள். அப்படி நிச்சயிக்கப்பட்ட இடம், முன்பே வகுத்த பாதைக்குள் இருக்குமானால் திருத்து முயற்சிகள் தேவையில்லை. அப்படி இல்லாவிட்டால், உடனே அதன் பாதையைத் திருத்துவதற்கான முயற்சியை மேற்கொள்கிறார்கள். இதற்கான விடைகளைக் காண வேண்டிய கணிதச் சமன்பாடுகளை, கணிப்பொறியின் மூலம் தீர்க்கச் சில விநாடிகள் தேவை. மற்ற வழிகளில் தீர்க்கப் பல வாரங்கள் தேவை. அடுத்த அரை மணி நேரத்தில் தேவைப்படும் செய்தியை, அதற்குப்பின் பல நாட்கள் கழித்துப் பெறுவதனால் பயனில்லை. குறிப்பாகச் சொல்வதானால், கணிப்பொறி இல்லையானால் இன்றைய விண்வெளிப் பயணங்கள் இயலாதவையாகும்.

கணிப்பொறி பயன்படும் இன்னொரு முக்கியமான துறை, 'செய்தித் தொகுப்பும்', அதை எளிதில் பயன்படுத்தும் வகையுமாகும். இன்றைய உலகில் கல்வியறிவு, எண்ணிப் பார்க்கவும் இயலாத வேகத்தில் முன்னேறுகிறது. இன்று அறிவுத் துறையில் கிட்டத்தட்ட 1,00,000 பத்திரிகைகள் வெளியாகின்றன. இவற்றில் ஆண்டுதோறும் சராசரி 12,00,000 கட்டுரைகள் எழுதப்படுகின்றன. பல் துறைகளிலும் இன்று உருவாகும் புதிய கருத்துக்கள், புதிய உண்மைகள், கண்டுபிடிப்புகள் ஆகியவற்றைத் தொகுத்தால், ஆண்டு தோறும் அவை 6 கோடி பக்கங்களை நிரப்பும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இந்தக் கல்வியறிவின் தொகுப்பை எப்படி நிர்வகிப்பது, இவற்றைச் சீர்படுத்தி எப்படிப் பயன்படுத்துவது? வழக்கமான முறையில் ஏட்டுச் சுவடிகளில் எழுதி நிரப்பினால், அதைச் சேகரிப்பதும், சீர்மைப் படுத்துவதும், பாதுகாப்பதும், இவை யனைத்திலும் மேலாக, வேண்டும் பகுதியை உடனே எடுத்துப்பயன்படுத்துவதும் கடினமான வேலையாக வளர்ந்திருக்கிறது. இந்தப் பணிக்குக் கணிப்பொறி பெருந்துணை புரிகிறது. ஒரு வானொலிப் பெட்டி அளவிற்கு இருக்கும் இடத்தில், கணிப்பொறியில் கிட்டத்தட்ட 3,00,000 நூல்களில் இருக்கும் செய்திகளை அடக்கிவிட முடியும். இந்தச் செய்திகள் அனைத்தையும், முதலிலிருந்து கடைசி வரை துருவித் துழாவி, ஒரு குறிப்பிட்ட செய்தியை வெளிக் கொணர, கணிப்பொறிக்குத் தேவைப்படும் காலமும் மிகக் குறைவு.

இன்று ஒரு நாட்டின் தற்காப்பை, பாதுகாப்பை எடுத்துக் கொள்வோம். இரு பெரு வல்லரசுகளான அமெரிக்கா, ரஷியா இரண்டும் இன்று ஏராளமான போர்ச் சாதனங்களைக் குவித்து வைத்திருக்கின்றன. ஒவ்வொரு நாடும் மற்றொரு நாட்டை ஒரு முறை அல்ல பல முறை அழித்து விடக்கூடிய அளவிற்கு ஆயுத வலிமை பெற்றிருக்கிறது. இந்த நிலையில், ஒரு நாட்டின் வெற்றி தோல்வி எதைப் பொறுத்தது? ஆயுதங்களைக் கையாளும் முறை, நேரம், இடம் ஆகியவற்றைப் பொறுத்திருக்கிறது. எந்த நாடு முதலில் தாக்குகிறதோ, அந்த நாட்டிற்குச் சாதகமான ஆரம்பம் கிடைத்து விடுகிறது. தான் தாக்கப்பட்டதை அறிந்த பிறகு, தாக்கப்பட்ட நாட்டின் தலைவரும், தளபதிகளும் கூட்டம் கூட்டி, எதிர் நடவடிக்கையைப் பற்றி ஆராயத் தொடங்குவார்களானால், அவர்கள் ஒரு முடிவுக்கு வருமுன்பே நாடு முழுவதும் எதிரிகளால் அழிக்கப்பட்டுவிடும். எதிர்த் தாக்குதலுக்கு ஆபத்து நேரம், இப்பொழுது 15 நிமிடங்கள்தான். இதற்குள், தற்காப்பு முயற்சிகளுக்கான அத்தனை நடவடிக்கைகளையும் உள்நாட்டில் மட்டுமின்றி உலக முழுவதும், தங்களது படைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் தளங்கள் அத்தனைக்கும், தாக்கீதுகள் அனுப்பியாக வேண்டும். இதை வழக்கமான முறைகளில் செய்ய இயலாது. இன்று, இதற்கான விரிவான ஆணைகள் அனைத்தும் கணிப்பொறியின் நினைவு இருப்பில் ஒரு 'Programme' அதாவது 'வழிப்படுத்தும் வகை முறை' வழியாக வைக்கப்பட்டிருக்கிறது. இந்த இடத்தில் இம்மாதிரியான தாக்குதல் நடந்திருக்கிறது என்ற செய்தி கணிப்பானுக்குள் அனுப்பிய விநாடியே. அதிலிருந்து விரிவான, விவரமான உத்தரவுகள், முன்பே குறிப்பிட்டு வைத்திருக்கிறபடி எல்லாத் தளங்களுக்கும் சென்று விடும்.

கணிப்பொறி கண்டு பிடிக்கப் பட்டு இன்னும் 30 ஆண்டுகள் முடியவில்லை. தனது இளமைப் பருவத்தில் இருக்கும் கண்டு பிடிப்பு ஆகும். இன்று அது பயன் படுத்தப்படாத துறைகளே இல்லை. தான் தொட்ட துறைகள் அனைத்தையும், பன்மடங்கு புதுமையும், பொலிவும் பெறச் செய்திருக்கிறது. இந்தக் கருவி பல புதுத் துறைகளைப் படைத்திருக்கிறது. அறிவுலகிலும், மனிதனது சாதனைகளிலும் பல புரட்சிகட்கு இந்தக் குறுகிய காலத்தில் இக்கருவி வித்திட்டிருக்கிறது. இதன் பயனின் தொடக்கத்தைத்தான் நாம் இன்று காண்கிறோம். அதன் முழு விளைவுகளும் காலத்தின் கருவில் இருக்கின்றன. மனிதனின் அறிவுக்கும், ஆசைக்கும் எட்டாதவை, இயலாதவை என்று இருந்த பலவற்றை அவனது கைக்குள் கொண்டு தரும் ஆற்றல் நிறைந்த காமதேனு இக்கணிப்பொறி.

பள்ளிக் குழந்தைகளின் உடல் நலப் பிரச்சினைகள்

டாக்டர் எச். எஸ். எஸ். லாரன்ஸ்,
பள்ளிக் கல்வி இயக்குநர்.

நல்ல உடல் நலமும், நல்ல கல்வியும் நெருங்கிய தொடர்பு உடையன. அவை பிரிக்க முடியாதன. உடல் நலத்தை இழந்தால் மனநிலையை இழக்க நேரிடும். கடைசியில் எல்லாவற்றையும் இழக்க நேரிடும்.

வளரும் நாடுகளில் ஒவ்வோர் ஆண்டும் பிறக்கும் 8 கோடி குழந்தைகள், நோய்க்கான பாதுகாப்பினைப் பெறுவதில்லை. வளரும் நாடுகளில், ஐந்து வயதுக்குக் குறைவான குழந்தைகளில், 97 சதவீதத்திற்கும் மேலானவர்கள் உடல்நலக் குறைவினால் பாதிக்கப்படுகின்றனர். அறியாமை, மூட நம்பிக்கை, வதந்தி, ஐயம் ஆகியவைதான், இன்றைய சத்துணவின்மைக்குக் காரணங்கள் என்பது, ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மையாகும். இத்துன்பங்களை, அறவே நீக்க, கல்விதான் சிறந்த வழியாகும். சத்துணவும், உடல்நலக் கல்வியும் நெருங்கிய தொடர்புடையன. செல்வம் கொழிக்கும் நாடுகளில், 97 சதவீதக் குழந்தைகள், நோய்த் தடுப்பு வசதிகளைப் பெற்று, அதன் விளைவாகப் பலவிதமான தொற்று நோய்களினின்று காப்பாற்றப்படுகிறார்கள். ஆனால், நம் நாட்டைப் போன்ற வளர்ந்து வரும் நாடுகளில், 10 சதவீதக் குழந்தைகள் கூட உடல் நலப் பணியாளர்களால் பார்க்கப்படுவதில்லை.

சத்துணவும் உடல்நலக் கல்வியும் :
(Nutrition and Health Education)

பள்ளியில் சேர்வதற்கு முன்பும், பள்ளியில் சேர்ந்த பிறகும் சத்துணவும், உடல்நலக் கல்வியும் இன்றியமையாதன. வாழ்க்கையின் தொடக்கத்திலேயே சரியான உடல்நலப் பழக்கங்களை ஏற்படுத்துவது மிகவும் நன்று.

நல்ல உடல் நலம், சத்துணவு ஆகியவற்றைப் பற்றிய அறிவை, குழந்தைகளுக்குப் புகட்டுவது அவசியமாகும். சரியான வழியைப் பின்பற்றுவதன் வாயிலாகத்தான், நல்லதொரு தேசிய வளர்ச்சியை நிர்மாணிக்க முடியும். குழந்தைகளிடையே, தகுந்த நேரத்தில், நோய்த் தடுப்பைப் பற்றித் தகுந்த கவனம் எடுத்துக்கொண்டால், வளர்ந்தவர்களிடையே ஏற்படும் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காண இயலும்.

கல்வித் துறையும் உடல்நலத் துறையும் :
(Education & Health Departments)

நம் நாட்டில், உடல் நலமுள்ள சமுதாயத்தை உருவாக்க, கல்வித் துறையும், உடல் நலத் துறையும் ஒத்துழைப்பது இன்றியமையாததாகும். டாக்டர் கில்பார்ட்ரிக் கல்வியும் சோப்பும் மிகச் சிறந்த ஆயுதங்கள் எனக் கூறியுள்ளார். நம் சமுதாயத்தில், சிறந்த உடல் நல மாற்றத்தை ஏற்படுத்த, இவ்விரு துறைகளும் இணைந்து மிகச் சிறந்த கருவிகளாகச் செயல்பட வேண்டும். பள்ளிச் சிறுவர்களுக்கு, ஆசிரியர்களும், உடல் நலத் துறையினரும் ஆற்றும் தொண்டுகள், வருங்காலத்தில் மிகச் சிறந்த பயனை நல்கும். கிராமங்களிலுள்ள பெற்றோர்கள், குழந்தைகள் வாயிலாகச் சிறந்த உடல் நலப் பழக்கங்களை அறிந்து கொள்வர். குழந்தைகளின் உடல் நலம், துப்புரவு தங்கள் பாதுகாப்பிலுள்ள குழந்தைகளிடையே காணப்படும், டிப்தீரியா, டெட்டனஸ், கக்குவான் இருமல், காச நோய், இளம் பிள்ளை வாதம், மற்றும் சத்துணவுக் குறைவினால் ஏற்படும் நோய்கள் ஆகியவற்றைத் தவிர்க்கலாம். குழந்தைகளிடையே, இத்தகைய நோய்கள் ஏற்படாமல் தடுப்பதற்கான, வழிமுறைகளைத் தகுந்த நேரத்தில், ஆசிரியர்கள், பெற்றோர்களிடம் கூற வேண்டும். ஆசிரியர்கள் ஒற்றுமையுடனும், உடல்நல ஊழியர்களின் ஒத்துழைப்புடனும், பேச்சுகள், படங்கள், விவாதங்கள் ஆகியவற்றின் வாயிலாகக் கிராமங்களிலும் நகரங்களிலும் சிறந்த ஆகியவற்றில், பெற்றோர்கள் உதவ, இது வழி வகுக்கும்.

ஆசிரியர் விழிப்புடன் இருத்தல் :
(Teachers to be Vigilant)

பள்ளிக் குழந்தைகளின் உடல் நலத்தைப் பேணுவதில், ஆசிரியர்கள் மிக்க விழிப்புடன் இருத்தல் வேண்டும். ஆசிரியர்கள், உடல்நலப் பழக்கங்கள் ஏற்பட திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். கண்காட்சி வாயிலாக நோய்களின் காரணங்களையும், அவற்றைத் தடுக்கும் வழிகளையும் காட்டுதல் வேண்டும். குழந்தைகளுக்கு வழிகாட்டும் மருத்துவ மனைகள் பெருகவும், அவற்றின் வாயிலாகக் குழந்தைகளின் மனக் கோளாறுகள் நீங்கவும், ஆசிரியர்கள் தகுந்த நடவடிக்கைகளை

மேற்கொள்ள வேண்டும். பெற்றோரிடையே நிலவும் சில மூட நம்பிக்கைகளையும், தவறான நம்பிக்கைகளையும் களைவதற்கான திட்டங்களை ஆசிரியர்கள் மேற்கொள்ளுதல் வேண்டும். சிறந்த அறிஞரும், குற்றம் காண்பவருமான பெர்னாட் ஷா அவர்களே, ''அம்மை குத்துதல் போன்ற தடுப்பு முறைகள் அரைக் காட்டுமிராண்டித்தனமான சடங்கு'' என்று கூறியிருக்கிறார். அதனால், நோய்களுக்கான காரணங்களைத் தடுப்பதும், சிறந்த உடல் நலப் பழக்கங்களை ஏற்படுத்துவதும், சுற்றுப்புறத் துப்புரவைக் கவனிப்பதும், ஆசிரியர்களுடைய பொறுப்பாகும். மேலும் ஆசிரியர்கள் வரைபடங்கள், கற்பித்தல் கருவிகள் ஆகியவற்றின் வாயிலாகக் குழந்தைகளுக்கு, நல்ல உடல் நலப் பழக்கங்களை ஊட்டுதல் வேண்டும். அம்மை குத்துதல் வாயிலாகப் பெரியம்மை தடுப்புப் பற்றிய விவரங்கள் அடங்கிய வரைபடங்களைக் காட்டி, பெற்றோர்களும் மாணவர்களும் நன்மை பெறச் செய்ய வேண்டும்.

கிராம ஏற்புத் திட்டம் :
(Village Adoption Scheme)

மாணவர்களும், ஆசிரியர்களும், கிராம ஏற்புத் திட்டத்தின் வாயிலாகச் சில குறிப்பிட்ட கிராமங்களை ஏற்றுக்கொண்டு, படிக்காத பெற்றோர்கள், மற்றும் பொது மக்கள் ஆகியோருக்குக் குழந்தைகள் நோய்களைப் பற்றி விவரித்தல் வேண்டும். அதனால், குழந்தைகளின் இறப்பு விகிதத்தைக் குறைத்து, உடல் நலமிக்க சமுதாயத்தை உருவாக்கலாம்.

ஆசிரியர் செயல்கள் :
(Teacher's Activities)

ஆசிரியர்கள் கீழ்க்கண்டவற்றில் சிறப்பாகப் பணிபுரிந்தால் குழந்தைகள்பால் விரும்பத்தக்க விளைவுகளை ஏற்படுத்த இயலும்:

1. நோக்கமுள்ள பள்ளி மதிய உணவுத் திட்டம்.

2. பள்ளி உடல்நலக் குழுவை அமைத்தல்.

3. தானாக முன்வந்து உதவும், மருத்துவர்களின் உதவியுடன் பள்ளியில் மருத்துவச்சோதனைக்கு ஏற்பாடு செய்தல்.

4. மருத்துவச் சோதனையின் குறிப்புகளைப் பெற்றோர்களுக்கு அனுப்பி, பின் விளைவுகளைத் தவிர்த்தல்.

5. பெற்றோர்—ஆசிரியர் சங்கங்களில், உடல்நலக் கல்வி பற்றிய கல்வித் துணைப் பொருள்களைப் பயன்படுத்தல்.

6. தொற்று நோய்களைத் தடுக்க, பருவ முறையில் அம்மை குத்தவும், ஊசி குத்தவும் ஏற்பாடு செய்தல்.

7. பள்ளிகளில் காய்கறித் தோட்டம் அமைத்தல்.

8. தானாக முன்வந்து உதவுபவர்களின் உதவியுடன், கழிவிடங்களைப் பள்ளியில் அமைத்தல்.

9. போதிய அளவு உடற்பயிற்சிக்குப் பள்ளியில் வசதி ஏற்படுத்துதல்.

10. குழந்தைகளின் கண்களையும் பற்களையும், கவனித்துப் பாதுகாத்தல்.

11. சுற்றுப்புற ஆரோக்கியம், நல்ல உடல் நலப் பழக்கங்கள் ஆகியவற்றைப் பற்றிய அறிவை வளர்த்தல்.

12. பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்க, வழி செய்தல்.

நடத்தையில் மாறுதல் :
(Change in Behaviour)

நடத்தையில் நல்ல மாறுதல் ஏற்படுத்துவதே கல்வியின் நோக்கமாக இருத்தல் வேண்டும். மாணவர்களின் உடல்நலத்தைப் பேணுவதால், இதனை அடைய முடியும். முன்னோடித் திட்டமாக, கோயம்புத்தூர் மாவட்டத்தில், 10 பிளாக்குகளில் (Blocks) அமைந்துள்ள 660 பள்ளிகளிலுள்ள 3,461 ஆசிரியர்கட்கு சத்துணவுக் கல்வி, அமைக்கப்பட்டுள்ளது. இப்புத்துணர்வுப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், கற்பிக்கும் கிராமங்களில், சிறந்த விளைவுகள் ஏற்பட்டிருப்பதைக் காண முடிகிறது. அனைத்து இந்திய பல் மருத்துவர் சங்கத்தின் உதவியுடன் இவ்வாண்டு சென்னையிலுள்ள தொடக்கப் பள்ளிகளில் பயிலும் ஓர் இலட்சம் மாணவர்களுக்குப் பற்களின் பாதுகாப்புப் பற்றிக் கற்பிக்கப்படுகின்றது. பிற்காலத்தில் ஏற்படும், பல் நோய்களைத் தடுக்க இது உதவும். திருநெல்வேலி மாவட்டத்தில், உடல்நலக் கல்வி பற்றிப் பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பயிற்சியுடன் வழிகாட்டும் திட்டங்கள் பல, சோதனை முகத்தான் மேற்கொள்ள இருக்கின்றோம். இதனால், தொடக்கத்திலேயே தொற்றுநோய்களைத் தடுக்க இயலும்.

அறிவு நிறைந்த ஆசிரியர்கள் :
(Teacher knowledge)

சிறந்த உடல் நலப் பழக்கங்கள், சுகாதாரம் ஆகியவற்றைப் பற்றிய அறிவு நிறைந்த ஆசிரியர்களாலேயே, குழந்தைகளின் தொடக்க நிலையில், சூழ்நிலைக்கு ஏற்ப நடத்தை மாறுதல்களை உருவாக்க முடியும். சுற்றுப்புறச் சுகாதாரம் முக்கியமானது. சிறந்த உடல் நலப் பழக்கங்களோடு தொடர்புடையது. குழந்தைகளுக்கும், பெற்றோர்களுக்கும் இதைப் பற்றிக் கற்பித்தல் வாயிலாகப் பல தொற்றுநோய்களைத் தவிர்க்க இயலும். கிராமங்களிலும், நகரங்களிலும் இது முக்கிய பிரச்சினையாகும். தொடக்க நிலையில் அளிக்கப்படும் சிறந்த உடல் நலக் கல்விதான், சத்துணவுக் குறைவு மற்றும் சுகாதாரமின்மை ஆகியவற்றால் குழந்தைகளிடையே ஏற்படும் பல உடல்நலப் பிரச்சினைகளைத் தவிர்க்க உதவும். இவை பற்றிய நவீன அறிவை ஆசிரியர்கள் பணியிடைப் பயிற்சிகள் மூலம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

சென்னையிலுள்ள குழந்தைகள் உடல் நல நிறுவனம், குழந்தைகள் மருத்துவமனை, மாநிலக் கல்வி ஆராய்ச்சிப் பயிற்சிக் குழு ஆகியவற்றின் ஒன்றுபட்ட முயற்சியுடன், தொடங்கப்பெற்ற, ''ஆசிரியர்கட்கான பள்ளிக் குழந்தைகள் உடல்நலப் பிரச்சினைகள்'' என்ற இப்புத்துணர்வு வகுப்பு மிகப் பெரிய வெற்றி பெற விழைகின்றேன். நம் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இத்தகைய பயிற்சி வகுப்புகள் தொடங்கப் பெறின், நம் மாநில வருங்கால மக்களின் உடல், உள்ளம் சிறந்த முறையில் உருவாக்கப் பெறும் என்பதில் எனக்கு மிகுந்த நம்பிக்கையுண்டு. நம் இளம் தலைமுறையினரிடையே, சிறந்த உள்ளமும் உடலும் உருவாக உதவ வேண்டும். மேலும் பள்ளிகளில் சிறந்த, இணக்கமான சூழ்நிலை உருவாக முயற்சிக்க வேண்டுமென விழைகின்றேன்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002